THE PRESIDENTIAL ADDRESS

DELIVERED

By

AYURVEDA BHUSHAN

Pandit M. DURAISWAMI AIYANGAR, A.V.S.

Ayurvedacharya

(Madras.)


AT

The 6th DRAVIDA VAIDYA CONFERENCE

HELD AT

TRICHINOPOLY.

(28th May, 1934)



ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106
TAMILNADU • INDIA

ஸ்ரீ

ஆறுவது திராவிட வைத்திய மஹாஜன மஹாநாடு.

திருச்சிராப்பள்ளி (28-5-34)

ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேதாசார்ய அவர்களுடைய

அக்கிராஸநப் பிரஸங்கம்.

மத்யேமருத்வ்ருதாத்வீபம் லோகாதங்க நிவ்ருத்தயே|
தன்வந்தரிம் புரஸ்க்ருத்ய ஸ்திதம் ரங்கேச மாச்ரயே||

அயம் பிஷக்ப்ய: பூர்வேப்யஸ் ஸாதரம் க்ரியதேஞ்ஜலி:|
யே லோகே வைத்யவித்யார்கஸ்யாபவந்நுதயாத்ரய:||

பாரதம் விஹதபாதமேததாம் பார்தீயமபி பாது பேஷஜம்|
சாஸ்த்ரரூடமதயோகதங்காஸ் ஸந்து சாந்தகலஹாஸ் ஸுகைகஷிணை:||

முன்னுரை.

நண்பர்களே, நாட்டில் அறிவிற் பெயர்போன பெரியோர் பலரிருக்க, இம்மஹாநாட்டுக்கு என்னை அக்கிராஸனம் வஹிக்கத் தேர்ந்தெடுத்து இக்களிரவம் எனக்கு அளித்துத் தமது விச்வாஸத்தை விளக்கியதற்காக நான் இச்சபையோருக்கு ஸம்பிரதாயப்படி நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்காலம் தமிழ்நாட்டுத் தலைநகரம்போல் விளங்கும் இத்திருச்சிபாகரில் திராவிடவைத்திய மண்டலத்தின் இம்மஹாநாடு கூடுவதில் என்போன்றவருக்கு இயல்பாகவே தோன்றக் கூடிய விசேஷத்தைப்

பற்றி எனது பிரஸங்கத்தின் முன்னுரையிற் சிறிது மொழிந்திடுவது பொருத்தமாம். நமது மாகாணத்தில் சென்னைக்கு அடுத்தபடியாக நாகரிகம் வாய்ந்த ஜனங்களின் ஸங்கியையாலும், பல திசைகளிலும் பிரிந்தோடும் இருப்புப் பாதைகளின் காரியாலயத்திற்கு இருப்பிடமாய் அமைந்திருப்பதினாலும், கலாவல்லவர் நிரப்பிய பிரபலமான கல்விச் சாலைகளாலும், வாணிபத்தில் ஈடுபட்டவர்கள் அடைந்து வரும் விருத்தியாலும் சிவ-விஷ்ணுஸ்தலங்களுக்கெல்லாம் சிகரம்போன்றுள்ளது என்னும் சிறப்பாலும், அருகில் இரு பிரிவுகளாகப் பிரிந்தோடும் புண்ணிய நதியான காவிரியின் காட்சியினாலும், தாயுமானருடைய திவ்யஸ்தலமென்கிற பெருமையினாலும் இம்மாநகரம் மாகாணத்திற்கே மகுடம்போன்றதெனக் கூறுவது அதிசயோக்தி யாகாது. ஸ்ரீ ரங்கநாதனுடைய இடைவிடா கருணைப் பிரவாஹமெனக் கூடிய காவிரியின் நீர்ப்பெருக்கால் ஜனங்களுடைய ஆரோக்கியமும் சுகமும் அப்பெருமானால் ஒரு புறம் காக்கப்பட்டுவர, மற்றொரு புறம் ஜனங்கள் ஒருக்கால் நோய் வாய்ப்படும்போது அவர்களை அக்கஷ்டத்தினின்றும் அப்பெருமான் கரையேற்றிவைக்கக் கருதியவர்போல் தன் அம்சாவதாரமான தன்வந்தரிபகவானைத் தன் கோயிலிலேயே எப்பொழுதும் எதிரில் வீற்றிருக்கச் செய்துள்ள இவ்வபூர்வமான திருக்கோலம் வேறெங்கேனும் காணக்கிடைக்குமோ ? மேலும் சரியாக இருபது ஆண்டுகளுக்கு முன்பு, இங்கு ஸ்ரீரங்கத்தில் தைவபக்தியில் தோர்ந்து எனக்கு அத்யந்த ஆப்தராயுள்ள தேசபூஷணம் ஆர். கே. ஸ்ரீனிவாஸ வெங்கடேச ராவ் அவர்கள் ஆயுர்வேதத்திலுள்ள அஸாதாரண சிரத்தையினால் ஓர் ஆயுர்வேத வைத்தியசாலையை ஸ்தாபிக்க, அதைத் திறந்து வைக்கும் திருநாளை நிறைவேற்றியது எனது காலஞ் சென்ற வைத்திய குருவான வைத்திய ரத்தினம் பண்டித டி. கோபாலாசார்லு அவர்கள் என்பதையும் இங்குள்ளோருக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். சென்னை ஆயுர்வேத கலாசாலையிற் பயிற்சி பெற்று யோக்கியதா பத்திரம் பெற்ற பிறகு, 1908 இல் நான் இங்ஙகரத்தில்தான் முதன்

முதல் வந்து வைத்தியத்தொழிலை ஆரம்பித்து நடத்தினேன் என்பதும் இங்கு விஜயம் செய்துள்ள சிலருக்கேனும் ஞாபகத்திலிருக்கக் கூடும். இத்யாதி ஸந்தர்ப்பங்களை யோசிக்குமிடத்து இவ்வைத்திய மஹாநாடு இவ்விடத்தில் நடைபெறுவதும், மூன்றுவருட காலம் முன்பு நான் வஹித்துத் தொழில் நடத்தின நகரம் என்கிற நட்பையும் இச்சபையோரின் ஆதரவையும் சிரங்கொண்டு மதித்து இவ்வக்கிராஸன பதவியை நான் ஏற்று வந்ததும் முற்றிலும் பொருத்தமாயிருப்பதைக் குறிப்பிடவே இந்த அவதாரிகையை ஆரம்பித்தேன்.

காலகதி யடைந்தவருக்கு அனுதாபம்.

மேல் விஷயங்களில் எனது பிரஸங்கம் தொடர்ந்து போவதற்கு முன்பு, காலஞ்சென்ற வைத்தியப் பிரமுகர்களைப் பற்றி உபசாரமொழி கொண்டு பிரஸ்தாபிப்பது வழக்கமாகையால், இச்சந்தர்ப்பத்தில் அகாலமரணத்திற்கு ஆளான டாக்டர் எஸ். ரங்காசாரியாருக்காக நம் துயரத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர் ஆயுர்வேதத்தில் ஆதரவுகாட்டாது ஆங்கிலவைத்தியத்திலேயே ஆழ்ந்து, அதில் பிடிவாதமான அபிமானமும் நாட்டமும் வைத்தவராயிருந்து வந்தாலும், அநேக ஸமயங்களில் எங்கேனும் ஒருவருக்கொருவர் ஸந்திக்கும்போது என்போன்றவரோடு நட்பு காட்டி நயமாகப் பேசுவர். ஆபிரக்கணக்கான ஜனங்களுக்கு அவர் தம் தொழில் முறையில் களங்கபடின்றி கருணை காட்டி உதவி வந்தவர். சென்னையில் முன்பு ஆயுர்வேத வைத்தியத்திற்கு ஆருயிராய் பண்டித கோபாலாசார்லு இருந்துவந்ததுபோல், மேனாட்டு வைத்திய முறையில் டாக்டர் ரங்காசாரியாரும் இணையற்றவராயிருந்து இறந்துவிட்டார். அன்னார் அடைந்த பெரும் புகழுக்கும், ஜனங்கள் அவர்களிடம் விச்வாஸம் வைத்ததற்கும் அவர்களுடைய சாஸ்திர அறிவும், ஊக்கங்குன்றாத உழைப்புமேயாகையால், நமது கற்றறிந்த வைத்தியர்களும் தமது நிஷ்கபடமான உழைப்பு விஷயத்தில் அவர்க

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ளைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் அடைந்த புகழைக் கண்டு பொறுமையுறுமல், அவர்கள் ஏற்றுவந்த உழைப்பைக் கண்டு பொறுமை கொண்டால் எவரும் அவர்களைப் போல் முன்னேற்றமடையலாம். "ஹேதாஷீர் ஷ்யேத் பலே நர." பூதவுடலை விடுத்துச் சூக்ஷ்ம சரீரமடைந்த அவரது ஆத்மா சாந்தியடையுமாக.

மஹா நாடு

இச்சபையோரது உத்ஸாஹமொழிகள், உண்மையில் எனக்கு ஊக்கம் அளிக்கின்றது. சரகாதி ஸம்ஹிதைகள் ஏற்படுவதற்கு முன்புகூட, அவ்வளவு பண்டைக்காலத்தில் நமது கூடஸ்த்தர்களான முனிவர்கள் நூற்றுக்கணக்கான பேர் ஹிமாலயம், நைமிசாரண்யம் முதலிய பிரதேசங்களில் சாஸ்திரவிசாரம் செய்யக் கூடி, லோகஹிதமான அநேகம் விஷயங்களைத் தீர்மானித்ததாக நமது பிராசீன கிரந்தங்களில் பிரமாணங்கள் காணப்படுகின்றன. "விக்நீ பூதா யதா ரோகா: ப்ராதுர்ப்பூதாச் சரீரிணாம். தபோப வாஸாத்யயாத ப்ரஹ்மசர்யவ்ரதாயுஷாம். ததா பூதேஷ்வ றுக்ரோசம் புரஸ்க்ருத்ய மஹர்ஷய:. ஸமேதா: புண்யகர் மாண: பார்ச்வே ஹிமவதச் சுபே"—"மனிதருடைய தவம், படிப்பு, விரதம், ஆயுள் முதலியவற்றிற்கு இடையூறுகப் பிணிகள் தோன்றிவிட்டதைக் கண்ட புண்ணியசீலர்களான மஹரிஷிகள் ஜீவகோடிகளிடம் இரக்கங்கொண்டு இமாலய அடிவாரத்தில் அதற்குப் பரிஹாரம் செய்யும் விஷயங்களை ஆலோசிப்பதற்காகச் சபை கூடினர்கள்" என்றும், அப்பொழுது அங்கிரஸ், ஜமதக்நி, காச்யபர், ப்ருகு, அகஸ்தியர், புலஸ்தியர், ஆத்ரேயர், கௌதமர், அஸிதர், வாமதேவர், ஆச்வலாயநர் முதலிய முனிசிரேஷ்டர்கள் (இவ்வாறு அறுபது ருஷிகளின் பெயர்களும், அவர்களைத்தவிர வேறு வாலகில்யர்கள், வைகாநஸர்கள், ப்ரஹ்மஞ்ஞானத்திற்கு நிதிகளான இன்னும் அநேகம் ருஷிகள் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது) ஸதஸ்ஸாகக் கூடி விஷய விசாரங்களைச் செய்து, தத்துவ நிர்ணயம் பண்ணதாகச் சரக

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஸம்ஹிதையில் அநேக அத்தியாயங்களில் வர்ணிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால், இக்காலத்தில் இதுபோன்ற ஸபைகளைக் கூட்டி நற்காரியம் செய்வதாக எண்ணுவது ஒரு பெரிதல்ல. அமாநுஷப் பிரபாவம் வாய்ந்திருந்த அம்முனிவர்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்க அஜ-கஜாந்தரம் இருந்த போதிலும், இரத்தினத்தைத் தூளாத்து உட்செல்ல நூலுக்கு முற்றிலும் திரமில்லை யென்றாலும், முதலில் வஜ்ரத்தினால் அம்மணியில் இடப்பெற்ற த்வாரத்தினூடே புகுந்து செல்ல அப்பால் அதற்கு வழியேற்படுவது போலே (மணௌ வஜ்ரஸமுத்கீர்ணே ஸூத்ரஸ்யேவாஸ்தி மே கதி:) அம்மஹாநுபாவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாமும் நம் சக்திக்கியன்றவளவு சாஸ்திராபிவ்ருத்தி விஷயத்தில் சிறிதேனும் முயற்சிப் போமாக.

அகில வைத்திய முறைகளுக்கும்
ஆயுர்வேதமே ஆதாரம்.

பண்டைக் காலந்தொட்டு இப்பரத நாடு பலவித சாஸ்திரங்களுக்கும் கலைகளுக்கும் ஊற்றுநிலமாயிருந்து உஜ்ஜ்வலித்ததென்னும் உண்மையை உணரும்போது நம துள்ளம் பெருமையினால் பூரிக்கின்றதல்லவா? பல யுகங்களாக, அல்லது ப்ரம்ம ஸ்ருஷ்டி முதற்கொண்டே பாரத தேசம் ஸகல வித்யைகளுக்கும் பிறப்பிடம் என்னும் உண்மையை "பாரதீ" என்கிற சொல் ஸ்பஷ்டமாகக் குறிப்பிடுவதாக நான் முன்னொரு ஸந்தர்ப்பத்தில் சென்னை ஸம்ஸ்க்ருத சபையில் மொழிந்தபோது அனைவரும் அதை ஆமோதித்தனர். இப்பரதகண்டம் அநாகரிகமென்பதை அறியாது ஞானச்சுடரால் உலகத்திற் கெல்லாம் தீபமெனக் கூடிய நிலைமையில் பிரகாசித்திருக்கையில், பிற நாடுகளில் மானிடர் மானங்காக்கவும் தெரியாது நடமாடியதாக இக்காலத்திய சரித்திரவல்லோரே கூறுகின்றனர். பிற நாட்டார் கிரமமாகப் பகுத்தறிவையும், நாடு நகரங்களில் வாழ்வதற்கான வழக்கங்களையும் பெற்ற பிறகு, இந்நாட்டிற்குப் படை

பெடுத்தும் வேறு முறையிலும் வந்து, இங்கிருந்த நாகரிகத்தையும், நாநாவிதமான சாஸ்திரப் பயிற்சியையும் நேரிற் பார்த்து, அவற்றைக் கையாளவும், தம் தேசங்களுக்கு அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளவும் முயன்றனரென்றல், மானிடத்தன்மைக்கு அது முற்றிலும் இயல்பு. கேவலம் வாக்கு வல்லமையைக் காட்டி வாதம் புரியவே உரித்தான தர்க்க-வியாகரணாதி சாஸ்திரங்களினும் உயிரைக் காத்து உத்தமலோகோபகாரம் புரிய இன்றியமையாதது வைத்திய சாஸ்திரமாகையால், பிற நாட்டார் ஆதியில் இத்தேசத்திற்கு வருகையில், இச் சாஸ்திரத்தின் மேலேயே அவர்களுக்கு அளவிறந்த நாட்டம் ஏற்பட்டது. அவர்களிற் சிலர் இங்கு வழங்கிவந்த சிறந்த வைத்திய முறைகளிற் பலவற்றைக் கற்றறிந்ததுடன், திறமையுள்ள சில வைத்தியர்களையும், உயர்ந்த வைத்திய நூல்களையும் தம் நாட்டிற் பயன்படுத்திக் கொள்வதற்காகக் கொண்டு போயினர் என்பதற்குச் சரித்திர பூர்வகமாக அத்தாட்சிகள் அநேகம் உண்டு.

டாக்டர் A.F.R. ஹோர்ன்ல், M.A., Ph.D., C.I.E., அவர்கள் 'ஸ்டடீஸ் இன் தி மெடிஸின் ஆப் ஏன்ஷியண்ட் இந்தியா' என்கிற அவரது நூலில் பின்வருமாறு கூறுகிறார்:—"இந்தியாவில் வெகு பண்டைக் காலத்தில் இயற்றப்பெற்றுள்ள வைத்திய நூல்களிற் கூறப்படும் சரீர தத்துவ வியவச்சேதங்களைப்பற்றிய விஷய விசேஷங்களை ஆராய்ந்தறிந்தால், என்னைப் போலவே அநேகம் அறிவாளிகள் பெரும்பாலும் வியப்புறவேண்டிவரும். சரீர தத்துவாம்சங்களைச் சரியாகவும் விஸ்தாரமாகவும் கூறியிருப்பதுடன், அவற்றை விமர்சம் செய்துள்ள வகையையும் நோக்குங்கால், அவ்வளவு புராதன காலத்தில் இவ்வளவு புத்தி நுட்பத்துடன் விசித்திரமான சாஸ்திர அறிவைப் பெற்றிருந்தது வியப்பைத் தருகிறது. இச் சந்தர்ப்பத்தில் இந்தியருடைய வைத்திய சாஸ்திரத்திற்கும் கிரேக்கருடைய வைத்திய சாஸ்திரத்திற்கும் ஏற்பட்டிருந்த ஸம்பந்தத்தைப் பற்றிய விஷயமும் விமர்சகர்களுக்குத் தோன்றக்கூடியது இயல்பே.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இவ்விரு தேசத்தவருள் எவரோ ஒரு சாரார் மற்றவரை இச்சாஸ்திர அறிவைப் பெறுவதற்கு உதவியாக்கிக் கொண்டார் என்பது திண்ணம். கி. மு. 400-க்குச் சிறிது பிந்திய காலத்தில் டிஸியா (Ktesia) என்பவரும், கி. மு. 300-க்குச் சற்றுச் சமீப காலத்தில் மெகஸ்தனிஸ் (Megasthenes) என்பவரும் ஆக இவ்விரு கிரேக்க வைத்தியர்களும் வட இந்தியாவுக்குச் சென்று வஸித்து வந்தனர் என்று சரித்திர ஸம்பந்தமான பிரமாணம இருக்கும் போது, இந்திய சாஸ்திரஞ்ஞர்களுடைய உதவியை நாடி, இவர்கள் இந்திய வைத்திய நூல்களைக் கற்றறிந்து போயிருக்க வேண்டுமென்று நாம் பலமாக அபிப்பிராயப் படுகிறோம்."

மற்றொரு மேஞட்டு வைத்திய சாஸ்திர வல்லோரான டாக்டர் மாக்ஸ் நியூபர்கர் என்பவர் தாம் இயற்றிய 'ஹிஸ்டரி ஆப் மெடிஸின்' என்னும் நூலில் எழுதியிருப்பதையும் மொழிபெயர்த்து இச் சபையோருக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். "அநேகம் கிரந்தங்களைப் பரிசீலனை செய்ததிலிருந்து நாம் தெரிந்துகொண்டதில், கிரேக்கர்தது வைத்திய முறை இந்திய வைத்தியமுறையை ஆதாரமாகக் கொண்டே ஏற்பட்டதென்று நிரூபணமாகிறது. மஹா அலெக்ஸாண்டர் இந்தியாவின் மீது படை யெடுத்துச் சென்றதிலிருந்து, கிரீஸ்-இந்தியா ஆகிய இவ்விரு நாகரிக நாடுகளுக்கும் பரஸ்பர நெருங்கிய ஸம்பந்தம் ஆதியில் உண்டாயிற்று. இக் கீழ்-மேல் நாடுகளுக்கு அக்காலத்தில் தோன்றிய ஸம்பந்தத்திற்கு அலெக்ஸாண்ட்ரியா, ஸிரியா, பாரஸீகம் ஆகிய நாடுகளும் மத்திய ஸ்தலமாக அமைந்தன. கிரீஸ், ரோமாபுரி, பைஸாண்டின் (Byzantine) இத் தேசங்களில் நூலாசிரியர்களிற் பலர் இந்திய வைத்தியமுறைகளையும் அடிக்கடியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாரஸீகத்திலும் இந்தியவைத்திய சாஸ்திரத்தின் பெருமை பிரபலமாக உணரப்பட்டு, அவர்களது பாஷையிலும் அம்முறை மொழிபெயர்க்கப்பட்டது. அரேபிய வைத்தியம் என்கிற வேஷம் பூண்டு இந்திய வைத்திய முறையே மேஞடெங்கும் புதிய

விஷயமாகக் கருதப்பட்டுவந்தது. 19-ம் நூற்றாண்டில் தோன்றிய ஸந்தாநசஸ்திரசிகித்ஸை (Rhino-plasty) என்னும் அபூர்வ விஷயங்கூட இந்திய வைத்திய முறையிலிருந்து கண்டறிந்த சிறந்த விஷயங்களுள் ஒன்று. (இவ்வித நாஸாஸந்தாநசஸ்திரசிகித்ஸா முறை அஷ்டாங்க ஹ்ருதயம் உத்தரஸ்த்தாநத்தில் கர்ணரோக-நாஸா ரோகப் ரதிஷேதாத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.)

"சரக-ஸுச்ருதங்கள் என்கிற உயர்வான ஆயுர்வேத நூல்கள் கலிப் அல்மாமுன் (Kaliph Almamun) என்பவருடைய ஆதரவில் ஏழாம் நூற்றாண்டில் அரேபிய பாஷையிலும், பிறகு அவை லதின் பாஷையிலும், மொழிபெயர்க்கப்பட்டன. இவைதான் ஐரோப்பிய வைத்தியமுறை ஆரம்பித்து அபிவிருத்தியடைய மூலாதாரமாயிருந்தன" என்று 'ஹிஸ்டரி ஆப் ஆர்யன் மெடிஸின்' என்னும் தமது நூலில் கோண்டால் டாகூர் ஸாஹேப் அவர்கள் பல ஆதாரங்களுடன் விளக்கியிருக்கிறார்.

வீண் கதியிற் பிரிவினை.

இவ்விதம் மேனாட்டுச் சாஸ்திர நிபுணர்கள் கூட சரித்திராராய்ச்சிகளின் ஆதாரங்களைக்கொண்டு ஆயுர்வேத வைத்தியமே உலகத்திலுள்ள எல்லாமுறைகளுக்கும் ஊற்றுநிலமாயிருந்தென்று நிரூபித்திருக்க, இந்தியாவின் இத்தென் பகுதியில் மாத்திரம், மற்றொரு புதிய வைத்தியப் பெயர் கிளப்பி, அப்பெயர் கொண்ட சித்த வைத்தியம் என்னும் முறை ஆயுர்வேதத்தினும் முற்றிலும் வேறுபட்டதென்று கூறி, அந்த வாதம் வைத்தியர்களுக்குள் வீண் பிளவை உண்டுபண்ணிவருவது விபரீதச் செயலென்று நான் ஆதிமுதல் முறையிட்டுவருகிறேன். த்ரிதோஷதத்துவம், இரஸ-வீர்ய-விபாக-பிரபாவங்கள், நிதாநத்திற்கான பஞ்சலக்ஷணங்கள், சிகித்ஸையிலுள்ள வமந-விரேசந-ஸ்நேஹந-ஸ்வேதநாதி க்ரமங்கள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆயுர்வேதம் அக் கொள்கைகளைப்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பெரும்பாலும் ஆங்கிலவைத்தியத்திலும் வேறுபட்டதென்று நாம் கூறுகிறோம். ஆனால் அந்த த்ரிதோஷம் முதலிய அடிப்படையான விஷயங்களிலும் வேறுபடாத தமிழ்வைத்திய நூல்கள் கூறும் வைத்திய முறை ஆயுர்வேதத்தினும் முற்றிலும் வேறுபட்டதென்று எப்படிச் சொல்வது? இரஸ-கந்தக-பாஷாணாதிகளைப் பற்றிய விஷயம் தமிழ் நூல்களிலுள்ள விசேஷாம்சமாம். அப்படியும் நான் திருப்பித் திருப்பித் தமிழ்வைத்தியநூல்களைப் படித்துப் பார்த்தும், இரஸசாஸ்திர விஷயமாவது அங்கப் பிரத்யங்கங்களுடன் அடுக்கடுக்காக எந்த நூலிலும் விவரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. பஸ்ம-லிங்தூராதி முறைகள் சில விடங்களில் அடிக்கடியும் தமிழ்நூல்களில் கூறப்பட்டிருக்கின்றனவென்றும், அதை ஒரு தனி வைத்தியமுறையென்று எப்படிக் கூறிவிடலாம்? மேலும் ஸம்ஸ்க்ருதத்திலும் இரஸசாஸ்திர விஷயம் இல்லாமற் போகவில்லை. ஆயுர்வேதத்தில் இரஸசாஸ்திரம் பிரத்தியேகமாகப் பிரிக்கப்பட்டு, அதற்காக ஒன்றல்ல அநேகம் நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. இரஸரத்நாகரம், இரஸரத்நஸமுச்சயம், இரஸார்ணவம், இரஸஹ்ருதயம், இரஸமஞ்ஜரி, இரஸதரங்கிணி, இரஸராஜஸுந்தரம், இரஸேச்வரதந்த்ரம், இரஸப்ரகாசஸுதாகரம், இரஸஸங்கேதகலிகா, இரஸபத்ததி, ஆயுர்வேதப்பிரகாசம், லோஹஸர்வஸ்வம் முதலிய எண்ணிறந்தக் கிரந்தங்களெல்லாம் ஒழுங்காகவே ஸம்ஸ்கிருதத்தில் தனிக் கிரந்தங்களாக அநேகம் வித்தர்களால் இயற்றப்பட்டு, அவற்றுள் பல இப்பொழுது அச்சிடப்பட்டும் இருக்கின்றன. பதினெண் வித்தர்கள் என்பவர்கள் வைத்தியநூல்கள் தமிழில் எழுதிச் சித்தவைத்தியத்தை யேற்படுத்தினதாக அஸம்பாவிதமான வாதங்களைக் கூறி, வேறுபட்டுப் போவதைச் சான்றோர் அங்கீகரிக்கார். அப்பதினெண் வித்தர்களிற் பலரும் ஸம்ஸ்கிருதப் பெயர்பூண்டவர்; அவர்களிற் பலர் ஸம்ஸ்கிருதவைத்தியநூல்களும் இயற்றியவராவர். பதினெண் வித்தர்கள் மாத்திரமா? ஸம்ஸ்கிருதம் அறியாத நம் தமிழ்நாட்டுச் சகோதரர்களும் பார்த்துப் பயன்படட்டுமென்றே ஸமீபத்தில் நான் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி

பெயர்த்து வெளியிட்டுள்ள வாக்படருடைய இரஸரத்தின ஸமுச்சயத்தைக் கையிலெடுத்துப் பாருங்கள். அதில் ஆரம்பத்தில், இருபத்தேழு லித்தர்கள் ஸம்ஸ்கிருதத்தில் தனக்கு முன் இயற்றிய இரஸக் கிரந்தங்களைப் பரிசிலனை செய்து, இரஸரத்தின ஸமுச்சயம் என்னும் நூல் இயற்றுவதாகக் கூறுகிறார். இக்கிரதங்கள் யாவும் வடதேசத்தில் ஏற்பட்டு, அவ்விடத்தியவராலேயே தேவநாகரலிபியில் வெளியாயிருக்கின்றன. அவற்றைப் பிரசுரித்திருப்பவர்கள், அவற்றின் ஏட்டுப் பிரதிகளைக் காச்மீரத்திலிருந்தும், நேபாளத்திலிருந்தும், பஞ்சாபிலிருந்தும் தேடிச் சம்பாதித்ததாக முகவுரை முதலியதிற் குறிப்பிட்டிருப்பதால், அவை தமிழ் நூல்களைப் பார்த்து இயற்றப்பட்டதற்கு ஆதாரமில்லை. ஸம்ஸ்கருத இரஸக் கிரந்தங்களைப் பொருமையை ஒழித்துவிட்டு உற்றுப் படித்தால், அநேகம் புதுமையான அம்சங்களை அனைவரும் அறிந்துகொள்ள வழியுண்டு. முதலாவது இரஸவர்க்கத்தை இரஸம், மஹாரஸங்கள், ஸாதாரண ரஸங்கள், உபரஸங்கள், தாதுக்கள் என்றும், இவ்விதமே லோஹங்கள், ரத்தினங்கள், மற்றும் கனிஜவர்க்கங்கள் என்றும் பாகுபாடுகளை நான் வெளியிட்டுள்ள இரஸரத்தின ஸமுச்சயம் முதலிய ஆயுர்வேதநூல்களிற் காணலாம். ஒவ்வொரு கனிஜ பதார்த்தத்தையும் எடுத்துக் கொண்டால், அவ்வொவ்வொன்றும் எத்தனை பேதங்களை யுடையதென்பதை இலக்ஷணைகளோடு அலசிக் கூறுவதை இக்கிரந்தங்களில்தான் பார்க்கலாம். ஒரு அயம் என்னும் லோஹம் முண்டம், தீக்ஷ்ணம், காந்தம என்று பொதுவாக மூவகைப்படும் என்றும், அவற்றுள் முண்டம் என்னும் அயம் மிருது, குண்டம், கடாரம் என்ற மீண்டும் மூன்று விதமென்றும், தீக்ஷ்ணலோஹம் என்பது கரம், ஸாரம், ஹ்ருந்காளம், தாராவட்டம், வாஜிரம், காலலோஹம் என்று அறுவகைப்படுமென்றும், காந்தலோஹம என்பது ப்ராமகம், சும்பகம, கர்ஷகம், திராவகம் என்று நான்கு விதமென்றும், ஆக ஓர் அயத்திலேயே பதின்மூன்று விதங்கள் அவற்றின் தனித் தனி லக்ஷண-குணதிகளோடு வரிசையாக விளக்கப்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பட்டிருப்பதைப் பார்க்கலாம். இப்படியே துவரி யென்னும் தாதுப்பொருளை உதாரணமாக எடுத்துக் கொண்டால் "துவரியென்னும் மிருத்திகை ஸௌராஷ்டிர தேசத்திலுள்ள ஒருவித கல்லிலிருந்து உண்டாவது; வஸ்திரத்திற் பட்டால் மஞ்ஜிஷ்டையைப்போல் சாயமுண்டு பண்ணும்; அது படிகி, புல்லிகா என்று இரண்டு விதம்; இவற்றுள் முதலிற் கூறியது சொற்பம் பசுமையாகவும், குருவாகவும், ஸ்நிக்த்தமாகவும் இருக்கும்; அதற்கு விஷஹர குணமும், விரணஹர குணமும, குஷ்டஹர குணமும உண்டு. மற்றொன்று சிறிது பொன்னிறமாகவும், ஸ்நிக்த்தமாகவும், இலேசாகவும், வெண்மையாகவும், சிறிது அம்லரஸமுள்ளதாகவும் காணப்படும்; புல்லதுவரி யெனப்படும் இந்த தாதுப்பொருள் அயத்தைச் சென்னிறமாக்கிச் செப்பாக மாற்றக் கூடியது" என்று பின்வரும் பத்தியங்கள் குறிப்பிடுகின்றன:—"ஸௌராஷ்ட்ராச்மநி ஸம்பூதா ம்ருத்ஸ்நா ஸா துவரீ மதா. வஸ்த்ரேஷு லிப்பதே யாஸௌ மஞ்ஜிஷ்டாராகபந்திநீ. படிகி புல்லிகா சேதி த்விவிதா பரிகீர்த்திதா. ஈஷத்பீதா குரு: ஸ்நிக்த்தா பீதிகா விஷநாசிநீ. வ்ரண குஷ்டஹரா ஸர்வகுஷ்டக்நீ ச விசேஷத:. நிர்ப்பாரா சுப்ர வர்ணா ஸஸ்நிக்த்தா ஸாலாபர்ணா ச. ஸா புல்லதுவரீ ப்ரோக்தா லேபாத் தாம்ரம் சரேத்பு!" (இர. ர. ஸமு. அத். 3. ச்லோ 59, 60.) இவ்விதமே காஸீஸம் என்னும அன்னபேதி, தூத்தம், தாளகம், மாக்ஷிக, பாஷாணம், நவஸாரம் முதலிய உபரஸங்களும், இரஸரத்தின ஸமுச்சயாதி நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இரஸதந்திரம் (ஆயுர்வேத கெமிஸ்ட்ரி) என்பதற்குப் பூர்த்தியாக வேண்டிய அம்சங்கள் அனைத்தும் ஆயுர்வேதக் கிரந்தங்களில் விவரிக்கப்பட்டிருப்பதை இரஸரத்தின ஸமுச்சயத்தைப் படித்துப் பார்த்தால் நீங்கள் பிரமிக்கும் படியாயிருக்கும். இரஸசாலை (Chemical Laboratory) அமைக்கவேண்டிய வகை முதற்கொண்டு, அவ்விடத்தில் எந்தெந்த ஸ்தானங்களில் எந்தெந்த கருவி முதலியவற்றைத் தயாரில் வைக்கவேண்டும் என்கிற விஷயங்களும், கஜ்ஜலி - இரஸபங்கம் - பிஷ்டி - லோஹமாகர்ஷணம்-

தாராகர்ஷணம்-பிஞ்ஜரி-நிர்வாபணம்-ஊநமம்-பீஜம்-ஸத்வ பாதநம் முதலிய அபூர்வமான பல வேறு பாக முறைகளைக் கொண்டு இரஸ-லோஹ-பாஷாணுதிகளைப் பக்குவம் செய்யும் விதங்களும், டோலா-பாதநீ-தீபிகா-டேகீ-ஜாரணை-கச்சப-ஸோமாநல - வாலுகா-ஹம்ஸபாக-ஜலஹார்யாதி இரஸௌஷத பாகங்களுக்கு உபயோகமான யந்திரஸ்வரூபங்களும், இச்சரக்குகளை உலையிலிட்டு ஊதவும் புடபாகம் செய்யவும் அவசியமான வஜ்ரமூஷை - யோகமூஷை-காரமூஷை-வரமூஷை-பிடமூஷை-வ்ருந்தாக மூஷை முதலான அநேகவித மூசைகளின் உபயோகங்களும், பாதாள கோஷ்டி-அங்கார கோஷ்டி-ஸத்வபாதந கோஷ்டி - வங்க நாள கோஷ்டி முதலிய உருவ-உபயோகங்களிற் பலவிதமாயுள்ள உலையடுப்புகளின் மாதிரிகளும், மஹாபுட-கஜபுட-வராஹபுட-குக்குடபுட-கபோதபுட-பூதரபுடங்கள் எனப்படும் வகை வகையான இரஸ-லோஹாதிகளைப் புடமிடும் பிரகாரங்களும், ஸ்வேதந-மர்த்தந-மூர்ச்சந-உத்தரண-பாதந-நிரோதநாதி அஷ்டாதச ஸம்ஸ்காரங்கள் என்கிற இரஸத்தைச் சுத்தி செய்து பதனிட்டு உபயோகிக்க வேண்டிய உபாயங்களும், ஆரோடம்-ஹடம்-க்ரியாஹீநம் - பிஷ்டி-கல்கம்-பீஜம்-த்ருதி இத்யாதி சிறப்பான இரஸபந்தவிதிகளும், இச்சந்தர்ப்பத்தில் முற்றிலும் எனலுல் விஸ்தரித்துக் கூறமுடியாது நிறுத்தப்பட்ட வேறு நூற்றுக்கணக்கான சாஸ்த்ரீய விஷயங்களும் ஸம்ஸ்க்ருத வித்தநூல்களில் விளங்கவும் விஸ்தாரமாகவும் வர்ணிக்கப்பட்டிருப்பதைப் படித்துப் பார்க்கும் பக்ஷபாதமற்ற விவேகிகள், இரஸாத்தின ஸமுச்சயம் முதலிய ஸம்ஸ்க்ருத வைத்தியநூல்களே உண்மையில் வித்த நூல்கள் அல்லது சரியான இரஸக் கிரந்தங்கள் என்கிற முடிவுக்கு வருவார்கள். முப்பு என்கிற ஒரே ஒரு சொல்லைச் சொல்லிக்கொண்டு, அவ்வொன்றுக்காகத் தமது வைத்திய முறை சிறந்தது, வேறு பட்டது என்று வீண் வாதம் செய்துகொண்டு, நமது தமிழ் நாட்டு வைத்திய ஸஹோதரர்கள் பிளவுபட்டுப் போவது சரியல்லவென்று என்றைக்கும் போல் இன்றைக்கும் சொல்லுகிறேன். அப்படியாவது மஹா கல்வி இந்த 'முப்பு' என்

னும் சரக்கை அதற்காகத் தனி இலகா ஏற்படுத்தியும் கண்டுபிடிக்கக் காரணம். ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், டங்கணக்ஷாரம் என்கிற மூன்று க்ஷாரங்கள் (க்ஷாரம் என்பதுதான் தமிழில் காரம் எனப்படுகிறது) என்றும் உப்புகளின் கூட்டு முறையால் லோஹாதிகளை மாரணம் (பஸ்மம்) செய்ய உபயோகமாகுமாறு தயாராகும் கூட்டுச் சரக்குதான் முப்புஎன்பதுஎனது கொள்கை. என்போன்றவருடைய கொள்கை இம்முப்பின் தத்துவ விஷயத்தில் எவ்வாறிருந்த போதிலும், இந்த ஒரு சொல்லை வைத்துக்கொண்டு, அதற்காகச் சிலர் வேறொரு வைத்தியமுறையென்று வாதம் செய்வதும், புதிய பெயரைக் கற்பிப்பதும், அதற்காகத் தனி இலாகா ஒன்று அமைப்பதும் முக்கியமாக இராஜீய முகாந்தரத்தை முன்னிட்ட முயற்சிகளே யன்றி, உண்மையில் அடிப்படையான போதிய சாஸ்த்ரீய ஆதாரங்களை அவலம்பித்தவையல்லவென்று மொழிந்திட மனிதரைக் காணோம். நான் குறிப்பிட்டும் குறிப்பிடாமலுமுள்ள எண்ணிறந்த இரஸக்கிரந்தங்களை இயற்றியவர்கள் எல்லோரும் வித்தபுருஷர்களே. தமிழ் நூல்களிற் காணப்படாத நூற்றுக்கணக்கான சாஸ்த்ரீய தத்துவங்கள், இரஸாயந சாஸ்திரத்திற்கு அவசியமான அகில அம்சங்களுடனும் ஸம்ஸ்க்ருத வித்த நூல்களிற் காணப்படுகின்றன. மாதவநிதாநத்திற் கூறிய ஸகல வியாதிகளுக்கும் அதே வரிசையில் சிகித்ஸாக்ரமங்களை விளக்கும் ப்ருஹத்மாதவத்திற்கும் "வித்தயோகம்" என்று பெயர் வழங்கப்படுகிறது. இவ்விதம் தகுந்த ஆதிகாலத்திய ஆதாரங்களைக் கொண்டுப் பரிசோதனை செய்து பார்த்தால், ஆயுர்வேத ரஸக்கிரந்தங்களையும், ஆயுர்வேதத்தைப் பொதுவாகவும் "வித்த வைத்தியம்" என்கிற வேறொரு பெயரால் அழைப்பதும் ஸஹேதுகமாயிருக்கிறது. அக்னிவேசர் முதலியவர்களுக்கு வைத்தியோபதேசம் செய்த புநர்வஸ்வாத்ரேயர் முதலியவர்கள் வித்தமுனிகள் என்றும வழங்கப்படுவதுண்டு. வண்டி வண்டியாகச் சித்தவைத்திய நூல்கள் இருப்பதாகவும் சொல்லுகிறோம், இவ்வளவு வருஷ காலங்களாய் அவற்றில் எவை சரகாதிஸம்ஹிதைகளைப் போல் பிரமா

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ணக் கிராஹ்யமான சாஸ்த்ரீயத் தமிழ் நூல்கள் என்றும் ஒருவரும் இதுகாறும் பஹிரங்கப்படுத்தவில்லை. சரியான பாட புஸ்தகங்களும் ஏற்படுத்திக் கொடுக்க முடியாமல், ஏதேதோ புத்தகங்களிலிருந்து தேடிப் பொறுக்கிய விஷயங்கள் எனச் சொல்லி, ஒரு திரட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அது எந்த வித்த புருஷருடைய பிரமாணக் கிரந்தமென்று விளங்கவில்லை ஊற்றுக்கு நிற்காது விதண்டாவாதம் செய்வதிற் பிரயோஜனமில்லை. காச்மீரத்திலும், நேபாளத்திலும், உஜ்ஜயிநீ முதலிய இதர வட இந்தியப் பிரதேசங்களிலும், சீன தேசத்திலும் (Bower's Ms. அப் பிரதேசத்தில்தான் கண்டு பிடிக்கப்பட்டது) இருந்த, தமிழ்ப்பாஷை இன்னதென்றறியாத வாக்படர் முதலிய வடமொழி வைத்திய சாஸ்திரிகளும், சரகர் முதலிய முனிவர்களும் எழுதிய (சித்த வைத்தியர் என்போர் கூறுகிறபடி, அவர்களுக்காக வாத விஷயத்தில் விட்டுக் கொடுக்கவும் கருதி) ஆயுர்வேத நூல்களுக்கு இத் தென்னிந்தியாவிலிருந்த தமிழ் வைத்திய நூல்களே ஆதாரமாயிருந்ததாக ஒப்புக்கொண்ட போதிலும், அப்பொழுதும் இரண்டுக்கும் பேதமில்லை யென்றே ஏற்படுவதால், வைத்திய முறையே வேறென்று வாதம் செய்வது வீணல்லவா? த்ரிதோஷ தத்துவத்தை ஆதாரமாகக் கொண்ட எந்த முறையும் ஒரே முறையாகுமே யன்றி வேறல்ல. சித்தவைத்திய வகுப்புகளுக்கு ஜீவரக்ஷாம்ருதம், ஆத்மரக்ஷாம்ருதம் என்பவை சித்தவைத்திய பாட புஸ்தகங்களாம். அந்நூல்கள் எந்த வித்தராலும் எழுதப்பட்டவை யல்ல. எந்த வித்த வைத்திய நூல் எனப்படுவதையும் ஆதாரமாகக் கொண்டு இயற்றப்பட்டனவல்ல. ஆயுர்வேதநூல்களை ஆதாரமாகக் கொண்டு, அவற்றிலிருந்து விஷயங்களை யெடுத்து ஸ்ரீமான் முத்தையபண்டிதர் முதலியவர்களால் தொகுக்கப்பட்டால் அது சித்தநூல் ஆய்விடுமாம்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

புதிய நாமகரணம் ஏன்?

உண்மையில் 1914-ம் வருஷம் வரையில் தமிழ்நாட்டிலிருந்த எல்லாத் தேசிய வைத்தியர்களும் தம்மை நாட்டு வைத்தியர் என்றே, ஆயுர்வேத வைத்தியர் என்றே தான் வழங்கி வந்தனர். அதுவரையில் சித்த வைத்திய முறை என்கிற பெயரே வழக்கத்திலாகட்டும் கிரந்தங்களிலாகட்டும் ஒருவரும் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை. 1914 இல் ஸ்ரீமான்கள் மதுரைமுத்து முதலியார், பண்டிட் ஆனந்தம், முருகேச முதலியார், முத்தையா பிள்ளை, சிவஞ்ஞான யோகிகள் முதலியவர்கள் சேர்ந்து தமக்கென்று "தென்னிந்திய ஆயுர்வேத சங்கம்" என்கிற ஸபையேற்படுத்திக் கொண்டார்கள். இச்சங்கத்தில் இப்பொழுது தம்மைச் சித்தவைத்தியர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இன்னும் பலர் அங்கத்தினராயிருந்தனர். கவர்ன்மெண்டில் தேசியவைத்திய விசாரணைக்காக நியமித்த உஸ்மான் கமிட்டி ரிபோர்டில் (வால்யம் 2. பக்கம் 449) இவ்வுண்மையைப் படிக்கலாம். எனது நண்பர் ஸ்ரீமான் முருகேச முதலியார் (இப்பொழுது வைத்திய ரத்னம்) அவர்கள், தமது ஸாக்ஷ்யத்தில் த்ரிதோஷ தத்துவந்தான் தமது வைத்திய முறைக்கு அடிப்படையென்பதையும், ஆயுர்வேதத்திற்கும் சித்த வைத்தியத்திற்கும் விசேஷ வித்தியாஸம் கிடையாதென்பதையும் கூறிவிட்டு, ஆனால் தமது சித்த முறையில் பஸ்ம-ஹிந்தூராதிகள் விசேஷம் என்று கூறியிருக்கிறார். இதைத்தான் முதலில் நான் கண்டித்துக் கூறியிருக்கிறேன். இந்த ஒரு பஸ்ம-ஹிந்தூரத்திற்காக வைத்தியமுறையே விபரீதமான பேதத்தை அடைந்து விடுமா? நான் கூறிய ஸம்ஸ்க்ருத இரஸக் கிரந்தங்களில் அளவற்ற பஸ்ம-ஹிந்தூராதி முறைகள் எளிதாகவும் கஷ்டப்பட்டும் முடிக்கக்கூடிய வகையில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுக்குள்ளேயே தாம் புதிதாக நாமகரணம் இடுகையில் "அகத்திய வைத்தியம்" என்று சிலரும், "தமிழ் வைத்தியம்" என்று சிலரும், "தமிழ்ச் சித்த வைத்தியம்" என்று வேறு சிலரும், மற்றுஞ் சிலர் வேறு

வகையிலும் பெயரை ஏற்படுத்த வேண்டுமென்று சச்சரவு கள் செய்து கொண்டதும் எனக்குத் தெரியும். எந்தத் தமிழ் நிகண்டுவிலாவது, அகராதியிலாவது சித்தவைத்தி யம், அல்லது தமிழ் வைத்தியம், அல்லது அகத்திய வைத் தியம் என்கிற பெயர் பார்க்கக் கிடைக்காது. எனக்குத் தமிழில் விசேஷ அபிமானம் உண்டு. அவ்வபிமானம் நான் தமிழில் பல நூல்களை இயற்றி வெளியிட்டதாலேயே வெளிப்படையாக அனைவருக்கும் தெரியும். எனக்குத் தமிழ் வைத்தியர்களுடன் சண்டையும் இல்லை. ஒருவருக் கொருவர் ஒற்றுமையைப் போக்கிக் கொண்டு வீண் வாதம் செய்து, வேறு முறையினர் என்று சொல்லிக் கொண்டு பிளவுபட்டுப் போவதால், இத்தேசிய வைத்தியரு டைய தற்காலத்திய பலக்குறைவு இன்னும் அதிகப்படுமே தவிர, மேலுட்டு முறையுடன் நாம் ஸமநிலைமைக்கு வரக் கூடிய எதிர்கால நன்மை எதையும் நாம் எதிர்பார்க்க வல் லமையற்றவராவோம் என்பதை ஸஹேதுகமாக விளக்கவே இவ்விஷயத்தை எனது பிரஸங்கத்தில் இணைத்தேன். இம் மஹாநாட்டுக் காரியதரிசி எனக்கு அனுப்பிய சில கடிதங்க ளிலுள்ள தகவல்களைப் பார்த்து, இச்சந்தர்ப்பத்திலாவது இங்கு வந்துள்ள ஸஹோதர வைத்தியர்களனைவரையும் இப்பிரிவுபடும் நோக்கத்திலிருந்து தம் மனதைத் திருப்பி, நாம் அனைவரும் ஆயுர்வேத வைத்தியர்களே என்கிற கொள்கையுடன் ஒற்றுமைக்கும்படியாக வேண்டிக்கொள்ள விரும்பியே, இவ்விஷயத்தை இவ்வளவு விஸ்தாரமாக விளக்கவேண்டியதாயிற்று. ஆயுர்வேத வைத்தியர்கள் தமிழ் நாட்டிலுள்ள எவ்வைத்தியரையும், விந்த வைத்தியர்க ளென்று சொல்லிக்கொள்பவர் உட்பட அனைவரையும் நல்வரவு கூறியழைக்க மனப்பூர்வமாக எப்பொழுதும் விரும்பியிருக்கிறார்கள்.

ஆயுர்வேதம் அநாதி.

ஆயுர்வேதந்தான் அகில வைத்திய முறைகளுக்கும் மூலவேராயிருந்ததென்பதையும், மேலுட்டு முறை முதல்

மற்றெதுவும் அடிக்கடி மாறுதலடையும் தன்மையதென் பதையும், ஆயுர்வேத முறையே பிரதானமான கோட்பாடு களில் மாறுதலடையாதபடி ஸ்ர்வஞ்ஞர்களான மஹரிஷி கள் அஸ்திவாரங்கோலி யிருக்கின்றனரென்பதையும், ஆகவே அதுதான் ஆதிகாலந் தொட்டிருக்கும் அநாதி வைத்தியமுறை அல்லது சாச்வதமான முறை யென்பதை யும் நம்புவதற்கான அநேகம் அத்தாட்சிகள் நமக்குண்டு. ஸாக்ஷாத் தன்வந்தரியின் பிரதான சிஷ்யர்களுள் ஒருவ ரான ஸுச்ருதர் 'ஆயுர்வேதம் அதர்வணத்திற்கு உபவே தம்' என்கிறார். ஆத்ரேய ஸம்பிரதாயத்தை அனுஸரித்த அக்னி வேசர் 'ருக்வேதத்திற்கும் அதர்வ வேதத்திற்கும் உபவேதம் ஆயுர்வேதம்' எனக் கூறுகிறார். ஆயுர்வேத ஸம் ஹிதைகளும் ஸங்கிரஹங்களும் இயற்றிய ஆசிரியர்கள் அனைவரும் ஆயுர்வேதம் அநாதி யென்றும், அபௌரு ஷேயம் என்றும் எழுதியிருக்கிறார்கள். "நான்முகன் ஆயுர்வேதத்தை ஸ்மரணத்திற்குக் கொண்டுவந்து, பிறகு தக்ஷப்பிரஜாபதிக்கு உபதேசித்தார்" (ப்ரஹ்மா ஸ்ம்ருத் வாயுஷோ வேதம் ப்ரஜாபதி மஜிக்ரஹத்) என்கிறார் வாக் படர். வைதிக மதங்களுக்கு விரோதிகளாயிருந்த பௌத்த வித்வான்கள் கூட வைத்தியசாஸ்திரத்தை ஆயுர்வேத மென்று வழங்கியதோடு, அதற்கு ஆதாரம் வேதமென்னும் உண்மையை மறைத்துக் கூறவோ மறுத்துரைக்கவோ எப் பொழுதும் துணிந்ததில்லை. "த்ரிதோஷத்துவத்தை ஸூத்திரமாகக் கொண்ட புனிதமான சாச்வதமான ஆயுர் வேதத்தைப் பிரம்மா நினைவுக்குக் கொண்டுவந்தார்" (த்ரி ஸூத்ரம் சாச்வதம் புண்யம் புபூதே யம் பிதாமஹ:) என்கி றார் சரகர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் அஹங்கார-மமகாரங்களொழிந்து தபோநிஷ்டர்களாயிருந்து வந்த நமது மூதாதைகளான முனிவர்களுடைய மஹாபரிசுத்த மான இரத்தம் நமது நாடிகளில் இன்னும் ஓடிக்கொண்டிருப் பதற்கு, நாம் அம் மஹரிஷிகளுடைய கோத்திரப் பெயரை நழுவவிடாது தொன்று தொட்டு இன்றுவரையில் வழங்கி வருவதே சான்றும். அவ்விதமான களங்கமற்ற கூடஸ்த் தர்களுடைய ஸந்ததியிற் பிறந்து மாசுமறுவற்ற ஆத்ம சுத்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

யும் தேஹசுத்தியும் வாய்ந்தவர் நாம் என்னும் பெருமை நமக்கிருந்தால், மறுமையை நம்பி, இம்மையிலும் மறுமைக்கு இடையூறின்றி ஆரோக்கிய சுகத்தை அடையும் ஆற்றல் நமக்குண்டானால், அபௌருஷேயமான வேதத்திலும் அதன் அங்கமான ஆயுர்வேத சாஸ்திரத்திலும் நம்பிக்கை வைத்து அதன் முறைகளைக் கையாண்டுவர நாம் ஸங்கல்பம் செய்துகொண்டு, தொழில் முறையில் ஆயுர்வேதமென்றும் சித்தமென்றும் வேற்றுமையைப் பற்றற ஒழித்து, ஒரு தாய்வயிற்றுப்பிள்ளைகளைப்போல் உள்ளன்புடன் ஒழுகவேண்டுமென்பது எனது கோரிக்கை. "அறம் பொருள் இன்பங்களுக்கு இன்றியமையாக் கருவியான ஆரோக்கியகரமான ஆயுளைப் பெற்று வாழ விரும்புபவன் ஆயுர்வேதம் உபதேசிக்குமவைகளில் அதிக ஆதரவு செலுத்தவேண்டும்" என்கிறார் ஆசார்ய வாக்படர். முன்னோர்களான மஹரிஷிகள் தைவத்தன்மை பொருந்தி நம்போன்ற அர்த்த-காமபராளான மனிதரை மஹிமையில் மீறியவர்; விருப்பு வெறுப்பு பயம் இவற்றை யொழித்தவர்; மஹா சிஷ்டர்கள்; அவர்கள் கூறியுள்ள ஒவ்வொரு மொழியும் நமக்கு ஆப்த வசனமாகும். அத்தகைய மஹான்களே வேதமும் ஆயுர்வேதமும் ஆப்தவாக்கியம் என்று நமக்கு உபதேசித்திருக்கிறார்கள். "ருஷயச் சிஷ்டா:, தர்மத்வாரா அவஹிதா:, தாத்ருச சிஷ்டாநுமதோ லோகாநுக்ரஹப்ரவ்ருத்தச் சாஸ்த்ரவாத: ஆப்தாகம:; அதச் ச ஆப்தாகமஸ் தாவத்வேத:, தத்த்வாரா ஆயுர்வேதச் ச" என்கிறார் அக்கினிவேசர். நான் ஏதோ இக்காலத்திய உலகவாழ்க்கைக்கு உதவாத வேதாந்த விஷயத்தைக் கூறுவதாக அவஸரப்பட்டு எவரும் அபிப்பிராயங்கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன். ஆயுர்வேதக் கிரந்தங்களை ஆதியோடந்தமாகக் கற்றவர் இக்காலத்தில் அரிதிலும் அரிதாயிருப்பதால், மிக்க மேம்பாடடைந்துள்ள மேநாட்டு நாகரிகத்தில் மூழ்கி, முன்னம் நமக்கிருந்த ஞான விஞ்ஞானச் சிறப்பை நாம முற்றிலும் மறந்து, சுயநம்பிக்கைச் சுத்தமாயிழந்து விட்டோமாதலால், தென்னிந்தியாவில் அநேக வருஷகாலமாய் ஆயுர்வேதப் பிரசாரம் அறவே நிறுத்தப்பட்டு அம்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

முறையின் மணங்கூட மறக்கும் நிலைமையிலிருப்பதால், ஆயுர்வேதம் உண்மையில் உத்க்ருஷ்டமானதோர் உபயோகமுள்ள சாச்வதமான சாஸ்திரம் என்பதைச் சிறிது விளக்க வேண்டியது அவசியமாகிறது.

ஆயுர்வேதம் அகில வைத்தியாங்கங்களு மடங்கியது.

வைத்தியர்களுக்கான நியமங்கள்:—

ஆயுர்வேதக் கிரந்தங்களை இயற்றுவதற்கு முன், நமது ஆன்றோரான மஹரிஷிகள் அநேகர் அப்போதைக்கப்போது ஓரிடத்திற் கூடி விஷயவிசாரங்களைக் கடைபறச் செய்தே நூல்களையும் விதிகளையும் வரையறுத்து இயற்றினர் என்று முன்பே குறிப்பிட்டேன். முதலாவது வைத்தியனுடையோக்கியதைகளைப்பற்றிய விதியை ஏற்படுத்தும் போது, அவன் சுயம் திறமையும் மதிவன்மையும் பெற்றவனாயிருந்து, குருகுலத்தில் சாஸ்திர விஷயங்களைக் கிரஹித்து, பிறகு ரோகிகளைத் தான் நேரிற் பரீக்ஷித்து, இதர வைத்தியாசார்யர்கள் செய்யும் சிகித்ஸா க்ரமங்களை நேரிற் பார்த்து, உள்ளும் புறமும் பரிசுத்தனாயிருப்பானால் அவன் யோக்யதையுள்ள வைத்தியன் என்று கூறப்பட்டிருக்கிறது. (தக்ஷஸ் தீர்த்தாத்ர சாஸ்திரார்த்தோ த்ருஷ்டகர்மா சுசிர் பிஷக்). வைத்தியனுடைய ஒழுக்க-வழக்கங்கள் எவ்விதம் இருக்கவேண்டுமென்பதைப்பற்றி சரகர் கூறியிருப்பதைப் படித்தால், இக்காலத்திய நாகரிகம் முற்காலத்தியதினும் மேற்பட்டதென்று நினைக்க மார்க்கமிராது. "மஸ்யதமேஷ்வபீக்ஷ்ணம் வைமல்ய மாதத்யாத்.த்ரி: பக்ஷஸ்ய கேச-ச்மச்ரு- நகாந் ஸம்ஹாரயேத். நித்யமநுபஹதவாஸா:, ஸாதுவேஷ:, ப்ரஸாதிதமுக:, பூர்வாபிபாஷீ, ஸுமுகோ, துர்மேஷ்வப்யுபபத்தா ச ஸ்யாத்". தொழில் முறையில் அவனுக்குள்ள குணகுணங்களைப் பகுத்து, பிராணபிஸரன், ரோகாபிஸரன் என்று வைத்தியனை இரண்டு விதமாகப் பிரித்திருக்கிறார். சரகர் சாஸ்திர

மறிந்து, அனுபவம் பெற்று, வியாதியால் வருந்துபவருக்கு எல்லாவகையிலும் உதவி செய்து, அவரது உயிரில் அபிமானம் வைத்துக் காக்கும் வைத்தியன் 'பிராணாபிஸரன்' ஆவான். அதற்கு மாறுக அரைகுறையாகக் கற்று, ஆத்திரத்துடன் பொருள்தேடும் ஆற்றல் கொண்டு, எவன் வியாதி வாய்ப்பட்டு வருந்துவான் என்று வியாதிகளைத் தேடியோடும் சுயநலங்கருதிய துர்வைத்தியனை "ரோகாபிஸரன்" என்று அவர் வழங்குகிறார். குருமுகமாக சாஸ்திரம் படித்து, அரும் பொருளுணர்ந்து, அனுபவம் பெற்று, யோக்யதைக்குள்ள உரிமையைப் பெற்று, இராஜசாஸனத்தையும் அடைந்து, உள்ளும் புறமும் சுத்தமாயிருந்து கொண்டு விசிகாப் பிரவேசம் (தொழில் செய்ய ஆரம்பித்தல்) செய்யவேண்டும்"(ஆசார்யாதிகத தந்த்ரேண, உபாவிததந்த்ராத்தேந, த்ருஷ்டகர்மணு, க்ருதயோக்யேந, ராஜாஜ்ஞாதேந, சுசிநா, அகுஹகேந வைத்யேந விசிகா அநுப்ரவேஷ்டவ்யா) என்று அக்காலத்தில் வைத்தியத்தொழில் புரிபவருக்கிருந்த விதி நியமங்களை விளக்கியிருக்கிறார்.

சாரீரம் :—

ஆயுர்வேதத்தில், அவ்வளவு பண்டைக்காலத்திலேயே விவரிக்கப்பட்டுள்ள சரீரதத்துவ விஷயங்கள் வெகு நுட்டபமானவை யென்று டாக்டர் ஹொர்னெல் முதலிய நவீன மேனாட்டுச் சாஸ்திரஞ்ஞர்கூட வியப்புற்றுக் கூறியிருப்பதாக முன்னமே மொழிந்திருக்கிறேன். சாரீரத்தில் ஸ்த்தூல சரீரவியவச்சேதத்தைப் பற்றி (இதைத்தான் அநாடமி என்பர்) ஸுச்ருதர் அவபாஹிநீ-வேதிநீ முதலிய சர்மம் முதலாக, மஜ்ஜாசுக்ராந்தமான ஸப்த தாதுக்கள், ஸூக்ஷ்மாந்த்ர-ஸ்த்தூலாந்த்ரங்களில் அடங்கிய ஆமாசய-பக்வாசய-கிரஹணீ முதலிய பாகங்கள், இருதய-புப்புஸ-க்லோமா-யக்ருத்-ப்லீஹ-வ்ருக்காதி அவயவங்கள், தமநிகள், ஸிரைகள் முதலிய ஸ்ரோதஸ்ஸுகள் முதலான ஸகல பாஹ்யாந்தர அவயவங்களுடைய ஸ்த்தாந-லக்ஷணாதிகளைப்பற்றி வெகு விளங்கக் கூறியிருக்கிறார். ஸூக்ஷ்ம

சாரீர தத்வாம்சங்களைப் பற்றிய விஷயமும் ஆயுர்வேத நூல்களில் இல்லாமற் போகவில்லை

முதலில் எம்ப்ரயாலஜி எனப்படுகிற கர்ப்போற்பத்தி விஷயத்தையே எடுத்துக்கொள்வோம். "ஸ்த்ரீகளுடைய ஜநநேந்த்ரியம் சங்கநாபி போன்றுள்ளது. அந்த அவயவத்தின் மேற்புறத்தில் மூன்றுவது வலியின்மேல் கர்ப்பம் தங்குவதற்கான கர்ப்பாசயம் அமைந்திருக்கிறது. அக் கர்ப்பாசயம் உருவத்தில் ரோஹித மத்ஸ்யத்தின் முகம் போன்றுள்ளது" (சங்கநாப்யாக்ருதிர் யோநிஸ் த்ரியா வர்த்தா ஸா ப்ரதிஷ்டிதா. தஸ்யாஸ் த்ருதீயே த்வாவர்த்தே கர்ப்பசய்யா ப்ரதிஷ்டிதா. யதா ரோஹிதமத்ஸ்யஸ்ய முகம் பவதி ரூபத:. தத்ஸம்ஸ்த்தாநாம் ததாரூபாம் கர்ப்பசய்யாம் விதுர் புதா:" என்று கர்ப்பாசய ஸ்வரூபம் விளக்கப்பட்டிருக்கிறது. "மாஸந்தோறும் விருத்தியாய் இரண்டு ஆர்த்தவவாஹிதமநிகளின் (fallopian tubes) மூலமாய் கருஞ்சிவப்பான உதிரங்கலந்த ஆர்த்தவத்தை வாயு தன் சக்தியினல் கருப்பையிலிருந்து யோனி முகத்திற் சேர்க்கின்றது. (மாஸேநோபசிதம் காலே தமநீப்யாம் ததார்த்தவம். ஈஷத் க்ருஷ்ணம் விகந்தஞ்ச வாயுர் யோநிமுகம் நயேத்) என்கிற விஷயமும், "கர்ப்பம் தரித்த பிறகு ஆர்த்தவவஹ ஸ்ரோதஸ்ஸுகளின் முகங்கள் கர்ப்பத்தினல் தடுக்கப்படுவதாலும், ஆர்த்தவம் உண்டாவது அப்பொழுது சுறுசுறுப்பற்றுப் போவதாலும் கர்ப்பிணிகளுக்கு மாதவிடாய் உண்டாவதில்லை." (க்ருஹீதகர்ப்பாணும் ஆர்த்தவ வஹஸ்ரோதஸாம் வர்த்மாந்ய வருத்யந்தே கர்ப்பேண, பாடவஞ்ச ஸ்ரோதஸாம் ப்ராயேண மந்தீபவதி. அதோ க்ருஹீதகர்ப்பாணும் ஆர்த்தவம் ந த்ருச்யதே) என்னும் வசநமும், "தாயின் இரஸவஹநாடிகள் சேர்ந்துள்ள அபரா என்கிற மாயையுடன் கர்ப்பத்திலுள்ள சிசுவின் தொப்புட்கொடி இணைக்கப்பட்டிருக்கிறது; அந்த நாடியின் மூலமாய் சிசுவுக்கு ஆஹார ரஸம் போஷணைக்குச் செல்லுகின்றது" (மாதுஸ் து கலு ரஸவஹாயாம் நாட்யாம் அபாரபிதாயாம் கர்ப்பநாபிநாடீ ப்ரதிபத்தா. ஸாஸ்ய

ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106
TAMILNADU • INDIA

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மாதுராஹாராரஸஜீர்யமுபயதி) என்கிற விஷயமும், இன்னும் அநேகம் விவரங்களும் ஸுச்ருதாதிஸம்ஹிதைகளில் வெகு ஸ்பஷ்டமாக விளக்கப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் விட சாரீரக்ரியா - குணம்சம் என்கிற ஸூக்ஷ்ம சாரீரமே ஆயுர்வேதத்தில் பெயர்போனது.

இரத்தம் :—

இரத்த தாது விஷயத்தை நமது இருஷிகள் எவ்வளவு நுட்பமாகக் கவனித்திருக்கிறார்கள் என்பதையும் மற்றொரு திருஷ்டாந்தமாகக் குறிப்பிடலாம். "தேஹத்திற் சேரும் இரஸதாதுவானது சரீரத்தில் வந்துள்ள தேஜோபூதத்தினால் சென்னிறத்தைச் சூட்டுடன்பெற்று, நிர்துஷ்டமான இரத்தம் என்று வழங்கப்படும்." என்றும், "அதில் சிலவகைப்பட்ட ஜீவாணுக்கள் பாதங்களற்றவையாகவும், வர்த்துளமாகச் சென்னிறம் பெற்றும் இருக்கின்றன; அவை மிகவும் நுட்பமானவையாகையால் கண்ணுக்குப் புலப்படமாட்டா" என்றும் (ரஞ்ஜிதாஸ் தேஜஸா த்வா பச் சரீரஸ்த்தேந தேஹிநாம், அவ்யாபந்நாஸ் ஸூஹாஷ்ணேந ரக்தமித்யபிதீயதே. ***ஜந்தவோ ணவ:. அபாதாரவ்ருக்த்தாம்ராச் ச ஸௌக்ஷ்ம்யாத் தேசாப்யதர்சநா:) என்கிற ஸுச்ருதஸம்ஹிதை ச்லோகங்கள் கூறுகின்றன. இவ்விதம் நமது இருஷிகள் ஞானதிருஷ்டியென்கிற ஸூக்ஷ்ம திருஷ்டியினாலோ, அல்லது வேறு எவ்வுபாயத்தினாலோ நுட்பமான விஷயங்களைத் தெரிந்து கொண்டு கிரந்தங்களில் எழுதியதற்கு லியூவென்ஹாக் (Leuvenhock) என்பவரோ, மல்பிஜி (Malpighi) என்பவரோ காரணமாயிருந்திருக்க வழியில்லை. அல்லாமலும் "அந்த இரத்தத்திற்கு இருதயம் ஆசயம் அல்லது ஸ்த்தாநம்; இருதயத்திலிருந்து மேலேயும் கீழேயும் குறுக்காகவும் கிளம்பியோடுகிற தமநிகளென்கிற இரத்தக் குழாய்களின் மூலமாய் உடலெங்கும் இரத்தம் பரவி எப்பொழுதும் போஷணையைத் தந்து, தேஹத்திற்கு ஜீவசக்தியளித்துக் காப்பாற்றுகிறது; அது சரீரமெங்கும் பிரவஹித்துக் கொண்டேயிருப்பதைக்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கண்டு இரத்தம் ஓடும் ரீதியைக் கவனித்துணரலாம்" (தஸ்ய ஹ்ருதயம் ஸ்த்தாநம்; ஹ்ருதயாத் தமநீரநுப்ரவிச்ய ஊர்த்வகா அதோகாஸ் திர்யக்காச் ச தமந்ய:. க்ருத்ஸ்நம் தேஹம் ரக்தம் அஹரஹஸ் தர்ப்பயதி ஜீவயதி ச. தஸ்ய சரீர மநுதாவதோ கதிருபலக்ஷயிதவ்யா) என்கிறார் ஸுச்ருதர் சோணிதவர்ணநீயாத்தியாயத்தில். இதிலிருந்து தேஹத்தில் இரத்தம் ஸதா ஸர்வகாலமும் ஓடிக்கொண்டிருப்பதாக அவர்கள் கருதினார்களேயன்றி, குட்டையில் தண்ணீர் தேங்குவதுபோல் இரத்தம் தேஹத்தில் நிலைத்திருந்ததாக எங்கும் அவர்கள் கூறுவதில்லை. ஆனால் வில்லியம் ஹார்வி என்பவர் கி பி. 1616-இல் இரத்தம் தேஹத்தினுள் குழல்களின் மூலயாய் ஓடும் உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு முன், அது பிரவஹித்துக் கொண்டிருப்பதாக உலகில் ஒருவருக்கும் தெரியாதென்று சொல்லுவது எவ்வளவு அஸம்பாவிதமான மொழியோ நீங்களே யோசித்துப் பாருங்கள்.

த்ரிதோஷங்கள்:—

இயற்கையான சாரீரக்ரியாரீமசங்களையும் பிரயோஜனைம்சங்களையும் பிஸியாலஜி என்கிறார்கள். ஆயுர்வேதத்தில் இந்த பாகம் வாத-பித்த-கபங்கள் என்கிற த்ரிதோஷ தத்துவ ரூபமாகவும், ஸாங்க்ய தத்துவரூபமாகவும் நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்விஷயந்தான் பிராணிகளின் ஆரோக்கியநிலைமையிலும், அநாரோக்கியநிலைமையிலும் தேஹத்தில் ஸமநிலைமையையும் விஷம நிலைமையையும் உணர்வதற்கு அஸ்திவாரமாக ஆயுர்வேதத்தில் அமைந்திருக்கிறது. ஆயுர்வேதவைத்தியத்திற்கும் மேனாட்டு வைத்திபத்திற்கும் மத்தியில் மேலோங்கி, எல்லிச்கல் போல் நின்று அடிப்படையான பேதத்தைக் காட்டும் அம்சமும் இதுதான். ஸாங்க்யம், யோகம் என்கிற சாஸ்திர தத்துவங்களோடு இந்த ஸூக்ஷ்ம சாரீரதத்துவம் ஸம்பந்தப்பட்டிருக்கிறது. ஆகவே பிராணி தேஹம் பஞ்சபூத மயமானது என்றும், அப்பூதங்களைப் பிரக்ருதி

யானது நமது திருஷ்டி கோசரமாகச் செய்ய முயலும் போது இக்காலத்திய ஸூக்ஷ்மதர்சநயந்திரத்தின் உதவியினும் உற்று நோக்கித் தெரிந்துகொள்ள முடியாத படி அவ்வளவு நுண்ணியச் சத்தான 'பூதாதி' என்கிற தத்துவமும், தன் மாத்திரைகள் என்கிற நுண்ணிய அம்சங்களும் ஸ்த்தூல பூதங்களாகமாறவேண்டியிருக்கின்றன. இரஜோகுணச் சேர்க்கையினல் வாயு என்கிற ஸூக்ஷ்ம தத்துவம், ஸ்த்தூல பூதரூபமான பரிணமத்திற்குக் கருவியாய் அமைவதோடு, அவ்வித பரிணமத்தினலான இத்தேஹத்தை வளரச் செய்யவும், அங்கப் பிரத்யங்கங்களைக் கொண்டு தேஹவேலைகளை நிறைவேற்றவும், சைதந்யம் என்கிற இந்த்ரியஞ்ஞானத்தைக் கொடுக்கவும் அந்த வாயு என்கிற தத்துவமே கருவியாயமைகின்றது. ஆகாசதன்மாத்திரை, வாயுதன்மாத்திரை இவற்றிலிருந்து இயற்கையாய் பகவத் ஸ்ருஷ்டியில் ஏற்படும் இவ்வாதம் என்னும் தத்துவம் நமது தேஹத்தில் அகில அதிகாரங்களையும் செலுத்துகிறது. உணர்ச்சி-உத்ஸாஹம்-அறிவு முதலியவற்றிற்கு இதுதான் ஆதாரம். பித்தம் கபம் என்கிற மற்ற இரண்டு தாதுக்களுக்கும் தனித்தனியே சுயமான குணங்களும் பிரயோஜனங்களும் உண்டென்றாலும், அவ்விரு தாதுக்களையும், பொதுவாகத் தேஹமனத்தையும் கட்டியாளுவது வாயுவே. ஆகவே இதன் பிரபாவத்தைக் கவனித்த ஸுச்ருதர் "ஸ்வயம் பூரேஷ பகவாந் வாயுரித்யபிசப்திதः. ஸ்வாதந்தர்யாந்நித்யபாவாச்ச ஸர்வகத்வாத் ததைவ ச. ஸ்தித்யுத்பத்திவிநாசேஷு பூதாநாம் ஏஷ காரணம். அவ்யக்தோ வ்யக்தகர்மா ச ருஷிஸ்பர்ச: கர:" என்று இதற்குள்ள அஸாதாரணப் பிரபாவங்களை எடுத்துக் கூறியிருக்கிறார். பித்தம்-கபம் என்கிற மற்ற இரண்டு தாதுக்களும் முறையே தேஜஸ், அப் இப்பூதங்களின் தன்மாத்திரைகளால் ஏற்பட்டவை. இவையும் அததற்குள்ள இயற்கைச் சக்தியைக் கொண்டு தேஹத்தில் சில வேலைகளை நடத்துகின்றன. ப்ருதிவியின் அம்சத்தினலான மாம்ஸ-மேதோ-மஜ்ஜாக்கள் முதலிய தாதுக்களையும், அவ்விதமான இதர ஸ்த்தூலாவயவங்களையும் அததற்கியல்பான வேலையில் செலுத்து

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

வது இவ்வாதமே. ரீராவியோ மின்சாரமோ ஒரு யந்திரத்தை அதற்கியல்பான வேலையில் இயக்குவது போல், வாதமே நமது சரீரத்தில் நடக்கும் ஸகல சேஷ்டைகளையும் இயற்றிவைக்கின்றது. "வா கதி-கந்தயோः" என்கிற தாதுவிலிருந்து வாதம் அல்லது வாயு என்கிற சொல் ஏற்பட்டது. ஆகவே 'கதி' என்கிற பொருளுக்கேற்றபடி சரீரத்தில் உள்ளும் புறமும் நடந்தேறும் இயற்கை-செயற்கையான ஸகல வேலைகளையும் 'கந்தம்' என்கிற பொருளுக்கேற்றபடி தேஹத்திலும் மனதிலும் ஏற்படும் எல்லாவித உணர்ச்சிகளையும் வாயு தன் சக்திப் பிரபாவத்தினல் நிகழ்த்தி வைக்கின்றது என்பது எங்கள் பிஸியாலஜி ஸம்பந்தமான அநேக தத்துவ விஷயங்களுள் ஒன்று.

ஸ்வஸ்த்தவ்ருத்தம்:—

வியாதி வந்து சிகித்ஸை செய்வதை விட, ஆரோக்கிய பரிபாலன விஷயந்தான் முக்கியமாகவும் முதல் விஷயமாகவும் கவனிக்கப்படவேண்டுமென்பது ஆயுர்வேதக் கொள்கை. அவ்விதம் ஆரோக்கிய பரிபாலனம் செய்யும் முறைக்குத்தான் "ஸ்வஸ்த்த வ்ருத்தம்" என்று பெயர். "ஸ்வஸ்த்தஸ்ய ஸ்வாஸ்த்யரக்ஷணம், ஆதாுரஸ்ய வ்யாதிப்ரசமநஞ் சாஸ்ய தந்த்ரஸ்ய ப்ரயோஜநம்" என்கிறார் சரகர். "சிகித்ஸாசாஸ்திரத்தின் முழுப்பிரயோஜனமும் ஆரோக்கியரக்ஷணத்தைத்தான் நோக்கமாயுடையது." (ஸூத்ரஸ்த்தாநே ஸமுத்திஷ்ட: ஸ்வஸ்த்தோ பவதி யாத்ருச:. தஸ்ய யத்ரக்ஷணம் தத்தி சிகித்ஸாயா: ப்ரயோஜநம்) என்று அக்கொள்கையை ஸுச்ருதர் உத்தர தந்திரத்தில் வற்புறுத்திக் கூறியிருக்கிறார். ஆரோக்கியநிலைமையைக் கருத்துடன் பாதுகாக்கும் ஸகல முறைகளும் திநசர்யை, ருதுசர்யை என்கிற பிரகரணங்களில் பரிஷ்காரமாக மொழியப்பட்டுள்ளன. "ஆரோக்கியநிலைமையிலிருப்பவன் தனது ஆயுளைக் காத்து வியாதியில்லாமலிருப்பதற்காக பிராஹ்மமுகூர்த்தத்தில் எழுந்திருக்கவேண்டும். (ப்ராஹ்மே முஹூர்த்த உத்திஷ்டேத் ஸ்வஸ்த்தோ

தஷார்த்தமாயுஷ:) என்பது முதல், சௌச-தந்தாவஸ்தி களும், அந்தந்த ருதுக்களில் பருவகால மாறுபாட்டிற்கு ஏற்றபடி ஆஹார - விஹாரங்கள் முதலியதை மாற்றிக் கொள்ளவேண்டிய ஆவசியகதையையும், மற்றும் ஆரோக் கியத்திற்கு இன்றியமையாத விஷயங்களையும் விஸ்தாரமா கக் கூறுகிறது ஆயுர்வேதம். ஸ்வஸ்த்தவ்ருத்த விஷயம் அஷ்டாங்க ஹ்ருதயத்திலும், விசேஷமாய் சரகஸம்ஹிதை யிலும், ஸுச்ருதத்தில் முக்கியமாக ஸ்வஸ்த்தவ்ருத்தாத்தி யாயத்திலும் படிக்க இரம்மியமாயிருக்கும். தேஹபலத்தை ஸஹஜபலம் (இயற்கையாயுண்டான உடல் வன்மை), காலஜபலம் (பருவங்களின் மாறுபாட்டாலும் வயதாலும் ஏற்படுகிற வன்மை), யுக்திக்ருதபலம் (வியாயாமாதிகளால் ஏற்படுகிற வன்மை) என்று மூன்றுவிதமாகக் கூறி, அவற் றைக் காப்பது எப்படி யென்பதையும் சரகர் விளக்கி யிருக் கிறார். ஆரோக்கியத்தைக் காத்துத் தேஹபலத்தை விருத்தி செய்துகொள்ள, தேஹப்பயிற்சி யெனப்படும் வியாயாமம் வெகு சிறந்த முறை யென்று எல்லா ஆயுர் வேதக் கிரந்தங்களிலும் விவரம் காணலாம். "வ்யாயாம மாசரேந் நித்யம் ஸுராச்ரம-வாதஹா" என்று வாக்படர். "ஆயாஸ முண்டாகுமாறுச் சரீரத்தை உழைப்பது வியாய மம் எனப்படும். அதைச் செய்து விட்டுச் சுகமாகத் தேஹத் தைப் பிடிக்கவேண்டும். இவ்விதம வியாயாமம் செய்வ தால் சரீரபலம் விருத்தியாகும்; தேஹத்தில் ஒருவாறு தேஜஸ் ஏற்படும். அவயவங்களெல்லாம் திரண்டுருண்டு வளரும். வெயில், குளிர், ஆயாஸம் முதலியதைத் தாங் கும் சக்தி யேற்படும். கொழுத்துப் பருத்துள்ள ஸ்தூல தேஹத்தில் பருமனைக் குறைப்பதற்கு இதைவிடச் சிறந்த சிகித்ஸை கிடையாது. எவ்வளவு கடினமான உணவும் எளிதில் அவனுக்கு ஜீர்ணமாகும். குரூபியாயிருப்பவன் கூட அழகாகத் தோற்றுவான்" என்று வியாயாமத்தினால் உண்டாகும் குணம் விசேஷமாக எடுத்துக் காட்டப்பட் டிருக்கிறது.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நிதாநம்:—

ஆயுர்வேதத்தில் த்ரிதோஷதத்துவம் மாதிரியே, வியாதி நிர்த்தாரணத்திற்கு ஏற்படுத்தியுள்ள நிதாந பஞ்ச கம் முதலிய விஷயங்களும் மற்ற எந்த முறையிலும் காண முடியாத விசேஷாம்சங்கள். தேஹத்தின் ஆரோக்கியத் தைக் காத்துவரும் நிலைமையில் மூன்று தாதுக்கள் (சரீரத் தைத் தாரணம் செய்வதால் தாதுக்கள்) என்று வழங்கப் படும் வாத-பித்த-கபங்கள் சுபாவ நிலைமைக்கு அதிகப்பட் டாலும் குறைந்தாலும் தேஹத்தைத் தூஷிப்பிக்குமாகை யால், அவற்றிற்கு அவ்விதக் கோளாறடைந்த நிலைமையில் தோஷங்கள் என்று பெயர். ஒவ்வொரு தோஷத்திற்கும் விருத்தியோ க்ஷயமோ ஏற்பட்டுள்ளபோது, அவற்றின் விக்ருதிக் குறிகள் பிரத்தியேகமாய் விளக்கப்பட்டிருக்கின் றன. அவ்விதம் கூறியுள்ள குறிகளில் எவை பிராணி தேஹத்தில் ஏற்பட்டுப் புலப்படுகின்றனவோ, அவற்றை வைத்தியன் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து, வியாதி யின் ஸந்நிக்ருஷ்ட நிதாநம், (நேர்முகமாய் வியாதியுண்டு பண்ணும் காரணம்), விப்ரக்ருஷ்டநிதாநம் (மறைமுக மான அல்லது பித்ரு பிதாமஹர்கள் முதலியவர் மூலமாய் ஏற்பட்ட காரணம்), அஸாத்மியேந்த்ரியார்த்த ஜந்ய நிதா நம் (இந்த்ரியங்களுக்குப் பழக்கமில்லா விஷய ஸம்பந்தத்தி னல் உண்டான காரணம்) முதலிய இன்னும் பல ஹேதுக் களில் (பரிணாமஜநிதாநம், பிரஜ்ஞாபராதஜநிதாநம், வியாபிசா ரிக நிதாநம், உத்பாதக நிதாநம், வியஞ்ஜகநிதாநம் இவற்றுள் எதனால் வியாதியுண்டாயிற்றென்பதை பரீக்ஷித்தறியவேண் டும். இவற்றுள் ஒன்றுக்கு மாத்திரம் உதாரணம் கூறு கிறேன். ஆமவாத வியாதியில் (கில்வாயு என்று வழங்கப் படுவது) தேஹத்தில் சேரும் ஆமதோஷம் என்னும் விஷம் அவ்வியாதியை உற்பத்தி செய்யும் காரணமாகையால், அது உத்பாதக ஹேதுவாகவும், அவ்வியாதியை வெளிப்படை யான இலக்ஷணங்களைக்கொண்டு தோற்று விப்பவை வாயு வும் கபமுமாகையால் இவ்விரு தோஷங்களும் அவ்வியாதி யில் வியஞ்ஜகஹேதுவாகவும் ஆகின்றன. இப்படியே ரூபம்

என்கிற வியாதி லக்ஷணமும், பிராக்ரூபம் என்கிற உண்டாகப்போகும் ரோகத்தை முன்னதாய் அறிவிக்கும் முற்குறியும், ஒருவனுக்கு உண்டாயுள்ள வியாதியைப் பரிசோதிக்கையில் இரண்டு மூன்று வியாதிகளாகச் சந்தேஹிக்கக் கூடிய ஸந்தர்ப்பத்தில் ஔஷதப் பிரயோகாதிகளைச் செய்து ஏற்படும் பலனிலிருந்து அதை இன்ன வியாதியென்று தீர்மானிப்பதற்கான உபசயம் என்கிற உபாயமும், வியாதி ஹேது தேஹத்திற் பற்றியது முதலாகச் சகல குறிகளோடும் உள்ளும் புறமும் அதன் போக்கையனுஸரித்த அநேகவித நிலைமைகளின் தன்மையை அறிவதற்குபயோகமான ஸம்ப்ராப்தி யென்கிற விஷயமும், ஆக இவை ஒவ்வொன்றும் அநேக வகுப்புகளுள்ளதாய் விவரிக்கப்பட்டிருப்பதை ஆயுர்வேத நூல்களிற் படிக்கும் போது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் நமது வைத்தியாசிரியர்களுக்கு வியாதிபரீக்ஷாகிரமங்களில் இருந்த நுண்ணறிவைப்பற்றி நாம் பெரிதும் பெருமை பாராட்ட வேண்டாமா?

அஷ்டஸ்தாந பரீக்ஷை :—

முற்கூறிய பஞ்ச லக்ஷணங்களைக் கொண்டு வியாதி பரிசோதனை செய்ய தர்சநம், பரிசம், ப்ரச்நம் என்னும் மூன்று முக்கிய உபாயங்களைக்கையாளும்படி "தர்சந-ஸ்பர்சந-ப்ரச்நை: பரீக்ஷேதாத ரோகிணம்" என்கிற விதி கூறுகிறது. ஒரு ஸாதாரண மனிதன் ஒரு ரோகியைக் கண்ணால் பார்ப்பதற்கும், படித்தறிந்து அனுபவம் பெற்ற ஒரு வைத்தியன் ஒரு ரோகியைக் கண்ணால் பார்ப்பதற்கும் விகார நிலைமையுணரும் விஷயத்தில் விசேஷ வித்தியாஸமுண்டு. தேஹநிறத்திலும், உட்கார்ந்து அல்லது படுத்திருக்கும் நிலைமையிலும், முகத்தோற்றத்திலும், நேத்திரப் பார்வையிலும், ச்வாஸச் செய்கையிலும் ஆரோக்கியசாலிக்கும் ரோகிக்கும் உள்ள உண்மையான வித்தியாஸங்களை விஷயதத்துவமுணர்ந்த ஒரு வைத்தியனுடைய கூர்மையான புத்தி வெகு நுட்பமாய் அறியும். தர்சநம் என்னும்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

பரீக்ஷோபாயத்தின் கருத்து அதுதான். தேஹத்தினுள் இயற்கையாயேற்படும் சப்தங்களையும், விகாரமடைந்துள்ள அவயவங்களிலிருந்து தோன்றும் மாறுபட்டச் சப்தங்களையும் தட்டிப் பார்த்தோ, செவிகளைச் சேரவைத்துக்கவனித்தோ செய்யப்படும் பரீக்ஷாமுறையினால் ஆரோக்கியா நாரோக்கிய நிலைமைகளை அறியலாம் என்பதால் சப்த பரீக்ஷைக்கான மூலக்கொள்கை நமக்குப் புதிதல்ல வென்று தெரியவருகின்றது. மேனாட்டு வைத்தியர்கள் உபயோகிக்கும் ஸ்டெதஸ்கோப் என்கிற கருவியைக் கொண்டு சப்த பரீக்ஷை செய்யும் உபாயம், நமக்கு ஏற்கனவே இருந்த முறையின் அபிவிருத்தியே தவிர வேறல்ல வென்பதை உணராமல், அது ஒரு புதிய தந்திரம் என்று பலர் பிரமிக்கிறார்கள். பரிஸித்தல், ப்ரச்நம் இவ்வுபாயங்களும் வியாதி பரிசோதனையில் வைத்தியர்களுக்கு அநேக வழியில் உபயோகப்படுகின்றன. நாடீபரீக்ஷை யென்பது வைத்தியத்திலும், விசேஷமாக யோகத்திலும் முயன்றிருந்த மஹரிஷிகள் ஏற்படுத்திய அபூர்வ முறை. நாடீவிஞ்ஞானம, நாடீநிர்ணயம முதலிய நூல்கள் ஸம்ஸ்க்ருதத்திலும், திருமூலர் நாடி முதலியது தமிழிலும் இப்பரீக்ஷா முறைக்கு மிக்க உபயோகமான நூல்களாகும். முன்னால் தனிமையாகநின்ற இவ்விஷயத்தை வைத்தியக்கிரந்தத்துடன் முதன் முதல் தொகுத்து இணைத்த வைத்திய குரு பதின்மூன்றும் நூற்றாண்டில் இருந்த சார்ங்கதரனே. இதன் ஸம்பந்தமான லக்ஷணக் கிரந்தங்களைக் கற்றறிந்து, விசேஷ அனுபவத்தையும் பெற்று, நாடீபரீக்ஷையில் நல்லறிவு பெறலாமேயன்றி, சொற்பப் பயிற்சியினால் அதில் திறமையடைந்து விடுவது முடியாத காரியம். நிமிஷத்திற்கு இத்தனை முறை நாடியடிக்கின்றதுஎன்பதையும், அவ்வெண்ணிக்கை முதலியதிலுள்ள சில ஏற்றத்தாழ்வுகளையும மாத்திரம் கைபார்த்துத் தெரிந்துக்கொள்வது நாடீபரீக்ஷையில் பூர்ணஞ்ஞானத்தைக்காட்டாது. ஒரு ஸங்கீத வித்வான் வீணை யேந்தி வாசிக்கும் போது, அதன் தந்திக்கம்பிகள் கம்பங்கொண்டு இசைந்தெழும் தொனியிலுள்ள ஒவ்வொரு ஸூக்ஷ்மாம்சத்தின் விசேஷத்தையும் அதில் பிரவீணனை அவ்வித்வான்

இனிது உணர்ந்து ஸ்வாரஸ்யம் அனுபவிப்பான்; தந்தியடிக்கும் பரீக்ஷையில் தேற்சியடைந்த மற்றொருவன் தான் கற்ற முறைப்படி அவ்வீணைத் தந்தியை அடிக்க முயன்றால், அதில் அவன் கற்றறிந்த கட-கடசப்தம் எதுவும் உணரமுடியாவிடில் அதற்காக அச்சங்கீத வித்வானுடைய அறிவையோ, அவ்வீணையிலேற்படும் சப்தஸூக்ஷ்மங்களுக்குள்ள ஸ்வாரஸ்யத்தையோ குறைகூறுவது முறையா? இவற்றைத் தவிர ஜிஹ்வா பரீக்ஷை, நேத்திர பரீக்ஷை, மல-மூத்திர பரீக்ஷைகள் முதலிய வியாதி நிர்த்தாரணத்திற்கான அடிப்படையான கொள்கைகளையும், உபாயங்களையும் முற்காலத்திய சாஸ்திரஞ்ஞர் கையாண்டும், அவ்விதிகளை எழுதியும் வைத்திருக்கிறார்கள். தோன்றியவாறு சிகித்ஸைக்கு ஆரம்பித்துவிடாமல், விவேகபுரஸ்ஸரமாக வியாதியைப் பரீக்ஷித்து நிர்ணயம் செய்துகொண்டு, பிறகு அதற்கு ஏற்ற ஔஷதம் இன்னதென்று நிச்சயித்து, அதற்குப் பிறகுதான் சிகித்ஸாக்ரமத்தை ஆரம்பிம்க்க வேண்டும் (ரோகமாதௌ பரீக்ஷேத ததோனந்தரமௌஷதம். தத; கர்ம பிஷக் குர்யாத் வ்யாதி ரேவம் ப்ரசாம்யதி) என்றும், இவ்விதியை மீறுமற் செய்யப்படும் சிகித்ஸைதான் வியாதியைப் பற்றறப் பரிஹரிக்கும் என்றும் பிராசீன வைத்தியாசிரியர்கள் கூறுவது வழக்கம். சிகித்ஸைக்கு முன்பு வியாதியைப் பரிசோதித்து நிர்த்தாரணம் செய்வது வைத்தியருடைய கடமை யென்பதையும், வியாதி நிர்த்தாரணம் மிகப் பிரதானமான விஷயமென்பதையும் உணர்ந்தே முற்காலத்திய நமது வைத்திபாசிரியர்கள் அவ்விஷயத்தைத் தனியாகப் பிரித்துக் கூறியிருப்பதுடன், "மாதவநிதானம்" முதலிய தனிக்ரந்தங்களும் அதற்காக இயற்றப்பட்டுள்ளன.

சிகித்ஸா க்ரமங்கள் :—

ரோகபரிஹாரத்திற்கான எல்லா முறைகளுக்கும் 'ஆதுரவ்ருத்தம்' என்பது பொதுப் பெயர். ஆரோக்கியசாலிகள் அநுஷ்டிக்கும் தினசர்யாதி க்ரமங்களுக்கு 'ஸ்வஸ்த்த

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

வ்ருத்தம்' என்று பெயர்; அதைப்பற்றி முன்பே விளக்கியிருக்கிறேன். ஆஸ்பத்ரிகள் என்று இப்போழுது வழங்கப்படும் வைத்தியசாலைகளைப் போன்ற ஸ்த்தாபநங்கள் ஆயுர்வேதப் பிரவர்த்தகர்களால் ஆதியில் "ஆதுராலயங்கள்" என்று வழங்கப்பட்டன. ரோகங்களைப் பரீக்ஷித்து, அதன் பிறகு சிகித்ஸைக்கு ஆரம்பிக்கவேண்டுமென்கிற நிபந்தனையோடு மாத்ரம் விஷயம் நின்றுவிடவில்லை. கோளாறடைந்துள்ள தோஷம் அல்லது தோஷங்கள், தோஷங்களால் தாக்கப்பட்டுள்ள தாதுக்கள், தேஹத்தில் முக்கியமாகப் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசம், பிணியாளின் தேஹபலம், சிகித்ஸை செய்யவேண்டிய காலநிலைமை, ரோகியின் ஜாடராக்னியினுடையஸ்திதி, அவனுடைய பிரக்ருதி, வயது, மனோநிலைமை, ஆஹார-விஹாரங்களில் அவனுக்குள்ள பழக்கம், மற்றுமுள்ள பல விதமான ஸந்தர்ப்பங்களுக்கேற்ற நிலைமைகள் இவற்றை மிகவும் நுட்பமாக முற்றிலும் உற்றுப் பரிசிலனை செய்து, முடிவில் கோளாறடைந்த தோஷங்களையும், அவற்றிற்கு மிகவும் ஏற்ற பரிஹாரங்களையும் யோசித்துத் தீர்மானிக்கவேண்டியது வைத்தியனது கடமை. (தூஷ்யம் தேசம் பலம் காலமநலம் ப்ரக்ருதிம் வய:. ஸத்வம் ஸாத்ம்யம் ததாஹாரம் அவஸ்த்தாச் ச ப்ருதக்விதா;. ஸமீக்ஷ்யஸமீக்ஷ்யாஸ் ஸமீக்ஷ்யைஷாம் தோஷௌஷத நிரூபணே. யோ வர்தேத) என்று நமது வைத்திய சாஸ்திரம அவ்வளவு நுட்பமாகவும் சிரத்தையோடும் சிகித்ஸையை ஆரம்பிக்கும்படி நியமங்களை ஏற்படுத்தி யிருக்கிறது. சிகித்ஸை செய்வதிற் சிறிது காலஹரணம் செய்தாலும், அது அபாயங்களுக்கும் உபத்ரவங்களுக்கும் காரணமாம் என்னும் விஷயத்தையுணர்ந்தே "க்ரியாகாலம் ந ஹாபயேத்" என்றும் கூறியிருக்கிறார்கள்.

ஆயுர்வேதத்தில் சிகித்ஸா க்ரமங்களும் அபூர்வமான வழியை அவலம்பித்து அமைக்கப்பட்டிருப்பது ஸாதாரணமாகப் பலருக்குத் தெரியாது. தேஹத்திற் சேர்ந்துள்ள தோஷங்களை வெளிப்படுத்தி வியாதி நிவாரணம் செய்யு முறை சோதநம் என்றும், அவ்விதமில்லாமல்

கோளாறடைந்த தோஷங்களைச் சமநிலைமைக்குக் கொண்டு வந்து ரோகபரிஹாரம்செய்யு முறை சமநம் என்றும் வழங்கப்பட்டு, அநேகமாய் வேறு பலவகையான சிகித்ஸைகளும் இவ்விரண்டு அஸ்த்திவாரத்தின் மேலேயே அமைந்திருக்கின்றதாகச் சொல்லலாம். (1) விரேசநம், வமநம், நஸ்யம், நிரூஹவஸ்தி, அநுவாஸநவஸ்தி, இரக்தமோக்ஷணம் முதலிய சிகித்ஸைகள் முந்தியதையும், (2) பாசநம், தீபநம், லங்கநம், ஸ்நேஹநம், வியாயாமம், மர்த்தநம். பரிஷேகம் முதலியவை பிந்தியதையும் அநுஸரித்துச் செய்யப்படும். பரிஹார கிரமங்களாகும். பொதுவாகத் தேஹதாதுக்களில், அல்லது ச்வாஸாசய மூத்திராசயாதிகளில், அல்லது கோஷ்டத்திலுள்ள ஆமாசய-பக்வாசயாதிகளில் அடைந்துள்ள விஷச் சத்துக்களை அல்லது மலங்களை உடலினின்றும் வெளிப்படுத்திஞலன்றி, வியாதிநிவாரணம் ஆகாதென்கிற நிலைமைகளில் முற்கூறிய சோதநமுறைகளுள் ஏற்றதான ஏதேனும் ஒன்றைப் பிரயோகிப்பதும், உள்ளடங்கிய மலம் முதலியது மிகச் சொற்பமாயிருந்து, பிணியாளி சோதநசிகித்ஸையைத் தாங்கக் கூடாதவனெனத் தோன்றும்போது யுக்தப்படி சமாமுறைகளில் ஒன்றைக் கொண்டு சிகித்ஸை செய்வதும் சாஸ்திரபத்ததியாம். வியாதி நிவாரணத்திற்கான சிகித்ஸைகளுள் மூலாதாரமாயிருப்பவை சமநம், சோதநம் என்று இரண்டென்றாலும், தேஹம் வலுப்படுவதற்கு அல்லது பருப்பதற்கும், இந்திரிய பாடவங்கள் மேன்மை யுறுவதற்கும் உபயோகமான மற்றொரு சிகித்ஸா முறைக்குப் பொதுவாக ப்ருஹ்மணம் என்று பெயர். ப்ருஹ்மண முறையில் ரஸாயநம், வாஜீகரணம் முதலிய சிகித்ஸைகள் சேரும்.

நவீன வைத்திய முறையில்தான் விதம் விதமான சிகித்ஸைகளெல்லாம் கண்டுபிடித்திருப்பதாகப் பிரமிக்க வேண்டாம். வமநம், விரேசநம், வஸ்தி, ரக்தமோக்ஷணம் முதலிய சோதநசிகித்ஸைகள் தேஹத்தின் உட்புறத்தைச் சுத்தம் செய்யும் முறைகளாகையால், அவற்றை அந்த: பரிமார்ஜநசிகித்ஸை யென்றும், அப்யங்கம், ஸ்வேதம், பிரதே

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஹம், ஸேசநம், உந்மர்த்தநம் முதலியவை உடலின் வெளிப்புறத்தைச் சுத்தி செய்வதற்கான பிரயோகங்களாகையால், இவற்றை பஹி:பரிமார்ஜநசிகித்ஸை யென்றும் சரகர் பாகுபாடு செய்திருக்கிறார். இவ்விரண்டையும் சேர்த்துப் பொதுவாக மற்ற ஆயுர்வேதாசிரியர்கள் காய சிகித்ஸை யென்கிற ஒரு தலைப்பின்கீழ் படிக்கிறார்கள். ஔஷதப்பிரயோகங்களாலும், வியாயாமாதிகளாலும் நிறைவேறறப்படுபவை யெல்லாம் காயசிகித்ஸை யென்றும், சஸ்திரங்களையும் - க்ஷாரங்களையும் - ஜலூகா என்கிற அட்டைகளையும் - யந்திரங்களையும் பிரயோகித்துச் செய்யப்படும் சிகித்ஸைகள் சஸ்திரசிகித்ஸை (அல்லது சல்யசிகித்ஸை) என்றும் வேறொரு பாகுபாடும் செய்யப்பட்டுள்ளது. இப்பொழுதுள்ள பிரஸித்தமான சிறந்த நூல்களுள் காயசிகித்ஸாப் பிரதானமான ஆயுர்வேதக் கிரந்தம் சரகஸம்ஹிதை; சஸ்திரசிகித்ஸையைப் பிரதானமாகக் கூறுவது ஸுச்ருத ஸம்ஹிதை; இரு முறைகளையும் விளங்க விவரித்து வெகு ந்ன்றாக இயற்றப்பட்ட விலே பொருந்திய வைத்தியக் கிரந்தம் ஆசார்ய வாக்படருடைய "அஷ்டாங்க ஹ்ருதயம்." இதிலுள்ள விசேஷம் மற்றொன்று. காயசிகித்ஸை, பாலர்களுக்கு அவசியமான பிரத்யேக சிகித்ஸை, மனக்கோளாறு, கிரஹக்கோளாறு முதலியதாலான வியாதிகளுக்கு ஏற்ற சிகித்ஸை, நாசி-கண்-காது-முகம்-தொண்டை முதலிய தோளுக்கு மேற்பட்ட அவயவங்களிற் காணும் கோளாறுகளுக்குபயோகமான சிகித்ஸை, சல்யம் என்கிற சஸ்திர சிகித்ஸை, விஷ சிகித்ஸை, வ்ருத்தர்களுக்கு அவசியமான சிகித்ஸை, ஆண்மையை அதிகரிக்கச் செய்யும் சிகித்ஸை என்கிற எட்டுவித மான சிகித்ஸைகளைப் பற்றி சரக-ஸுச்ருதாதிகள் குறிப்பிட்டிருக்கிறார்களே யன்றி, அஷ்டாங்கஹ்ருதயத்தில் தான் வாக்படர் அவ்வெண்வகைச் சிகித்ஸைகளையும் ஒழுங்குப் படுத்தி அனைத்தையும் விடாது விளக்கி, நம்போன்ற அவரது பிற்காலத்தியவருக்கு உதவியிருக்கிறார். முற்குறித்த அநேகவித சிகித்ஸா கிரமங்களையும், அவற்றின்

அவாந்தர பேதங்களாயுள்ள வாதாதபிகம்-குடீப்ராவேசிகம் - ஜேந்தாகம்-சிரோவஸ்தி - விராவ்யதை முதலிய பல வேறு சிகித்ஸா முறைகளையும் நமது கிரந்தங்களிற் படிக்க சிரத்தை யெடுத்துக் கொள்ளும் விவேகிகள் ஆயுர்வேதம் வியாதி நிவாரணத்திற்கு அவசியமான அகில சிகித்ஸோபாயங்களுக்கும் ஆகரமென்கிற முடிவுக்கு வருவார்கள்.

சீதோபசார-உஷ்ணோபசாரங்கள்:—

தாபஜ்வரத்தில் உஷ்ணம் தணிய சிதோபசாரம் (application of ice) செய்யும் முறை மேனாட்டுவைத்தியரால்மட்டும் சுயாளப்படுவதென்கிற தவறுதலான அபிப்பிராயம் சிலருக்குண்டு. அபிந்யாஸஜ்வரம், ஆந்த்ரிக ஸந்நிபாதஜ்வரம், ஸந்நியாஸம் என்கிற மூர்ச்சை முதலிய ஸங்கடமான வியாதி நிலைமைகளில் சிதோபசாரம் செய்யும் முறை மிகவும் முக்கியமான சிகித்ஸை யென்று ஆயுர்வேத நூல்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விளங்கக் கூறியிருக்கின்றன. ஆறும் நூற்றாண்டுக்கு முன்பிருந்த ஆசார்ய வாக்படர் "மிகவும் கடுமையான ஜ்வரங்களைத் தணிப்பதற்கும், கடுமையான வாந்தியைச் சமனம் செய்வதற்கும் சிரஸில் அதி குளிர்ச்சி பொருந்திய தண்ணீரைத் தாரையாகத் தொடர்ந்து விடவேண்டும்"(ஜேதும் ஜ்வராந் ப்ரஷமாநிஹ வாந்தி காந்த்யை மௌளௌ ஸுசிதளஜலஸ்ய ததீத தாராம்) என்று (இரஸ. ர. ஸமு அததி 12.) மொழிந்திருக்கிறார் என்றால், இவ்வித சிகித்ஸாபிரயோகங்களை எவர் எவரிடமிருந்து கற்றார் என்பதை நேயர்கள் தாமே தெரிந்து கொள்ளட்டும். இவ்வித சிகித்ஸோபாயங்கள் ஆயுர்வேதக்கிரந்தங்கள் இயற்றிய அஸாதாரணப் பிரபாவம் படைத்த ஆசார்யர்களுக்கு வெகு ஸாதாரணமாகத் தோன்றக்கூடிய விஷயங்களே யன்றி வேறல்ல. ஏனெனில் சிகித்ஸைக்கு அவசியமான விதிகளையும் உபவிதிகளையும் இயற்றும்போது இவ்வகையான நியாயங்கள் அநேகம் அவர்களுக்கு இயற்கையிலேயே தோன்றியிருக்குமல்லவா?

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

அவ்விதம் ஜ்வராதிகளில் மிகக் குளிர்ந்த நீரை சிரஸ்ஸிற் பிரயோகிக்க "ஊஷ்ணாதிகமான வியாதிகளைச் சீதோபசாரத்திலும் சீதளத்திலும் ஏற்படும் கோளாறுகளை உஷ்ணப் பிரயோகத்திலும் தீர்க்கவேண்டும். அப்படிச் செய்யும் வைத்தியர்கள் தம் முயற்சியிற் பயன் பெறுவர்" (சீதேநோஷ்ண க்ருதாந் ரோகாந் சமயந்தி விபர்யயாத்:. யேது சீதக்ருதா ரோகாஸ் தேஷாமுஷ்ணம் பிஷக்ஜிதம்) என்று பொதுவாக விதி யேற்படுத்தப்பட்டிருக்கிறது. இன்னும் பலவேறு சிதோபசார முறைகளைக் கூறும்போது "சந்தநபங்கம் ஸுசிதமாலிம்பேத்; சிரஸி ஹிமோதகம் வா முஹுர் முஹுஸ் ஸிஞ்சேத்" என்று சரகர் ஹிமோதகம் என்று பனிஜலத்தையே ஸ்பஷ்டமாகக் குறிப்பிடுகிறார்.

ஸுசிகாபரணம்:—

சிகித்ஸைகளை நிறைவேற்றும்போது, பலவித உபாயங்களை ஊஹித்தறிந்து, அனுபவத்திற்கு அவ்வுபாயங்களைக் கொண்டுவருவதில் பிஞ்சின பிரதிபாசாலிகளான வைத்தியாசிரியர்களுக்கு ஏற்பட்டிருந்த அறிவு ஸர்வதோமுகமானது என்பதைக் குறிக்க மற்றொரு திருஷ்டாந்தமும் கூறுகிறேன். "கடுமையான ஸந்நிபாத விகாரங்களில் முறைப்படி தயார் செய்த மிருதஸஞ்ஜீவநி யென்கிற ஔஷதத்தைச் சிறிதளவு ஜலத்தில் நன்றாகக் கலந்து மிகக் கூர்மையான ஊசியினால் தவடையின்மேல் குத்தி, அவ்விடத்தில் அவ்வௌஷதத்தை இரத்தத்துடன் கலக்கச் செய்துவிடவேண்டும்; பிராணபாயகரமான நிலைமையில் இப்பிரயோகம் பிணியாளியின் உயிரைக் காக்கும். ஊசியினால் குத்திப் பிரயோகிக்கப்படும் இம்முறை ஸுசிகாபரணம் எனப்படும்" (ம்ருதஸஞ்ஜீவநாக்யோயம் ஸுசிகாபரணே ரஸ:. ஸந்நிபாதேந தீவ்ரேண முமூர்ஷோர் பூகதஸ்ய ச. தாலுநி ப்ரச்சயித்வாத ரஸமேநம் விநிக்ஷிபேத். ஸுச்யாதிஸுக்ஷ்மயா தோயயுக்தயா ரக்தமிச்ரித:) இரஸ.

ர. ஸமு. அத். 12.) என்று வாக்படர் கூறியிருக்கிறார். தேஹத்தில் ஊசிமுனையினல் கீறி, அவ்விடத்தில் இரக்கத்திற் சேரும்படி பிரயோகிக்கப்படும் சிகித்ஸை அல்லது ஔஷதம் ஸூசிகாபரணம் அல்லது ஸூசீமுகப் பிரயோகம் என்று ஆயுர்வேதத்தில் வழங்கப்படுகிறது. "பிரம்மத்வாரம் என்கிற சிரக்கபால மத்தியில் ஊசிமுனையினல் கீறி, அங்கு ஒரு குன்றுமணி யெடை ஸூசீமுகம் என்னும் ஔஷதத்தை இரக்கத்திற் கலக்கும்படியாகப் பிரயோகித்துவிட்டால் ஸந்நிபாதம், தந்த்ரிகா (டிடானெஸ்), தநுர்வாதம், அபஸ்மாரம் முதலிய வியாதிகளை அவ்வௌஷதப் பிரயோகம் உடனே தீர்க்கும்" (சுஸ்ரஸவரம் ஸூசீமுகம் நாமத:. ப்ரஹ்மத்வாரவிகீர்ண லோஹிதலவே குஞ்ஜகமாத்ரம் தேதத்**. இரஸ. ர. ஸமு. அத்தி. 12) என்றும் கூறப்படுகிறது. ஆகவே ஔஷதங்களை முகத்தினல் விழுங்குவது, வஸ்தி முதலிய உபாயங்களால் குதம முதலியவற்றிற் பிரயோகிப்பது முதலிய முறைகளை மாத்திரமல்ல, இரக்கத்திற் குத்திச் செலுத்தினல் அது தேஹ தாதுக்களிற் பரவி, எளிதிற் பயனுண்டுபண்ணும் என்னும் தத்துவத்தை நமது முன்னோர் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் கண்டறிந்து எழுதி வைத்திருந்தும், அவற்றை நமது வைத்தியர்கள் கருத்துடன் படித்துப் பிரயோகிக்காமல் இருந்து விட்டனர். வைத்தியசாஸ்திரத்தில் சில்லரையாக அடங்கிய சிற்சில கலைகள் இப்பொழுது மேனாட்டு முறையைக் காண்பவருக்குச் சிறப்பாகத் தோன்றிய போதிலும், நமது பூர்வாசார்யர்கள் இவற்றிற்குக் கிருஷி செய்து, விதைகள் விதைத்து, முளைகளைக் கிளப்பிவிட்டுப் போக, அவற்றை எளிதில் விருத்தி செய்து, பலன்களை ஏகபோகமாய் அனுபவிக்கும் ஸந்தர்ப்பங்களும் ஸௌகர்யங்களும் அன்னியருக்கு அனுகூலமாய் வாய்ந்தன.

சஸ்த்ர சிகித்ஸை:—

சஸ்த்ரசிகித்ஸையில் நாம் வெகு காலமாக நமது கைப்

பழக்கத்தை விட்டு விட்டது நமது மத்தியகாலத்தவர் செய்துவிட்ட ஒரு தவறுகும். எல்லாத் துரைகளிலும் ஆயுர்வேதம் ஸம்பூர்ணமானதென்றும், சஸ்த்ரசிகித்ஸையில் மாத்திரம் சில காலம் மேனாட்டு முறையின் உதவியை நாட வேண்டியிருக்கிறதென்றும் உஸ்மான் கமிட்டி ரிபோர்ட்டிலேயே கூறப்பட்டிருக்கிறது. ஆனல் சஸ்த்ரசிகித்ஸைக்கு அவசியமான அகில அம்சங்களையும் அநேகமாய் நமது பூர்வாசாரியர்கள் தெரிந்துகொண்டும், அனுஷ்டித்து அனுபவம் அடைந்தும், அவற்றைப்பற்றிய நூல்களெழுதியும் இருக்கிறார்கள். கழுத்துக்குக் கீழ்ப்பட்ட அவயவங்களில் செய்யப்படும் சஸ்த்ரசிகித்ஸையை ஸாமாந்ய சல்ய சிகித்ஸையெனவும், கழுத்துக்கு மேற்பட்ட அவயவங்களில் செய்யப்படுவதை சாலாக்ய சிகித்ஸை யெனவும், இவ்வாறு இதில் ஸாமாந்ய-விசேஷ சிகித்ஸைகளையும் பகுத்தறிந்து நடத்தியிருக்கிறார்கள். நமது சல்யதந்த்ரத்தில் (சஸ்த்ரசிகித்ஸையில்) ஆயுர்வேதாசாரியர்கள் எழுதியுள்ள ஏராளமான விஷயங்களையும், அவற்றின் ஒழுங்குகளையும் உற்றுப் படித்தால், நாம் அதை அப்யஸிக்காமல் வாளா யிருந்ததைப்பற்றிப் பெரிதும் வருந்தவேண்டி யிருக்கிறது. இச்சிகித்ஸையில் உபயோகிக்கப்படும் கருவிகளைப் பொதுவாக யந்த்ரங்கள் என்றும், சஸ்த்ரங்கள் என்றும் பகுத்து, அவற்றில் ஒவ்வொரு யந்த்ரத்திலும் சஸ்த்ரத்திலும் உட்பிரிவுகள் உட்பட ஒவ்வொன்றுக்கும் இலக்ஷணங்களும் உபயோகங்களுங் கூட விஸ்தாரமாக ஸுச்ருதராலும், வாக்படராலும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. வித்ரதி முதலிய ஸாதாரண சிழ்க்கட்டி முதலியதை அறுத்துச் செய்யப்படும் சஸ்த்ரசிகித்ஸை இருக்கட்டும்; சித்ரோதரம், பரிஸ்ராவ்யுதரம், ஜலோதரம் முதலியதில் வயிற்றைக் கிழித்து, உள்ளடங்கிய குடல் முதலியதில் சஸ்த்ரமிடும் வெகுப் பிரபலமான சிகித்ஸைகள் ஸுச்ருதர் முதலியவர்களால் அனுபவபூர்வகமாக விவரிக்கப்பட்டிருப்பதைப் படிக்க ஸ்வாரஸ்யமாயிருக்கும். முறை தவறுன நிலைமையில் கர்ப்பத்திலிருந்து சிசு வெளிவரும் வகைகள் விஷ்கம்பம், பிரதி

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குரம், பரிகம, கிலகம என்கிற நான்கு வகையான மூடகர்ப் பங்களென்கிற விக்ருதப் பிரஸவத்தில், ஒழுங்கீனமாகத் திரும்பியுள்ள சிசுவைச் சரியான நிலைமையிற் செலுத்தி, அதைத் தாயாருக்குக் கெடுதி நேரிடாவண்ணம் வெளிப் படுத்துவதற்காக அங்குலிசஸ்திரம்,மண்டலாக்ரம் முதலிய கருவிகளை யுபயோகித்து, எந்தெந்த பாகம் வெளிவர முடி யாமல் குறுக்காக நிற்கிறதோ அந்தந்த அவயவத்தை மண்டலாக்ரம் முதலியதால் அறுத்துச் சிசுவை வெளிப் படுத்தும் வகைகள்யாவும் நவீன நாகரிகர்கள் படித்துப் பார்க்கவேண்டிய அம்சங்கள். "பிரதிலோமம்என்கிற ஒழுங் கின ஸ்திதியில் கர்ப்பாசயத்தில் நிற்கும் சிசுவை இலவம் பிசினும் க்ருதமும் தடவிய கையை விட்டு, யோனிமுகத் துக்கு அநுலோமமாகத் திருப்பி, வலுவாக இழுக்கவேண் டும்"(அநுலோம்ய ஸமாகர்ஷேத் யோநிம் ப்ரத்யார்ஜவாக தம்.ஸாஜ்யசால்மலிபிச்சேந ஹஸ்தேந)என்றும் அஷ்டாங்க ஹ்ருதயம் கூறுகிறது. மேலும் "சிசுவின் சிரஸ் மிகப் பெரி தாயிருந்து கர்ப்பாசயததிலிருந்து வெளிவரக் கூடாமல் தடைபட்டிருந்தால், முதலில் சிசுவின் சிரக்கபாலம் என் கிற மண்டையோட்டை உடைத்து, சிசுவின் முழுத் தேஹத்தையும் வெளியில் சுத்தமாகக் கொண்டுவந்து விட வேண்டும்; இதற்கு மிகத் திறமையுள்ள வைத்தியன் வேண் டும்; அவன் அவ்வாறு சிரக்கபாலத்தை உடைத்த பிறகு, சிசுவின் அக்குளிலாவது,மார்பிலாவது, தவடையிலாவது, மோவாய்க் கட்டையிலாவது, அல்லது வெளியில் இழுப்ப தற்கு அனுகூலமான வேறு எந்த பாகத்திலாவது கர்ப்ப சங்கு என்னும் கருவியை மாட்டி, வலுவாகச் சிசுவை இழுக்கவேண்டும்; மண்டையோடு உடைக்கப்படாத சிசுவை (அது தடைப்பட்டிருந்தால்) அதே ஆயுதத்தை கன்னத்தி லாவது, கண் த்வாரங்களிலாவது மாட்டி இழுக்கவேண் டும்; சிசுவின் தோள் தடையாயிருந்தால் புயத்தை அறுத் தும், சிசுவின் வயிற்றில் வாயு சேர்ந்து விம்மிப்போய் தடையுண்டால், அதன் வயிற்றைக் கீண்டு குடல்களை வெளியில் இழுத்துப் போட்டும், அதன் இடுப்புப் பாகம்

தடையுண்டுபண்ணல், ச்ரோணிபலகம் என்கிற இடுப்பு எலும்புகளை உடைத்தும், மற்றுமுள்ள எந்தெந்த பாகம் தடையுண்டு பண்ணுலும் அந்தந்த அவயத்தைச் சிறு துண் டுகளாக அறுத்து,ஸ்திரீக்கு எவ்வித அபாயமும் ஏற்படாத வகையில் அவளைக் காப்பாற்றுவதற்காக கர்ப்பத்தை நன் றுகச் சுத்தமாய் வெளிப்படுத்தி விடவேண்டும்." [பூர்வம் சிர: கபாலாநி தாரயித்வா விசோதயேத். கக்ஷோரஸ்தாலு சிபுகே ப்ரதேசேந்யதமே பி வா. ஸமாலம்ப்ய த்ருடம் கர் ஷேத் குசலோ கர்ப்பசங்குநா. அபிந்நசிரஸந் த்வக்ஷி கூட யோர் கண்டயோரபி. பாஹூம் சித்வாம்ஸஸக்தஸ்ய வாதாத்மாதோதரஸ்ய ச. விதார்ய கோஷ்டமந்த்ராணி பஹிர் வா ஸந்நிரஸ்ய ச. கடீஸக்தஸ்ய தத்வச் ச தத்க பாலாநி தாரயேத். யத்யத் வாயுவசாதங்கம் ஸஜ்ஜேத் கர்ப் பஸ்ய கண்டச:. தத்தத் சித்வாஹரேத் ஸம்யக் ரக்ஷேந் நாரீஞ் ச யத்நத:.] என்கிற இந்த மூட கர்ப்ப சிகித்ஸைகள் அஷ்டாங்க ஹ்ருதயாதிகளிற் கூறப்பட்டுள்ளவைகளுள் சில.

அஸ்த்தி பங்கம்:—

சஸ்த்ர சிகித்ஸையைப் பல பிரிவுகளாகச் சொல்லும் போது, அஸ்த்திபங்கங்கள் என்கிற எலும்பு முறிவுகளைப் பற்றியும், அவற்றிற்குச் செய்யும் சிகித்ஸைகளைப் பற்றியும் கவனிப்போமாயின், அவ்விஷயம் இன்னும் அருமையாகத் தோற்றும். (1) "எலும்புகள் ஸந்திகளிலும் ஸந்திகளில்லாத விடங்களிலும் இரண்டுவிதமாக முறியலாம் அல்லது கழல லாம். அவற்றிற்கு வீழ்வது தாக்கப்படுதல் முதலியவை காரணங்களாம். அவற்றுள் ஸந்தியென்கிற பூட்டு விலகிப் போயிருந்தால், நீட்டுவதும் மடக்குவதும் கஷ்டமாகும். எலும்பு முறிந்திருந்தால் அதிக வீக்கமும், எந்த நிலைமை யிலும் கடுமையான வலியும், அவயவம் சொற்ப அசைவை யும் தாங்கக் கூடாததாயும், அவ்விடத்தை அழுத்தினல் நரநர என்று ஒருவித சப்தம் தோன்றுவதும் குறிகளாம்.

ROJA MUTUIAH
KOTTAIYUR-6[illegible]06
TAMILNAD

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

எலும்பு முறிவுகளில் இவை சுருக்கமான இலக்கணங்கள். அந்த முறிவு அங்க வகைப்படும். விதாரிதம், கூர்ணம், பிந்நம், விச்லிஷ்டம் என்றவாறு அஸ்த்திபங்கத்தி லுள்ள பேதங்கள் பலவாறு வகுக்கப்பட்டிருக்கின்றன. (பாத-காதாதிபிர் த்வேதா பங்கோஸ்த்நாம் ஸந்த்யஸந்தித:. ப்ரஸாரணாகுஞ்சநயோரசக்திஸ் ஸந்தி முக்ததா.. இதரஸ்மிந் ப்ருசம் சோபஸ் ஸர்வாவஸ்த்தாஸ்வதிவ்யதா. அசக்திச் சேஷ்டிதேல்பேபி பீட்யமாநே ஸசப்தகா. ஸமாஸாதி திபங்கஸ்ய லக்ஷணம் பஹுதா ச தத்). (2) எளிதில் சிகித்ஸிக்க முடியாத (கஷ்டஸாத்ய) அஸ்த்திபங்கங்களின் வகைகளைப்பற்றி விவரிக்கையில் "ப்ராஜ்யாணுதாரி யத்வஸ்த்தி ஸ்பர்சே சப்தம் கரோதி யத். யத்ராஸ்த்திலேச: ப்ரவிசேத் மத்யமஸ்த்நோ விதாரித:. பக்நம் யச்சாபிகாதேந கிஞ்சிதேவாவசேஷிதம். உந்நம்யமாநம் கூடதவத் யச்ச மஜ்ஜநி மஜ்ஜநி. தத் துஸ்ஸாத்யம்" (அஸ்த்தியானது அநேகம் சிறு துண்டுகளாக முறிந்தாலும், பரிசிக்கையில் சப்த முண்டானாலும், ஒடிந்த எலும்பின் ஒரு சிறு துண்டு மற்றோர் எலும்பைப் பிளந்து கொண்டு அதனிடையிற் போய் அழுந்தியிருந்தாலும், அடி தாக்கியதால் ஒடிந்த எலும்பிற் பெரும்பான்மையான பாகம் சிதைந்து போய், சொற்ப பாகமே மிச்சமிருந்தாலும், முறிந்த எலும்பு எடுக்கப்படும்போது விரணங் கொண்டதுபோல் வலியுண்டு பண்ணியவாறு மஜ்ஜா என்கிற எலும்பின் உட்புறத்துச் சோற்றில் அழுந்திக்கொண்டாலும் அவை கஷ்டஸாத்திய மானவையாம். (3) "ஒடிந்த எலும்பு முனைகளை ஒன்று சேர்க்கும்போது, அது ஒழுங்கீனமாக அமைக்கப்பட்டிருந்தாலும், பந்தந முறை தாறுமாறுகச் செய்யப்பட்டிருந்தாலும், அவயவம் அடிக்கடி சோபமடைந்தாலும் அம்முனைகள் ஒழுங்கீனமாக நன்கு ஒன்று சேர்ந்து போய்விட்டால் அக்கோளாறைச் சரிப்படுத்துவதும் கஷ்டஸாத்யம். பிறப்பிலேயே எலும்பு அல்லது எலும்புப் பூட்டுகள் ஒழுங்கீன மடைந்திருந்தால் அதுவும் அஸாத்யமாகும்." (ஸம்யக்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

யமிதமப்யஸ்த்தி துர்ந்யாஸாத் துர்நிபந்நாத். ஸங்கோசா பாதபி யத் கச்சேத் விக்ரியாம் தத் துராஸதம். ஆதிதோ யச் ச துர்ஜாதம் அஸ்த்திஸந்திர் ந ஸாத்யதே.) (4) "பச்சை எலும்புகள் அல்லது மிருது எலும்புகள் வளையும்; உறுதியான நீண்ட எலும்புகள் முறியும்; கபாலாஸ்த்திகள் என்கிற அகன்ற எலும்புகள் பிளவுறும்; சிறிய உருண்டை வடிவமான ருசகங்கள் என்னும் எலும்புகள் உடையும்" (தருணஸ்த்தீநி நாம்யந்தே பஜ்யந்தே நலகாநி ச. கபாலாநி விபித்யந்தே ஸ்ப்புடந்தி ருசகாநி ச) என்று எலும்புகளின் பல வேறு உருவங்களுக்கேற்ற பரிபாஷைச் சொற்களும், அவைகளின் வெவ்வேறு வகையான சிதைவுகளுக்கு ஏற்ற பெயர்களுங்கூட எவ்வாறு நுட்பமாகப் பகுத்து விளக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கவனியுங்கள். (5) அப்பால் கழன்றுபோன பூட்டுகளையும், முறிந்த எலும்புகளையும் எவ்வெவ் வுபாயங்களால் ஒன்று சேர்க்கவேண்டும் என்பதைப்பற்றியும், அவற்றின்மேல் சர்மங்கள் வஸ்திரங்கள் முதலியதை எவ்வாறு சுற்றவேண்டு மென்பதையும் விஸ்தாரமாகவும் ஸ்பஷ்டமாகவும் கூறியிருக்கின்றனர். (6) ஒடிந்த அல்லது நழுவிய எலும்புகளை அல்லது எலும்புப் பூட்டுகளை ஒழுங்காகச் சேர்த்த பிறகு "உசிதப்படி பெரிதாகவோ சிறியதாகவோ உள்ள மூங்கிற் பத்தைகளை (Splints) அவ்வயவத்தின் மேல் வைத்துக் கட்டவேண்டும். அந்த மூங்கிற் பத்தைகள் சிறிதும் சொறசொறப் பில்லாதவையாகவும், எளிதில் வளைந்து போகாது நேராக நிற்கக் கூடியனவாகவும் இருத்தல்வேண்டும்; இப் பத்தைகளுக்குக் கீழே வஸ்திரப் பட்டம் முதலிற் சுற்றப்பட்டிருக்கவேண்டும்; இப்பத்தைகளுக்கு மேலேயும் கட்டுகளிடவேண்டும்; கட்டுகள் தளரக் கூடாது; தளர்ந்தால் பூட்டுகள் நன்றாகச் சேரமாட்டா." (வமசநாளேச் சப்ருதுபிஸ் தநுபிர் வா நிவேசிதை:. ஸுச்லக்ஷ்ணைஸ் ஸுப்ரதிஸ்தம்பைர் வஸ்த்ரபட்டோபரிஸ்திதை:. குசைர்வாபி ஸமம் பந்தம் நாலஸ்யோபரி காரயேத், சிதிலேந ஹி பந்தேந ஸந்தேஸ் ஸ்தைர்யம் ந ஜாயதே.)

(7) அஸ்த்தி பங்கங்களைப் பரிசோதிப்பதிலும், அவற்றிற்குச் சிகித்ஸைகள் செய்வதிலும் நமது ஆன்றோருடைய அறிவும் அனுபவமும் எவ்வளவு உயர் நிலையில் இருந்தன வென்பதை விளக்குவதற்கு விஷயங்கள் விஸ்தாரமாயிருக்கின்றன. "முழங்காலுக்குக் கீழுள்ள ஜங்காஸ்த்திகளாவது, துடையெலும்பாவது, இடுப்பிலுள்ள கபாலாஸ்த்திகளாவது சிதைவடைந்தால் கபாடசயனம் என்கிற விசேஷ பந்தன முறை ஏற்றதாம். பிணியாளியைப் படுக்க வைக்கப் பலகை அடியிற் போடவேண்டும்; காலும் இடுப்பும் பக்கவாட்டில் அசையாதபடி முழங்காலுக்குக் கீழுள்ள ஜங்கைக்கு இரு பக்கங்களிலும் இரண்டு முளைகளும், துடைக்கு இரண்டு பக்கங்களிலும் இரு முளைகளும், நிமிர்த்தியபாதத்தைத் தாங்கும்படி ஒரு முளையும் ஆக ஐந்து முளைகளை அந்தப் பலகையில் அமைத்து, அந்த ஐந்து முளைகளோடு ஒடிந்த காலை அசையாதபடி கட்டிவைக்க வேண்டும். இது "கபாடசயன பந்தனம்" என்று வழங்கப்படும்; இடுப்பெலும்பாவது முதுகெலும்புகளாவது சிதைவடைந்தாலும் இந்த பந்தனமுறை ஏற்றது." (கடி-ஜங்கோரு பக்நாகாம கபாடசயனம் ஹிதம். யந்த்ரணார்த்தம் ததா கீலா: பஞ்ச கார்யா நிபந்தனா:. ஜங்கோர்வோ: பார்ச்வயோர் த்வௌ த்வௌ தல ஏகச்ச கீலக:. ச்ரோணியாம் வா ப்ருஷ்டவம்சே வா பங்கே சைஷ விதிர் ஹித:.) (8) "பூட்டுகள் நழுவிப்போய் நெடுநாட்கள் அலக்ஷ்யம் செய்யப்பட்டு, அதற்கு இடையில் தாதுக்கள் ஒழுங்கினமாய் வளர்ந்து கோளாறுகள் ஏற்பட்டிருந்தால், ஸ்நேஹநம் என்கிற தைலப் பிரயோகங்களாலும், ஸ்வேதநம் என்கிற ஒற்றடங்களாலும் அவ்விடங்களை மிருதுவாகச் செய்து, முற்கூறிய முறைகளை அனுஸரித்தோ, வைத்தியன் தன் பகுத்தறிவைக் கொண்டோ அப்பூட்டு ஒழுங்காகச் சேரும்படியாகச் செய்து, பிறகு வழக்கப்படி பந்தனாதிகளைப் பிரயோகிக்கவேண்டும். ஸந்தியில்லாத இடங்களில் ஒடிந்த எலும்பு ஏற்றக் குறைவாகத் தானே ஒன்று கூடிப்போய், அவயவம் விஷமப்பட்டிருந்தால், அந்த எலும்பை மீண்டும் உடைத்து, உடனே ஒழுங்

கான வகையில் அதைச் சேர்த்து, முறைப்படி அப்பால் பந்தனாதிகளை இடவேண்டும்." (ஸந்தீம்ச் சாவிமுக்தாம் ஸ்து ஸ்நிக்த்தாந் ஸ்விந்நாந்ம்ருதூக்ருதாந். உக்தைர் விதானைர் புத்யா வா யதாஸ்வம் ஸந்தாநமாநயேத். அஸந்தி பக்நே ரூடே து விஷமோல்பணஸாதிதே. புநராபோத்ய யமயேத் ததோ பந்நவதாசரேத்) என்றவாறு அஷ்டாங்க ஹ்ருதயத்தில் வாக்படர் இவ்வளவு ஸ்பஷ்டமாகவும் அநுபவ ஸாத்யமாகவும் விஷயங்களை விளக்கியிருக்கும்போது, சஸ்திரசிகித்ஸை ஆயுர்வேதத்திற்குப் புதிதானதென்றும், மேனாட்டாரிடமிருந்து நாம் கடன் வாங்கவேண்டுமென்றும் கருதுபவருக்கு நான் என்னென்று பதில் கூறுவது?

பந்தன முறைகள்:—

விரணங்களிலும், எலும்பு முறிவு முதலியவற்றிலும் மேலே இடப்படும் பந்தனங்கள் என்கிற கட்டுகள் ட்ரயாங்குலர் பாண்டேஜ், T பாண்டேஜ் முதலியவகைகள் மேனாட்டுவைத்தியர்களால் அநுபவபூர்வகமாய் கையாளப்படுவது போல், அவற்றினும் நாலைந்து மடங்கு அதிக பந்தனமுறைகள் நேர்த்தியான வகையில் நமது வைத்திய முறையிற் கூறப்பட்டிருப்பவைற்றைக் கொண்டு நிர்மிக்கமுடியும். கோசம், ஸ்வஸ்திகம், முத்தோளி, சீநம், தாமம், அநுவேலிதம், கட்வா, விபந்தம், ஸ்த்தகிகா, விதாநம், உத்ஸங்கம், கோபணம், யமகம், மண்டலம், பஞ்சாங்கி என்கிற பரிபாஷைகளைக் கொண்டு பதினைந்து விதமான பந்தனக் கிரமங்கள், அவை பிரயோகிக்கப்படும் அவயவங்களுக்கு அநுரூபமான வகையில், அதனதன் உருவத்திற்கேற்ற பெயர்களுடன் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அல்லாமலும் அவ்வித பந்தனங்களைப் பிரயோகிக்கையில் காடபந்தனமாகவோ, ச்லதபந்தனமாகவோ, ஸமபந்தனமாகவோ (கெட்டி, தளர்வு, நடுத்தரம்) இருக்கவேண்டுமென்று அவற்றின் அழுத்தத்திலும் மூன்று வகைகள் உண்டென்பதை வைத்தியர் கவனித்துச் செய்யவேண்டும் எனப்படுகிறது. பந்தனோபயோகமாக இக்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

காலத்தில் வழங்கப்படும் லிண்டு, பாண்டேஜ் வஸ்திரம் முதலியவைகளும் கவலிகை, விகேசிகா, பட்டபந்தநம் முதலிய பெயர்களுடன் அவை இவ்விதம் இருக்கவேண்டுமென்கிறவிவரங்களும் ஆயுர்வேத நூல்களிற் கூறப்படாமலில்லை.

விசேஷ சஸ்திர சிகித்ஸை:—

நாசி முதலிய அவயவம் சிதைவுற்றால், பக்கத்துத் தவடையின் மேல்தோலை முறைப்படிக் கிண்டெடுத்து, நாசியின் சிதைவுற்றப் பாகத்தில் அதை அப்படியே மடித்துச் சேர்த்து, மூக்கை ஒழுங்காக்கலாம் என்கிற இந்த முறை (அஷ்டாங்க-உத்தர- நாஸாரோகப்ரதிஷேதம்) (ரைனே பிளாஸ்டிக் ஸர்ஜரி) ஆயுர்வேத வைத்தியத்திலிருந்துதான் மேனாட்டார் தெரிந்துக்கொண்டதாகக் கூறப்படுகிறது.ஊர்த்வஜத்ரு சிகித்ஸையைச் சேர்ந்த விசேஷசஸ்திர சிகித்ஸைகளுள் சாலாக்ய சிகித்ஸையும் சேர்ந்தது. கண், காது, நாசி முதலிய வற்றில் செய்யப்படும் சஸ்திரசிகித்ஸை சாலாக்ய மென்று முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். இவற்றிற்காகத் தனித் தனியே விதேஹதந்திரம் என்றும், நிமிதந்திரம என்றும், சக்ஷுஷ்யதந்திரம் என்றும் பல நூல்கள் இயற்றப்பட்டிருந்து பிரக்ருதம் அவை காணக் கிடைக்கவில்லை. இப்பொழுது பல்வைத்தியர்கள் எங்கு பார்த்தாலும் அதிகரித்து வருகிறார்கள். ஆயுர்வேதவைத்தியர்களிற் சிலராவது இம்முறையைக் கற்று ஒழுங்காக வைத்தியம் செய்யக்கூடாதா? "ஒரு பல் சொத்தையாய் அதன் உள்ளே த்வாரம் விழுந்திருந்தால், அதைப் பிடுங்கியெடுத்து விடவேண்டும; சொத்தையான பாகத்தைச் சுத்தி செய்து சூஷாரம் என்கிற கார உப்பால் அதைச் சுட்டுவிடவும்; மாபஸவளர்ச்சி யிருந்தாலும் அதை சூஷாரத்தினால் சுட்டுச சுத்திசெய்யவேண்டும்; இவற்றை உபேக்ஷித்தால் பல்நோய் மிகத் தொந்தரவளித்து, அவற்றிற்குக் கீழுள்ள மோவாய்க்கட்டை எலும்பு முதலியதில் இப்பற்களிலிருந்து புரையோடிக் கேடு விளைவிக்கும்; பாதி உடைந்து நிற்கும்

பல்லை அப்படியே விட்டிருந்தால் வலியும் வேறு உபத்திரவங்களும் ஏற்படும். ஆகையினால் பல்லை முற்றிலும் வேருடன் ஸந்தம்சயந்த்ரத்தினால் பலமாகப் பெயர்த்தெடுத்துவிடவேண்டும்" (யஸ்மிந் தந்தேபிஜாயேத நாடீ தம் தந்த முத்தரேத். சோதயித்வாதஹேத் வாபி கூஷாரைஸ் தத்ரா திமாம்ஸகம். பிந்த்யுபேக்ஷிதே தந்தே ஹநுகாஸ்திகதிர் த்ருவம், நோத்தண்டித முபேக்ஷித ஸ சோபத்ரவமாவஹேத். ஸமூலம் தசநம் தஸ்மாத் ஸந்தம்சேநோத்தரேத் பலாத்.) என்று ஸுச்ருதாதிகள் கூறுகிறார்கள்.

மற்றுமுள்ள விரோவியதை செய்து இரத்த மோக்ஷணம் செய்யும் முறைகளும், ஜலூகா என்கிற அட்டைகளிலுள்ள பேதங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் சுத்த ஜாலூகாவைப் பிரயோகித்து வியாதிகொண்ட அவயவங்களிலிருந்து இரத்தத்தை வெளிப்படுத்துவதற்கான வகைகளும், கடிகாப் பிரயோகங்களால் குல்மம் அல்லது வேறு இரத்தத் திரட்சி முதலியதைக் கரைக்கும் கிரமங்களும் ஆயுர்வேதத்தைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். ஆகவே ஆயுர்வேதம் சஸ்திரசிகித்ஸை உட்பட எல்லா அவசியமான அங்கோபாங்கள் அடங்கிய ஸம்பூர்ண வைத்திய சாஸ்திரமென்று கூறுவதில் எவ்விதத்திலும் ஸங்கோசப்படவேண்டிய அவசியமில்லையே. சில காலமாய் அதைச் செய்யும் அப்யாஸம் நமக்கில்லையென்பது வாஸ்தவம். அப்யாஸம் செய்ய நாம் முயற்சியெடுத்துக் கொள்ளாததற்காகச் சாஸ்திரம் அரைகுறை யென்று அபிப்பிராயப்படுவது நியாயமல்ல.

பிரஸூதி தந்திரம்:—

பிரஸவ சிகித்ஸையைப் பற்றிய விஷயங்களை விசாரிப்போமாயின், நமது வைத்திய சாஸ்திரத்தில் அவ்வம்சத்திலும் பூர்த்தியேற்பட்டிருக்கிறது. "கர்ப்பிணியை ஒன்பதாவது மாதத்திலேயே ஸூதிகா கிருஹம் என்கிற பிரஸவ

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

சாலையிற் கொண்டுவிட வேண்டும். பிரஸவ காலம் நெருங்கியதும் உடல் வாட்டங்கொள்ளும்; முகத்தில் கிலேசக்குறி தோன்றும்; கண்கள் ஆழ்ந்திருக்கும்; மார்பில் ஏதோ தளர்ச்சி யேற்பட்டது போன்ற உணர்ச்சியுண்டாம்; மேல் வயிறு தளரும்; அடிவயிறு கனத்துக் காணும்; பிறகு சரியான நோவேற்பட்டு இடுப்பின் பக்கங்களிலும், துடையிடுக்குகளிலும் வலி தோன்றும்; பின்னர் கர்ப்பத்திரவம் வெளிப்படும்; உணவில் விருப்பமற்று அப்பால் ஆவீர்யென்கிற உண்மை பிரஸவ வேதனை காணும். இந்நிலைமையில் மிருதுவாக மேடுபள்ள மில்லாது தலையணையுடன் விரிக்கப்பட்ட சயனத்தில் அவளை மல்லாந்து படுக்கச் செய்து, நான்கு ஸ்திரீகள் அவளிடம் இருந்து உபசாரம் செய்ய வேண்டும்; அந்த ஸ்திரீகள் ப்ரஜாநாம் என்கிற பிரஸவோபசாரத்தில் திறமை வாய்ந்தவராகவும், சங்கை யொழுந்தவராகவும், பரிசுத்தர்களாகவும், நகங்களைக் கத்தரித்துக் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்." (நவமே மாஸி ஸுதிகாகாரமேநாம் ஆநயேத். ப்ரஜாநாகாலே க்லமோ காத்ராணாம், க்லாந்திராநாஸ்ய, அக்ஷ்ணோச்சைதில்யம், விமுக்த பந்தநத்வமிவ வக்ஷஸ:, குக்ஷேரவஸ்ரம்ஸநம். அதோ குருத்வம், வங்க்ஷண-வஸ்தி-கடி பார்ச்வ நிஸ்தோத:. யோநே: ப்ரஸ்ரவணம், அநாநாபிலாஷச் சேதி; ததோநந்தரம் ஆவீர்நாம் ப்ராதுர்ப்பாவ:, ப்ரஸேகச சகர்ப்போதகஸ்ய; தாம் க்ருதோபதாநே ம்ருதுஷ்வாஸ்தீர்ணே சயநே ஸ்திதாம் உத்தாநாம், அவதாதா:, அசங்கநீயா: சதஸ்ரஸ்த்ரிய:, ப்ரஜாநாகுசலா:,கர்திதநகா: பரிசரேயு:). இவ்வாறு ஏற்படும் இயற்கைப் பிரஸவத்தில் செய்யவேணடிய வைத்யோபசாரங்கள், தாத்ரியுபசாரங்கள் ஆகியவைகளை மேலும் விவரித்து விட்டு, மூடகர்ப்பவிஷயமான நிலைமைகளும், அவற்றிற் காணும் அநேகவித அவஸ்தைகளுக்குச் சஸ்திராதிகளைக் கொண்டுசெய்யப்படும் சிகித்ஸைகளும் முன்பே குறிப்பிடப்பட்டன. பிறகு அபரை யென்கிற மாயை வெளிப்படாவிட்டால் இன்னின்ன விதமான சிகித்ஸைகளும் உபாயங்களும் செய்ய

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

வேண்டு மென்றும், பிரஸவித்த ஸ்திரீக்கு உண்டாகும் ஸுதிகாரோகங்களில் எவ் வெவ்விதமான பரிஹாரங்கள் பலன் தருமென்றும் பரிஷ்காரமாக மொழியப்பட்டிருப்பதை ஸுச்ருத-வாக்படாதிகளிற காணலாம்.

கௌமாரப்ருத்யம் :—

எத்துரையிலும் குறைவில்லாத அநாதி வைத்திய தந்திரம் ஆயுர்வேதமே. குழந்தைகளைப் பராமரிக்கும்முறைகளைப் பற்றியும் குறைவில்லாமல் அது நமக்கு எடுத்துக் கூறுகிறது. குழந்தைகளுக்குப் புட்டிப்பால்களும் செயற்கைப் பால்களும் பருகக் கொடுக்கக் கூடாதென்று நாமே அல்ல, எவர்களுடைய வாக்கு இக்காலத்திய வேதாவாக்காகக் கொள்ளப்படுகிறதோ அந்த மேனாட்டு நாகரீக வைத்தியர்களே பலமாகப் பல முறையும் உபதேசித்து வருகிறார்கள். ஆனல் பிற நாடுகளில் தயார்செய்து கப்பல் கப்பலாக வரும் செயற்கைப் பால்தான் மேனாட்டு நாகரீகத்தில் மோஹங் கொண்டுள்ள இக் காலத்தியவரால் குழந்தைகளுக்கு நாகரீகமான நல்லுணவாக வாங்கி யுபயோகிக்கப்பட்டு வருகிறது. "மாதுரேவ பிபேத் ஸ்தந்யம் தத் பரம் தேஹவ்ருத்தயே, வத்ஸலாயா: பயோ தாத்ர்யாஸ் ததபாவே து பாயயேத்" (பாலர்கள் தாயின் பாலைத்தான் பருக வேண்டும்; அதுதான் அவர்களது தேஹ போஷணைக்கு மிகச் சிறந்தது. அஃதில்லையேல் குழந்தையினிடம் அன்பும் ஆதரவுமுள்ள செவிலித்தாயின் பாலைக் கொடுக்கலாம்) என்று ஆயுர்வேதம் கூறுகிறதென்றால், அது அபௌருஷேயமான வேதவாக்குக்கு உண்மையில் ஒப்பானதென்று மதித்து, ஆயுர்வேதத்தினிடம் உள்ள அவநம்பிக்கையையும், புட்டிப்பால் முதலியதைப் புகட்டும் இத் துர்வழக்கத்தையும் நாம் ஒருங்கே விட்டுவிட வேண்டாமா?. "குழந்தைக்குப் பாலூட்டும் தாத்ரி யென்கிற செவிலித்தாய், ஜீவித்துள்ள சொந்த குழந்தையுடையவளாகவும், ரோகமில்லாதவளாகவும், சுத்தமாகவும், ஹித

மான உணவுகளை யுட்கொள்பவளாகவும் இருக்கவேண்டும்" (ஜீவத்வத்ஸா நீருஜா ச சுத்தா தாத்ரீ ஹிதாசிநீ) என்று தாத்ரிக்கு அவசியமான நியமமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. முலைப்பால் குழந்தைக்குக் கிடைக்காவிடில் "ஸ்தந்யாபாவே பயச் சாகம் கவ்யம் வா தத்குணம் பிபேத்" என்று முலைப்பாலுக்குச் சற்றேறக் குறைய ஸமாந குணமுள்ள ஆட்டுப் பாலையாவது, பசுவின் பாலையாவது கொடுக்கலாம் என்று நமக்குச் சௌகரியமாக பிரதிநிதித் திரவ்யமும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த முறையையும், மேனாட்டு வைத்தியர்கள் ஸர்வாத்மநா சிபார்சு செய்கிறார்களென்றும் நாம அறிவோம். குழந்தைகளைப் படுக்க வைப்பதற்கான சயநாதிகளைப் பற்றிய விஷயம் முதல், பல் முளைப்பது-பேச யத்தனிப்பது-நடக்க முயல்வது ஆகிய பலவேறு நிலைமைகளிற் செய்யவேண்டிய அனுகூலமான ஸகலஉபசாரக்கிரமங்களீறாகவும், பாலர்களுக்குக் காணும் அநேக வியாதிகளைப் பரிஹரிப்பதற்கேற்ற பிரத்தியேக சிகித்ஸாகிரமங்களும் குறைவின்றி கௌமாரப்ருத்யம் என்கிற பிரகரணத்தில் அஷ்டாங்க-ஹ்ருதயாதிநூல்களில் விஸ்தாரமாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. "அவர்களுக்கு இடப்படும் படுக்கைகளும் போடப்படும் உடைகளும் நிர்மலமாகவும், தினந்தோறும் தோய்த்துச் சுத்தம் செய்யப்பட்டவையாகவும், மேடுபள்ளம் அல்லது சுருக்கமற்றவையாகவும், மிக்க மிருதுவாகவும், ரக்ஷோக்நம் என்கிற தூஷஹர தூபத்தினல் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டவையாகவும் இருக்கவேண்டும்" (சுசி-தெளதோபதாநாநி நிர்வலீநி ம்ருதூநி ச. சய்யாஸ்தரண-வாஸாம்ஸி ரக்ஷோக்நைர்தூபிதாநி ச.) என்கிற இப்புராதநமான உபதேசம் நவீந முறைக்குக் குணத்திற்குக்குறைந்ததா? "குழந்தைகளுக்குப் பயமுண்டு பண்ணும் காரியம் எதுவும் கூடாது; அவர்களுக்கு அழகான இனிது சப்திக்கும் விளையாட்டுக் கருவிகளைக் கொடுத்து "உத்ஸாஹப்படுத்த வேண்டும்; அக் கருவிகள் கூர்மையாகவோ கனமாகவோ இருக்கக் கூடாது" என்கி

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ரூர் சரகர். "அதைநம் ஜாததசநம் க்ரமேணைபநயேத் ஸ்தநாத்" (பல் முளைத்த பிறகு ஸ்தந்யபானத்திலிருந்து குழந்தையை கிரமமாக விலக்க வேண்டும்.)"அபஸ்தந்யஸ்ய ஸம்யோஜ்ய: ப்ரீணநோ மோதகச் சிசோ:" (முலைப்பால் பருகுவதை நிறுத்தியதும் குழந்தைக்கு இனிய சிற்றுண்டியைக் கொடுப்பது நலம்.) இத்யாதி விஷயங்களையெல்லாம் மேனாட்டு வைத்தியர்கள் இப்பொழுது தம் பிணியாளருக்குப் புதிய விஷயம்போல் உபதேசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். நமது ஸ்த்ரீகள் இளங் குழந்தைகளுக்குப் பெரும்பாலும் பிரதிதினமும் ஆமணக்கெண்ணெயைப் புகட்டி விரேசநம் செய்விப்பதை. அனைவரும் அறிவோம். அது மாத்திரமல்ல, சிலர் விஷய மறியாமல் மாந்த யெண்ணெய் என்றும், பண்டார-பரதேசி யெண்ணெயென்றும், வேறு சிலர் ஸஞ்ஜீவி மாத்திரை யென்றும் வழங்கப்படும் சில கடும் பேதி மருந்துகளை வாங்கி வைத்துக்கொண்டுத் தம் இளம் பிள்ளைகளுக்கு நாள்தோறும் கொடுத்து வருவதைப் பார்த்திருக்கிறேன். பிரதி தினமும் குழந்தைகளுக்குப் பேதிக்குக் கொடுப்பதும், அதிலும் கடுமையான பேதிச் சரக்குகளைப் புகட்டுவதும் மிகக் கேடு விளைவிக்கும் என்று நவீன வைத்தியர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள். அவ்விதம் குழந்தைகளுக்கு அடிக்கடி பேதிக்குக் கொடுக்கக் கூடாதென்று அநேகம் தாய்மார்களுக்கு நான் வற்புறுத்தி அறிவித்தபோது, "இந்தக் காலத்து வைத்தியர்களெல்லாம் இப்படித்தான் சொல்லுவார்கள்" என்று அலக்ஷியமாகக் கூறி என்னையும் ஆங்கில வைத்திய கோஷ்டியில் சேர்த்துவிட்டார்கள். ஆனல் ஆயுர்வேத நூல்கள் "அங்யத்ராத்யயிகாத் வ்யாதேர் விரேகம் ஸுதராம் த்யஜேத்" (ஏதேனும் பலமான வியாதி நிலைமையில் அதிக அவசியம் ஏற்பட்டாலே யொழிய குழந்தைகளுக்குப் பேதிக்குக் கொடுப்பதை அடியோடு விலக்கவேண்டும்) என்று கூறும் பிரமாணம் நெடுங்காலமானது. "குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் நிலைமை எல்லா வியாதிகளுக்குமே காரணமாகின்றது; விசேஷமாக ஜ்வரம், பேதி, இருமல், வாந்தி, தலை

நோய் இப்பிணிகளை அது உண்டு பண்ணும். அவற்றில் கோளாறடைந்துள்ள தோஷத்தையும், ஏற்பட்டுள்ள வியாதியையும், உண்டாயிருக்கிற அநேக கோளாறுகளுள் எது பலமாயிருக்கிறதென்பதையும், எந்த ஆசயம் தாக்கப்பட்டிருக்கிறதென்பதையும், தேசத்தையும், காலம் முதலிய மற்றவைகளையும் உற்றுப் பரிசீலனை செய்து, குழந்தைகளுக்குச் சிகித்ஸை செய்வது முறை" (தந்தோத்பேதச் சரோகாணும் ஸர்வேஷாமேவ காரணம். விசேஷாத் ஜ்வர-விட்பேத-காஸச்-சர்தி-சிரோருஜாம். யதாதோஷம் யதாரோகம் யதோச்சிராயம் யதாசயம். விபஜ்ய தேச-காலாதீம்ஸ் தத்-யோஜ்யம் பிஷக்ஜிதம்.) என்றும், இன்னும் பலவகையிலும் பாலர்களை ஆரோக்கியநிலைமைகளிலும் அநாரோக்கிய நிலைமைகளிலும் பராமரிக்க வேண்டிய உபாயங்கள் அஷ்டாங்க ஹ்ருதயம் உத்தரஸ்தானாதிகளில் விளங்கக் கூறுகிறது.

திரவ்யகுணம் அல்லது ஔஷதிநிகண்டு:—

"திரவ்யகுணபாடம்" அல்லது "ஔஷதி நிகண்டு" என்று கூறப்படும்போது மேனாட்டு முறையிற் பயிற்சியுள்ளவர்க்கு மெடீரியா மெடிகா என்னும் விஷயம் ஞாபகத்துக்கு வரலாம். த்ரிதோஷதத்துவத்தை அடிப்படையான கொள்கையாகப் பெற்ற நமது ஔஷதி நிகண்டு அவர்களது மெடீரியா மெடிகாவினும் அநேக வகையில் வித்தியாஸமுள்ளதாயிருக்க வேண்டியது ஸஹஜம். ஆயுர்வேத ஔஷத நிகண்டுக்கள் இயற்றியவர்கள் புதிர் மாதிரியான வார்த்தைகளையாவது, அநாவசியகமான சொற்றொடர்களையாவது சேர்த்துப் பாடல்கள் பாடாமல், ஒவ்வொரு பதார்த்தத்தின் லக்ஷண குணதிகளைக் குறிப்பிட்டு நன்கு விளங்கக் கிரந்தங்கள் இயற்றியிருக்கின்றனர். சரக-அஷ்டாங்கஹ்ருதயாதி ஸமஹிதாக்கிரந்தங்களில் ஸூத்ரஸ்தானம முதலியவற்றிற் சுருக்கமாகவும், இராஜ நிகண்டு-தன்வந்தரி நிகண்டு-மதனபால நிகண்டு-ப்ருஹந்நிகண்டு ரத்நாகரம முதலியவற்றில் விஸ்தாரமாகவும் இவ்விஷயம்

ஒழுங்காகப் பல பாகுபாடுகளுடன் விளக்கப்பட்டிருக்கின்றது. செடி-கொடி முதலிய ஸ்தாவர ஜீவவர்க்கங்களிலிருந்து ஔஷதாதிகளுக்காக எடுக்கப்படும் சரக்குகளையும், பிராணிகளின் தேஹங்களிலிருந்து கிடைக்கும் ஔஷதோபயோகியான பாகங்களையும் ஸேந்த்ரிய வஸ்துக்கள் என்றும், இரஸ - கந்தக-லோஹ-தாதுவர்க்கங்களிலிருந்து நாம் உபயோகிக்கும் சரக்குகளை நிரிந்த்ரிய வஸ்துக்கள் என்றும் சரகர் பிரித்திருக்கிறார். சைதந்யமுள்ளவை ஸேந்த்ரியங்கள், சைதந்யமற்றவை நிரிந்த்ரியங்கள் (ஸேந்த்ரியம் சேதநம் த்ரவ்யம் நிரிந்த்ரியமசேதநம்) என்பது அவர் பாகுபாட்டிற்கான காரணம். மேனாட்டு முறைப்படி அந்தக் கெமிஸ்டுகள் இவ்விரு பதங்களின் மொழி பெயர்ப்பு போலவேயுள்ள ஆர்காநிக் அண்ட் இநார்காநிக் ஸப்ஸ்டென்ஸஸ் என்கிற சொற்களை இவற்றின் ஸ்தாநத்தில் வழங்குகிறார்கள். மூலிகைகளை எந்தெந்தப் பருவங்களில், எவ்வெவ்விடங்களிலிருந்து கிரஹிக்க வேண்டும் என்றும், எந்தெந்தச் செடியிலிருந்து எந்தெந்த பாகம் எடுக்கப்பட வேண்டும் என்றும் தகுந்த காரணங்களைக் காட்டி எழுதியிருக்கிறார்கள். இந்நிகண்டுக்களிலுள்ள மற்றொரு விசேஷம் என்னவென்றால், ஒவ்வொரு சரக்கினுடையவும் மதுராம்லாதிரஸங்களையும், அவற்றின் உபரஸங்களையும், சீதோஷ்ணதி வீர்யங்களையும், குடலிற் சென்ற பிறகு அவை பரிணமமடையும்போது ஏற்படும் இரஸ மாறுபாடுகளையும், எல்லாவற்றிற்கும் மேலான பிரபாவம் என்னும் விசேஷத்தையும், குரு-லகு-ஸ்நிக்த-ரூக்ஷாதிகளான இருபது வகையான குணங்களையும் குறித்துவிட்டு, அவ்விவரணங்களின் ரீதியாய் அவை எந்தெந்த வேலைகளைச் செய்து எந்தெந்த வியாதிகளைத் தீர்க்க உதவுமென்பதையும் வைத்தியர்களுக்கு மிகவும் உபயோகப்படும் வகையில் அவை விவரித்திருக்கின்றன. த்ரிதோஷத்துவத்தை ஆதாரமாகக்கொண்டு குணங்களையும், குணவிசேஷங்களையும் கூறும் இந்நிகண்டுக்களிலுள்ள சில அபூர்வ சாஸ்த்ரீயக் கொள்கைகள் மேனாட்டு முறை முத

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

யிதில் இல்லையென்று சொல்லலாம். ஆனால் மேனாட்டுமுறையில் விவஹரிக்கப்படும் விசேஷகுணங்கள் (Properties or specific actions) என்னும் விஷயம் ஆயுர்வேத நிகண்டுக்களில் இன்னும் அதிகமாயிருப்பதாகக் கூறவேண்டுமே தவிர சிறிதும் குறைவிராது. அத்தகைய விசேஷ குணங்களில் தீபநம், பாசநம், சமநம், அநுலோமநம், ஸ்ரம்ஸநம், பேதநம், ரேசநம், வமநம், தேஹஸம்சோதநம், சேதநம், லேகநம், க்ராஹி, ஸ்தம்பநம், இரஸாயநம், வாஜீகரணம், ஆர்த்தவஜநகம், ஆர்த்தவஸ்தம்பநம், ஸூக்ஷ்மம், வியவாயி, விகாஸி, மதகாரி, யோகவாஹி, ப்ரமாதி, அபிஷ்யந்தி, வேதநாஸ்த்தாபநம், சோணிதாஸ்த்தாபநம், சோணித விரஜநீயம், மேத்யம், பல்யம், ஹ்ருத்யம், த்வச்சியம் முதலியவை சில பரிபாஷைகளாம்.

ஔஷத யோகங்கள்:—

'ஔஷத யோகங்கள்' என்று ஸம்ஸ்க்ருதத்தில் வழங்கப்படும் இவ்வைத்தியசாஸ்திர பாகம் தமிழ்நாட்டில் ஸாதாரணமாக வாகடவிதி என்று வழங்கப்பட்டு வருகிறது. இப்பெயர் எப்படி வந்ததென்பதற்கு முகாந்தரம் ஒன்று உண்டு. அஷ்டாங்கஹ்ருதயமும் - ஸங்கிரஹமும் இயற்றியவர் பெயர் வாக்படன் என்று இப்பொழுது அனைவருக்கும் தெரியும், அவரை பாஹடன் என்றும் கூறுவதுண்டு. பாஹடன் என்பதே (வ-பயோரபேதம் என்னும் கொள்கைப்படி) வாகடன் என்று மாறி அவ்விதமும் வழங்கப்படுவதுண்டு. அஷ்டாங்க ஹ்ருதயமும், இரஸரத்தினஸமுச்சயமும் வாகடன் எழுதிய நூல்களாகையாலும், ஔஷதயோகங்களில் இப்புஸ்தகங்கள் வெகு நாட்களாகப் பிரபலமாயிருப்பதாலும் இந்த ஔஷதங்கள் தயார் செய்யப்படும் வைத்தியப் பகுதிக்கே வாகடநூல் அல்லது வாகடவிதி என்கிற பெயர் ரூடியாய்விட்டது. பார்மஸி என்று மேனாட்டார் வழங்கும் இவ்வௌஷத யோக வகுப்பில் திரவ்யங்களை நிறுத்தல், அளத்தல் முதலிய விஷயங்களும், புதிதாகக் கொண்டுவந்து அப்படியே பச்சையாக

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

உபயோகிக்கும் விதங்களும், உலர்ந்த சரக்குகளையுபயோகிக்கும் விதங்களும் அடங்கியுள்ளன. ஸ்வரஸம்-கல்கம்-க்வாதம்-பாண்டம்-ஹிமம் என்னும் பஞ்சகஷாயங்கள், சூர்ணம், குளிகை, வடகம், மோதகம், லேஹ்யம், இரஸக்ரியை, தைலம், கிருதம், ஆஸவம், அரிஷ்டம், அர்க்கம், அஞ்ஜநம், லேபம் முதலிய பற்பல வகையான ஔஷதங்களைத் தயார் செய்வதற்கான பிரயோக க்ரமங்கள் 'ஔஷத யோகம்' என்கிற இவ்வகுப்பில் விஸ்தாரமாக விவரிக்கப்படும். இவற்றுள் குளிகை-வடகம் - மோதகம் என்னும் இம்மூன்று வகை ஔஷதங்களும், உபயோகிக்கும் அளவிற் சிறு சிறு உருண்டையாகவோ தட்டையாகவோ திரட்டித் தயார் செய்யப்படுவதால் மாத்திரை என்கிற (மாத்திரை என்றால் அளவு எனப் பொருள்) பொதுப் பெயரால் வழங்கப்படும். ஆஸவம் - அரிஷ்டம் என்கிற இவ்விரண்டும் கஷாயாதிகளாகச் செய்து, குண்டங்கள் அல்லது சால்களிற் போட்டு மூடிவிட்டுச் சில நாள் தாண்டியாதிகளிலோ பள்ளங்களிலோ புதைத்து வைத்து, மத்யம் மாதிரியாகப் புளிப்பேற்றித் தயார் செய்யப்படுவதால் இவ்விரண்டையும் பக்குவம் செய்யுமுறையை ஸந்தாநம் என்போம். தைலமும் கிருதமும் பொதுவாக எண்ணெய் அல்லது கொழுப்பு வஸ்துக்களாகையால், அவ்விரண்டின்முறையும் பொதுவாக ஸ்நேஹபாகம் எனப்படும். அர்க்கம் என்பது பாதநயந்திரம் என்கிற வாலையிலிருந்து இறக்கப்படும் நீருருவமான ஔஷத முறை. இப்படி வாலையிலிருந்து இறக்கிச் சந்தாந முறையில் தயாராகும் இக்காலத்தில் வழங்கப்படும் ஒருவகை மதுவை அராக்கு என்று சொல்லுகிறார்கள். அராக்கு என்பது அர்க்கம் என்னும் பரிபாஷையின் திரிபுச்சொல்லேயன்றி வேறல்ல. அஷ்டாங்கஹ்ருதயத்தில் ஆசார்ய வாக்படர் அநேகமாய் எல்லா வியாதிகளுக்கும் அவசியமான சிகித்ஸைகளையும், அவற்றிற்கான ஔஷதங்களையும் சிகித்ஸாஸ்த்தாநத்திலும, கல்பஸ்த்தாநத்திலும், விசேஷமாக உத்தரஸ்த்தாநத்திலும் போதுமாறு விளங்கக் கூறியிருப்பதால், அந்த நூல் எங்கும் வாகடம் என்னும்

பெயருடன் பிராபல்யமடைந்திருப்பதுடன், முக்கியமாகக் கேரளத்தில் அதிகப் பிரயோஜனமுள்ளதாகக் கருதப்படுகின்றது. மலபாளத்திற் பலர் அஷ்டாங்கஹ்ருதயத்திலுள்ள ச்லோகங்களை ஸ்தோத்திரபாடம் மாதிரி மனப்பாடம் பண்ணி ஒப்பிப்பார்கள். உண்மையில் வாக்படருடைய அஷ்டாங்க ஹ்ருதயபத்தியங்கள் காவ்யபத்தியங்களைப் போல இரஹிகருக்குப் படிக்க இனிதாகவும், சாஸ்திரஞ்ஞருக்கு அஃதோர் பிராசீன-நவீன வைத்தியர்களுக்கு அறிவு புகட்டுமை அபூர்வக் கிரந்தமென்பதாகவும் தோன்றும்படி அவ்வளவு அருமையாய் அமைந்திருக்கின்றன. நான் முன் குறிப்பிட்ட கஷாய-சூர்ண-லேஹ்யாதி ஔஷத வகைகளையும் ஸங்கிரஹித்து, ஒவ்வொரு வகையிலும் மிகப் பிரஸித்தமாகவும் வெகு உபயோகமுள்ளவையுமான முக்கியமான ஔஷதமுறைகளையெல்லாம் ஒரு வைத்தியசாலைக்கோ அல்லது ஒரு வைத்தியனுக்கோ மிக்க உபயோகமான ரீதியில் தொகுத்து வரிசைக் கிரமமாகக் கூறும் சிறந்த வைத்தியக்கிரந்தம் "சார்ங்கதர ஸம்ஹிதையாம்." வியாதிகளையும், மற்றப் பரிபாஷை முதலியவற்றையும் ஒரு பாகமாகவும், ஔஷதங்களையெல்லாம் தயார் செய்யும் முறைகளைப்பற்றிய எல்லா விஷயங்களையும் திரட்டி இரண்டாம் பாகமாகவும், ஸ்நேஹ-ஸ்வேத-வமந-ரேசநாதி சிகித்ஸா கிரமங்களனைத்தையும் தொகுத்து மூன்றும்பாகமாகவும் ஆக மூன்று கண்டங்களாகச் சகல விஷயங்களையும் பகுத்துப் புதிய வகையில் ஸம்ஹிதாக் கிரந்தம் இயற்றியவர் சார்ங்கதரனே யாகையால், அது ஸகலருக்கும் பலவகையிற் பிரயோஜனப்படக் கூடிய அரிய வைத்திய நூலென்பதை அறிந்து, முதலில் நான் அதை மொழி பெயர்த்துத் தமிழ்நாட்டுச் சஹோதரர்களுக்கு உதவுமாறு பிரசுரித்தேன். வேறு எந்த முறையிலும் காணப்படாத ஆஸவாரிஷ்டசித்வாதி ஸந்தாந முறைகளையும், இரஸக்ரியாதிப் பிரயோகங்களையும் ஆயுர்வேதமன்றி வேறெதுவும் கூறுதபடியால், ஔஷத யோகவிஷயத்திலும் ஆயுர்வேதமே மற்றெல்லா வைத்திய முறைகளினும் மிக்க உபயோக

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

முள்ள மேலான முறையென்று நிர்ணயிக்கப்படவேண்டியிருக்கிறது.

இரஸக் கிரந்தங்கள்:—

இரஸ-லோஹ-பாஷாண-தாதுவர்க்காதிகளை ஔஷதமாயுபயோகிக்கும் ரீதியில் ஆயுர்வேதாசாரியர்கள் மிகத் திறமை வாய்ந்திருந்தனர் என்பதைப்பற்றி ஆரம்பத்திலேயே விளக்கியிருக்கிறேன். அவர்கள் அவ்விஷயங்களில் பெற்றிருந்த அறிவைக்கொண்டு அக்காலத்தில் (அதாவது பதஞ்ஜலி முனிவர்காலத்திலேயே) ஸேந்த்ரியச்சரக்குகளால் ஔஷதங்கள் தயார் செய்யப்படும் வகைகளுடன், நிரிந்த்ரியச் சரக்குகளைக்கொண்டு ஔஷதங்களைப் பக்குவம் செய்யும் பிரகாரங்களும் பரிமோந்நதநிலைமையில் இருந்ததாகத் தெரிகிறது. மூலிகைகளாலாகிய ஔஷதங்களுக்கும், இரஸ-லோஹாதிகளாகிய நிரிந்த்ரிய பதார்த்தங்களால் செய்யப்படும் ஔஷதங்களுக்கும் பொதுவாக வீர்யத்தில் விசேஷ வித்தியாஸம் உண்டென்பதை உணர்ந்து, அதை நமக்கு "ஸ்வல்பமாத்ரோப யோகித்வாத அருசேரப்ரஸங்கத:. அசிராத் பலதாயித்வாத் "ஔஷதீப்யோதிகோ ரஸ:" என்கிற ச்லோகத்தைக்கொண்டு அவ்வாசாரியர்கள் அறிவித்தும் இருக்கிறார்கள். பிராசீன இரஸதந்த்ரக் கிரந்தங்களுக்குள் ஆசார்ய வாக்படரது இரஸரத்ன ஸமுச்சயம் இத் தேசமெங்கும் பிரஸித்தமானது. டாக்டர் ஸர் பி. ஸி. ராய் கூட இக்கிரந்தத்தைத் தமது "ஹிஸ்டரி ஆப் ஹிந்து கெமிஸ்ட்ரி" எழுதியதற்குப் பெரும்பாலும் பின்பற்றியதாகக் கூறுகிறார். ஆகவே இந்நூலையும் பெரு முயற்சியுடன் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரித்திருக்கிறேன் என்பது தமிழ் நாட்டிற் பலருக்குத் தெரிந்த விஷயம். இரஸம் முதலிய தாதுப் பொருட்களை ஔஷதங்களாக உபயோகிக்கக் கூடுமென்கிற யோசனை ஐரோப்பாவில் 15-ம் நூற்றாண்டுக்கு முன்பு எவருக்கும் ஏற்பட்டதில்லை. 1566-இல் பாரிஸ் நகரத்து வைத்தியக் கல்லூரியில் (Faculty of Medicine) இரஸ-லோஹாதி சரக்குகளை அவ்வுண்மை

யறியாது ஔஷதங்களாக உபயோகிப்பது அபாயகர மென்று நினைத்து, அதன் அங்கத்தினர்கள் அவ்வுபயோகங் களைக் கண்டித்திருக்கிறார்கள். 19-ம் நூற்றாண்டின் ஆரம் பத்தில் எயின்ஸிலி என்பவர் இயற்றியுள்ள "லெப்ரா-அராபம்" என்னும் நூலில் பலவித சர்மரோகங்களிலும் —முக்கியமாக மேஹம்-குஷ்டம் முதலியவற்றிலும், வேறு கடுமையான ரோகங்களிலும் இரஸ-லோஹ-பாஷாணாதி களை இந்தியர்கள்தான் ஆதிகாலத்தில் ஔஷதங்களாக உபயோகிக்கும் உண்மையைத் தெரிந்து அநுஷ்டித்து வந் திருப்பதாகக் கூறுகிறார்.

சஸ்திர சிகித்ஸையில் அனுபவம் பெறவேண்டும்

இப்பொழுது ஆயுர்வேத வைத்தியர்களுக்குச் சஸ் திரசிகித்ஸையில் அனுபவந்தான் வேண்டும். மற்ற எல்லாத் துரைகளிலும நமக்குப் பூர்த்தியுண்டென்றும், சஸ்திர சிகித்ஸையில் சாஸ்த்ரீய விவரங்கள் கூட நமக்கு அநேகமாக பூர்ணமாய் அமைந்திருக்கின்றன வென்றும் ஏற்கனவே நிரூபித்துவிட்டேன். இந்தியாவில் சஸ்திர சிகித்ஸாக்ரமம் விசேஷமாக ஆதியில் கையாளப்பட்டு வந்த தென்றும், இங்கிருந்துதான் மேனாட்டுக்குச் சஸ்திர சிகித்ஸை பரவியதென்றும், இந்திய வைத்திய முறையி லுள்ள யந்திர சஸ்த்ராதிகள் போற்றத்தக்கவாறு எண் ணிக்கையிலும் அநேகம் விருத்தியடைந்திருந்தன வென் றும், என்ஸைக்ளோ பீடியா பிரிடானிகாவில் ஸ்பஷ்ட மாக விவரம் காணப்படுகின்றது. ஆகவே சஸ்திர சிகித்ஸையில் நமக்கு வேண்டிய—மூலாதார விஷயங்க ளல்ல—கேவலம் அனுபவத்தை மேனாட்டு முறையிலிருந்து உண்மையில் வட்டியுடன் பெறுவதற்கு உரிமை நமக்குண்டு என்கிற கொள்கையுடன் ஆயுர்வேத வைத்தியர்கள் அதில் தேர்ச்சி பெற முயலலாம்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மேனாட்டாருடைய மேம்பாடு.

மேனாட்டாரையோ அவர்களது வைத்திய முறையை யோ நான் சற்றுங் குறை கூறவில்லை. அவர்கள் இத்தேசத் திலிருந்து தெரிந்துகொண்ட வைத்திய முறையைத் தமக்கு மூலமாக வைத்துக்கொண்டு அதை விருத்தி செய்தார்கள். அதனல் தம் தேசத்தோரது சுகத்தையும் செல்வத்தையும் செழிக்கச் செய்ய வகை தேடிக்கொண்டு, அவர்களைப்பற் றியமட்டிலும் தம் தேச கூமத்தில் அபிமானத்துடன் ஜாக்கிரதையாகத் தம் தேசத்துக்குச் சேவை செய்துவரு கிறார்கள். அவர்கள் இந்தியாவிலிருந்து விஷயங்களைக் கற்றுக் கொண்டுபோனலும், வஸ்துக்களைக் கிரஹித்துக் கொண்டு போனலும் அவற்றிற்குப் பலவேறு வகையில் உருவமும், ஒழுங்கும், மெருகும் கொடுத்து முற்றிலும் அவற்றை வேறுபட்டவைகளைப் போலாக்கி, வியாபார வழியில் உபயோகித்து, ஊக்கத்துடன் தம் தேசத்துச் செல்வத்தையும் செல்வாக்கையும் செழிப்பிக்க வெகு தந்தி ரமாக உபாயம் தேடுகிறார்கள் என்று சுமார் இருநூறு வருஷ காலமாய் அடிக்கடியும் நேரிற் பார்த்துக் கொண்டி ருந்தும், நாம் யோசனையின்றி வாளாயிருந்துவருகின்றோம். இங்கிருந்து பஞ்சுகளைப் பொதிப் பொதியாகச் சொற்ப விலைக்கு வாங்கிப்போய், அங்கிருந்து அவற்றை மிருது வான நூல்களாகவும், அழகிய ஆடைகளாகவும் செய்து அனுப்பி, ஒன்றுக்கு நூறுக இலாபம் ஸம்பாதிக்கின்றனர். இங்கிருந்து எண்ணெய்வித்து முதலியவற்றை அவ்விதமே கொண்டுபோய் சொகுசான ஸோப்புகளெனகிற சவர்க்கா ரங்களாகவும், மெழுகு வர்த்திகளாகவும் செய்தனுப்பி ஏராளமான திரவ்யங்களைத் திரட்டிப் போகிறார்கள். நம திடமிருந்து அவ்விதமே இயற்கைக் கடைச் சரக்குகளை நய மாகப் பிடித்துப் போய், நூதன ஔஷதங்களைப் போல் மாற்றி, மனோஹரமான குப்பிகளிலும் டப்பிகளிலும் அடைத்து, ஆங்கில வைத்தியம் கற்ற நமது ஸஹோதரர் களின் கைகளாலேயே நமக்கு விற்பதற்கு அநேகம் தந்திர மான வியாபாரோபாயங்களை யெல்லாம் செய்திருக்கிறார்

கள். அவர்கள் செய்யும் இவ்வளவு ஸாமர்த்தியமான முயற்சிகள் யாவும் தம் தேச நன்மையிலே அவர்களுக்குள்ள அஸாதாரணமான அக்கறையையும், பிடிவாதமான விடா முயற்சியையுமே விளக்குகின்றன. இச் சாக்குகளை இயற்கை நிலைமையிற் கொண்டுபோய், செயற்கை அழுகுகளைப் புகட்டி நமக்கே அவற்றை அவர் திரும்பக் கொடுத்துத் திரளான இலாபம் ஸம்பாதிப்பதுபோல், நமக்குப் பகட்டாகத் தோன்றுத நிலைமையிலிருந்த வைத்திய சாஸ்திரத்தையும் இயற்கை நிலைமையிற் கற்றுக்கொண்டுபோய், அதற்குச் சீர் திருத்தங்களென்கிற செயற்கைப் போலியை யுண்டு பண்ணி, மேனாட்டு முறையென்னும் புதுப்பெயரைச் சூட்டி, தமது கொள்கைப்படி மேனாட்டு முறையைப் பின்ற நமது இந்திய ஸஹோதரர்களையே அவற்றை இந்நாடெங்கும் பரப்பக் கருவியாக ஏற்படுத்திக் கொண்டு, தம் செல்வத்தையும் தம் அதிகார ஆதிக்யத்தையும் மேனாட்டார் மேன் மேலும் பெருக்கிக்கொண்டு வருகிறார்கள் என்பதை நேரிற் கண்டும் கண்ணில்லாதவர்போல் வாளாயிருந்துவருகிறோம். நமது இயற்கைப்பொருட்கள் நமக்கு மதிப்பாகத் தோன்றவில்லை; ஆனால் மேனாட்டார் அவற்றை ஆவலுடன் கொண்டுபோய் மதிப்புறச் செய்து, அவற்றால் பயன் பெறுகிறார்கள். நமது இயற்கைச் சாஸ்திரத்தில் நமக்கு மதிப்பில்லாமல் அவர்களிடம் ஒப்புவிக்க, அதை அவர்கள் மெருகு கொடுத்துப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். நாம் கள்ளங் கபடற்ற இயற்கை மனிதர்களாயிருப்பதைக் கண்டு, நம்மையும் அவர்கள் தங்கள் இலாபத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். ஆகவே நம்முள் விவேகிகளாயிருப்பவர் விரும்பக்கூடிய தென்னவென்றால்—முதலில் நமக்குப் பகட்டாகத் தோன்றுத போதிலும் நமது இயற்கைப் பொருட்களையும், நம் முன்னோர் இயற்றிய இயற்கைச் சாஸ்திரமான வைத்திய முறையையும் நாம் ஊக்கத்துடன் காத்துச் சீர்மையாக்கி நாமே பிரயோஜனப் படுத்திக்கொண்டு, நாம் தொன்று தொட்டு நாகரீகம் வாய்ந்த நாட்டினர் என்பதை உலகத்தாருக்குக்

காட்டிக்கொள்வதுடன், நமது செல்வத்தையும் செழிக்கச் செய்துகொள்ள வேண்டும் என்பதேயாம்.

ஆயுர்வேதத்தை அலக்ஷியம் செய்வது அதர்மம்.

இவ்வளவு தூரம் நான் தகுந்த ஆதாரங்களுடன் கூறியுள்ள அபிசுகளிலிருந்து, நாம் என்ன முடிவுக்கு வருகிறோமென்பது ஸகலோருக்குப் புலப்பட்டிருக்கும். ஆயுர்வேதம் அநாதிவைத்திய முறை. அது சாச்வத முறை. மற்ற வைத்திய முறைகளைப்போல் நாளொரு வகையாய் மாறக்கூடாத மிகப் பிரசஸ்தமான அடிப்படைகளின் மேல் ஏற்பட்ட ஸப்பிரமாணமான (Standard) சாஸ்திரம். சஸ்திரசிகித்ஸை உட்பட அகில அங்கங்களாலும் உபாங்கங்களாலும் ஸம்பூர்ணமாய் உயர் நிலையில் இருந்து வந்தது அச்சாஸ்திரம். இரண்டொரு நூற்றாண்டுகளாக அநேக முகாந்தரங்களைக் கொண்டு அரசாங்கத்தாருடைய ஆதரவின்மையினாலும், சஸ்திரசிகித்ஸையை அனுபவத்தில் உபயோகிக்கும் வழக்கத்தை நாம் அநாதரித்ததாலும் ஆயுர்வேதவைத்தியம் பொதுவாகவும், சஸ்திரசிகித்ஸை முக்கியமாகவும் உயர்நிலையிலிருந்து தாழ்மையடைந்ததாகக் கருதுகிறோம். கொழும்பு கான்பரென்ஸில் ஸர் பி. ராமநாதன் வெகு விவேகத்துடன் மொழிந்துள்ளவாறு ஆங்கில சவர்ன்மெண்டின் ஆட்சிமுறை யேற்பட்ட நாள் முதல், கிரமக் கிரமமாக மேனாட்டுப் பழக்க வழக்கங்களில் ஜனங்கள் மோஹங்கொண்டு நடப்பதும், ஆங்கில தோரணையில் மற்ற ஒவ்வோர் இலாகாவையும்போல் வைத்திய இலாகாவும் ஏற்பட்டு, அவ்விலாகாவும் ஆங்கில உத்தியோகஸ்தர்களுடைய ஆதிக்யத்துக்கு உட்படவே, மேனாடுகளிலிருந்து வைத்தியர்களும், ஔஷதங்களும், மற்றும் பலவித உபகரணங்களும் இத்தேசத்திற்கு இறக்குமதி செய்யப்படவே நமது வைத்தியர்களும், நமது வைத்திய சாஸ்திரமும் புறக்கணிக்கப்பட்டு, உன்னத தசையிலிருந்து உபயோகமற்றதெனக் கூறும்படியான நிலை

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மைக்குக் கொண்டுவரப்பட, நமது கபடற்ற ஜனங்களும் இதைக் கண்கூடாகப் பார்த்து வருகின்றனர். தைவத் தன்மை வாய்ந்த நமது பூர்வீகர்கள் அரும்பாடுபட்டு எழுதிவைத்துப்போன அச்சாஸ்திரங்களின் ஆதரவால் இதுகாறும் பிணி தீர்த்துக்கொண்டு, நமது பிரஜைகள் தேஹபலமும், தேச க்ஷேமமும் பெற்று வாழ்ந்துவர வில்லையா? மேனாட்டு முறை முளைத்ததற்கு மூலமாயிருந்த வேதகோசரமான நமது வைத்தியசாஸ்திரத்தை வேரறுத்து வெந்நீர் ஊற்றும்வேலைக்கு அம்மஹருஷிகளின் மிகப் புனிதமான ஸந்ததியிற் பிறந்த நம்மவரே உடந்தையாயிருந்துவருவதைக் காண உத்தம தேசாபிமானிகளுக்கு உள்ளம் பதறுதா?

நம்மில் ஒவ்வொருவரும் நமது கூடஸ்த்தராயிருந்த மஹருஷியின் பெயரை நம் கோத்திரப் பெயராக இன்றைக்கும் சொல்லிக் கொண்டுவருவதை, உலகத்தில் எச்சந்ததிக்கும் இல்லாத ஒப்புயர்வற்றதோர் பெருமையாகக் கொண்டாடவேண்டும் என்பதை நம்மில் அநேகமாய் எவரும் யோசித்ததில்லை. அக்கோத்திரப் பெயர் நமக்கிருப்பதால் அந்தந்த கோத்திரத்தைச் சேர்ந்த அந்தந்த ஸந்ததியிலும் கலப்பில்லாத சுத்த இரத்தம் அவர்களது தேஹங்களில் பரம்பரை பரம்பரையாகத் தொன்று தொட்டு ஓடிக்கொண்டிருப்பதாக ஒவ்வொருவரும் ஸந்தேஹமின்றி அறியலாம். ஆத்ரேயகோத்திரத்தினரின் ஆதிபுருஷனை ஆத்ரேய முனிவர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் எப்பொழுது இருந்தாரோ? கச்யப மஹருஷி உயிர்வாழ்ந்த காலம் எப்பொழுதோ நமக்குத் தெரியாதாயினும் அவரை மூல புருஷராகக்கொண்ட காச்யபகோத்திரத்தினர் பரதகண்டமெங்கும் பரவியிருக்கின்றனர். டித்தனென்றும், டிபித்தனென்றும், பாக்ஸ் என்றும், குக் என்றும் பொருளற்றப் பெயர்களை வைத்துக்கொண்டு கூடஸ்த்தன் இன்னவனென்று தெரிந்துகொள்ள முடியாத குலத்திற் பிறந்தவரல்லர் நாம். அவ்வாறு நல்முத்து மாலைகளெனத் தகும் நற்குலங்களில் உதித்த நாம் ஒவ்வொருவரும் நமது வம்ச

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மாகிற அம்முத்துமாலையில் தொடுத்துள்ள ஒவ்வொரு மாசற்ற முத்துக்குச் சமானமென்றும், தைவிகப்பிரபாவம் வாய்ந்தவர்களுடைய வம்சத்திற் பிறந்த வைதிக மணிகள் என்றும் சொல்லிக்கொள்ளும் நியாயமான நிச்சயக்கொள்கை நமக்குண்டானால், அத்தைவீக கூடஸ்த்தர்கள் அரும்பாடுபட்டு இயற்றி அளித்துப் போயுள்ள நமது வைதிக வைத்தியமான ஆயுர்வேதசாஸ்திரத்தை அலங்கோலமாகப் பாழாக்கப் பார்ப்பது அதர்மமல்லவா? நவ்ய நாகரிகம் என்கிற இவ்வநாகரிகக் கோலம் நமது மஹாபவித்திரமான மததர்மங்களைப் போலவே, நமது சான்றோர் அளித்துப் போன சாஸ்திரங்களுக்கும் சாவுமணியடிக்கத் தொன்றிவிட்டது. ஆரோக்கியத்தையும், அறம்-பொருள்-இன்பங்களையும் அளிக்கக் கூடிய ஆர்யர்கள் அளித்துப்போன ஆயுர்வேத வித்தைக்கு ஆபத்து நேரிடாதபடி ஆதரவளிக்க வேண்டுமென்று அனைவரையும் வேண்டிக்கொள்ள இச்சபை இப்பொழுது கூடியிருக்கின்றது. ஆத்யாத்மிக தத்துவம் இன்னதென்றறியாத பாதிரிமார்கள், தமது மதத்தில் மனவுறுதியுடன் அளவற்ற அபிமானங்கொண்டு, பொது ஜனங்கள் மூலமாகவும் இராஜாங்கத்தார் மூலமாகவும் பொருள் தேடிப் பலவாறு ஓய்யுழைத்து, மாதா கோயில்களைப் பலவிடங்களிலுங் கட்டி, மதப் பிரசாரத்தை விடாமுயற்சியுடன் செய்து, மதநூல்களை அழகாய் அச்சிட்டு இலவசமாக விநியோகம் செய்து, தாம் கோரிய முயற்சியைப் பயன்பட எல்லாத் துரையிலும் உழைக்க, இவ்வுலகில் எப்பிரயோஜனமும் அளிக்கக் கூடாத அத்தகைய அப்பாதிரிமார்களின் முயற்சிகளுக்கெல்லாம் மேலே கவர்னர் முதல் கீழே கூலியாள்வரையிலுள்ள அனைவரும் ஆதரவு காட்டி அப்பிரசாரத்தைப் பயன்படச் செய்யவில்லையா? ஆயுர்வேதம் அதினும் தாழ்மையானதென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பரிசுத்த காரியமான இக் கான்பரென்சுக்குக் காசு கொடுத்துதவும் கனவான் அரிதாயிருக்கிறதென்று காரியதர்சி எனக்கு எழுதியதைப் பார்க்கப் பரம ஸங்கடமாயிருந்தது.

தேசிய சாஸ்திராபிமானம்.

அபிமானமிருந்தால் அகிலமும் நியாயமாகத் தோன்றும். அபிமானிகள் இருந்தால் ஆயுர்வேதம் அஸாதாரணமான சாஸ்திரமென்பதை உலகத்தாருக்குக் காட்ட முடியும். நவீந நாகரீகத்திற்கு மார்க்கோப தேசிகளாகக் கருதப்படும் மேனாட்டார், தம் தேசத்தைச் சேர்ந்த விஷயமென்றால் அது மத விஷயமானாலும், மண்ணுலகில் உஜ்ஜீவிக்கும் விஷயமானாலும், மற்றெதுவானாலும் சரி, அனைத்தையும் நியமேந ஆதரித்து அபிமானிப்பதைப் பொதுவாகக் கடமையாகக் கொண்டிருக்கின்றனர். ஸமீபத்தில் வந்காளத்து ஸர்ஜன்-ஜெனரல் வெளியிட்டுள்ள வைத்திய இலாகா நிர்வாஹரிபோர்டை நம்மில் கவனித்துப் படித்தவர் அரிதாயிருப்பர். அத்தேசத்தில் ஐ. எம். எஸ். உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் முன்போல் ஸௌகர்யங்களை கவர்ன்மெண்டார் கொடுப்பதில்லையாம். அவ்விதம் உத்தியோஸ்தர்கள்தான் தேசத்திற்கு வெகு உபயோகமாயிருப்பார்களாம். இந்தியர்களை அதிகமாக்கிவிட்டால் வைத்தியத் திறமை தேசத்திற் குறைந்து விடுமாம். இத்தேச ஜனங்களாகும் கன்றுகள் கஷ்டப்படுவதைக் கண்டு இந்த ஓநாய் உருகிப் போகிறதாம். மேலும் இராஜதானி ஆஸ்பத்ரி தவிர வெளி ஜில்லாக்களிலுள்ள ஆஸ்பத்ரிகளில் ஜனங்கள் வைத்தியம் செய்துகொள்ள வருவதில்லையாம்; அதற்குக் காரணம் ஆயுர்வேத-யூனனி வைத்தியங்களில் பெருமபான்மையோருக்கு நம்பிக்கையிருப்பதும், ஆங்கில வைத்தியத்தில் நம்பிக்கை யில்லாமையுமேயாம். இதற்காக மேனாட்டு வைத்திய முறையை விசேஷத் திரவ்யச் செலவு செய்து வெளி ஜில்லாக்களிலும் விருத்தி செய்தால், பிறகு ஜனங்கள் ஆயுர்வேத வைத்தியத்தை ஆதரிக்கமாட்டார்கள் என்றும், அவர் தம் நாட்டு வைத்தியத்தினிடமும், தம் நாட்டு வைத்தியர்களிடமும் அவ்வளவு பலமான அபிமானம் காட்டி, நமது தேசியவைத்தியத்தை ஒழிக்கும் கருத்து கொண்டு ரிபோர்டு எழுதியிருக்கிறார், நமது இந்தியர்கள் ஆங்கில வைத்தியங் கற்று மிகச் சாமர்த்திய

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மாகப் பிணியாளிகளைச் சௌக்கியப்படுத்திய போதிலும், ஆங்கிலேயரா யில்லாமல் இந்தியர்களாயிருக்கிறார்கள் என்னும் எண்ணம் மனதில் அவர்களுக்குத் தோன்றியவுடனே, அவர்களுடைய திறமையை அங்கிகரிக்க நோகாகங் குன்றி விடுவது அவர்களுக்கு இயல்பா யேற்பட்டிருக்கிறது. தேசிய விஷயமான அபிமானம், நவ்ய நாகரீகத்திற்குக் குருமார்களான மேனாட்டாரிடம இவ்வளவு பலமாக இருக்கும் போது, நமது இந்திய ஸஹோதரர்கள். முக்கியமாக நவ்ய நாகரீகத்தில் நோக்கமுள்ளவர்கள் இந்த அபிமான விஷயத்திலும் அம்மேனாட்டாரைப் பின்பற்றி, நமது தேசிய வைத்திய முறையையும், நம் தேசிய வைதத்திடர்களையும் ஆதரிக்க வேண்டுமென்று மனவுறுதி செய்துகொள்ள வேண்டாமா? நமது சாஸ்திரத்தில் ஏதேனும் குறையிருப்பதாகக் கூறி வருவதிற் பயனில்லை. ஏதும் குறையில்லை யென்று நான் எடுத்துக் கூறிவிட்டேன். குறையிலலாத விஷயத்தை உலகத்திற் காண்பதும அரிது. அப்படி ஏதேனும் இருந்த போதிலும, "பிணிகளால் பீடிக்கப் படுபவருக்கு வேறு எதெது சுகம் அளிக்குமோ, அதை யெல்லாம முன்னுக்கு வருவதில் நோக்கமுள்ள நிபுணனை வைத்தியன் ஆதரித்து உபயோகிக்கலாம்." (யத் யத் ஸுகாய பார்த்தாநாம் வ்யாதிபி: பரிதருச் யதே. பிக்ஷூணா தத்தகாமீத்யம நிபுணேந புயுஷ்ணு) என்று சரகர், அவ்விதம குறைபுள்ளதையும் பூர்த்தி செய்துகொள்ள அவகாசம அளித்திருக்கிறார்.

இராஜகீய தேசிய வைத்தியஸ்தாபனம்.

நாம சுமார் இருபது வருடங்களுக்கு முன்பிருந்து செய்துவந்த பலமான பிரசாரத்தினுடையவும், கிளர்ச்சியினுடையவும் பயனாகச் சென்னையில் உஸ்மான் கமிட்டியேற்படவும, அக் கமிடிக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்ட நமது நண்பர் வைத்யரத்தினம ஜி. ஸ்ரீனிவாஸ மூர்த்தியவர்கள் மிகத் திறமை வாய்ந்த ரிபோர்டை எழுதி கவர்ன்மெண்டுக்கு அனுப்பவும், இப்போதைய தேசிய வைத்தியக் கல்லூரி கவர்ன்மெண்டாரால் ஸ்தாபிக்கப்பட நேர்ந்தது.

இந்தியவைத்திய முறைகளுக்கும் வைத்தியர்களுக்கும் ஏற்பட்ட பலக் குறைவினல் ஒரு புறமும், மேனாட்டு வைத்தியத்தினுடையவும், அவ் வைத்தியர்களுடையவும் தாக்குதலிலுள்ள பெரும்பலம் மற்றொரு புறமும் உத்ஸாஹ பங்கம் உண்டுபண்ணியதையும் பொருட்படுத்தாது, இந்திய வைத்தியக் கல்லூரியை கவர்ன்மெண்டைக் கொண்டு ஸ்தாபித்து, அதை நிர்விக்நமாக நிர்வஹித்து வருவதென்பது ஸாமான்யமான காரியமல்ல. அத்துடன் ஆயுர்வேத முறைக்காகவும், யூனானிமுறைக்காகவும் பிரத்யேகமாய் இரண்டு வேறு பட்ட வகுப்புகள் அமைக்கவேண்டிய பொறுப்புடன் " கண்டஸ்யோபரி பிடகா ஸம்வ்ருத்தா " என்கிற மாதிரி, புதிதான பெயருடன் கிளம்பிய சித்த வைத்தியம் என்கிற மற்றொன்றுக்கும் திட்டங்கள் ஏற்படுத்தி, அனேத்தையும் பல முட்டுக்கட்டைகளுக்கிடையில் ஒரு குடை நிழலின்கீழ் ஒன்றோடொன்று முட்டிக் கொள்ளாதபடி, முழு ஸ்தாபனத்தையும் நிர்வாஹம் செய்ய அவருக்குள்ள பொருப்பும் சிரமமும் எனக்குத் தெரியும். அவ்விதஸ்த்தானத்தை நிர்வஹிப்பதற்கான திறமையும் பொறுமையும் கடவுள் அவருக்கு அளித்திருப்பதைப் பற்றி நாம் களிப்புறவேண்டும். மேலும் நாம் சில சீர்திருத்தங்களை இன்னும் செய்யும்படி அவரைக் கேட்கும் போது, அவற்றைத் தொந்தரவு என்று எண்ணுதது ஸாத்யமானவற்றை அவர் நிறைவேற்றினல் தேசியவைத்திய விருத்திக்கு அது உபயோகமா யிருக்கும்.

(1) முதலாவது தேசிய வைத்தியசாஸ்திரப்பயிற்சிக்கு விசேஷ சலுகையும் பிரதானியமும் இருக்கும்படி பாடக்கிரமங்களையும், வைத்தியர்களையும் அங்கு அமைக்க வேண்டும். நான் ஏற்கனவே இது வரையிற் கூறியபடியும், ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸமூர்த்தியவர்கள் உஸ்மான் கமிட்டி ரிபோர்ட்டில் எழுதியுள்ளபடியும், இப்பொழுது மேனாட்டு வைத்தியர்களிடமிருந்து நம்மவர்க்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய விஷயம் சஸ்திரசிகித்ஸை ஸம்பந்தமான அனுபவஞ்ஞானம் ஒன்றுதான். ஆகவே தேசியவைத்தியமே

அங்கு தலைதாக்கி நிற்குமாறு வேண்டிய சீர்பாட்டைச் செய்ய சிரமம் அதிக மிராதென்பது என் கொள்கை.

(2) எல் ஐ. எம். வகுப்புக்கு ஆயுர்வேத நூல்கள் போதியவளவு ஏற்படுத்தவில்லை யென்பது பலருடைய கருத்து. அஷ்டாங்கஹ்ருதயம் முழுப்புஸ்தகமும், சரகஸம்ஹிதையில் சிகித்ஸாஸ்த்தானம் உட்பட சில ஸ்த்தானங்களும், ஸுச்ருதத்தில் சாரீரம் உட்பட வேறு சில பாகமும், மாதவநிதானம் பூர்த்தியாகவும், தன்வந்தரி நிகண்டு அல்லது இராஜ நிகண்டுவும், இரஸரத்தினஸமுச்சயமும், நாடீ விஞ்ஞானமும் பாடக்கிரமங்களில் ஒழுங்கு படுத்திச் சேர்க்கப்படவேண்டும். ஆரம்பவருஷத்தில் சார்ங்கதரஸம்ஹிதையும், நாடீவிஞ்ஞானமும், அஷ்டாங்க ஸுத்ரஸ்த்தானமும், நிகண்டுவும் நடத்தப்படலாம். இப்படிச் செய்வதால் எல். ஐ. எம். வகுப்பு ஆயுர்வேதத்தில் பலப்படும். நான்கு வருஷப்படிப்புக்கு நான் குறிப்பிட்டுள்ள விஷயங்கள் வெகு மிதமான முறையே.

(3) இந்த தேசிய வைத்தியஸ்தாபனத்தில் ஆஸ்பத்திரிகள் சேர்க்கப்பட்டிருப்பதால், அவற்றிற்காக ஔஷதங்களும் தயார் செய்யப்படுகின்றன. இங்கு தயார் செய்யப்படும் ஔஷதங்களையே பெரும்பாலும் லோகல் போர்டு-முனிஸிபல் வைத்தியசாலைகளும் அநுஸரித்துச் செய்ய வேண்டியிருப்பதால், இவ்வௌஷத ஜாபிதாவைச் சீர்திருத்தினல் பல காரியங்களுக்குச் சௌகரியமாயிருக்கும். சுமார் 225-ஔஷதங்கள் அநத ஜாபிதா பிரகாரம் வைத்திய சாலைகளுக்குத் தேவை. தர்மவைத்திய சாலைகளுக்கு அவ்வளவு ஔஷதங்கள் அவசியமா என்று யோசனை செய்ய வேண்டியது ஒரு விஷயம்; மற்றொன்று அவற்றைப் பொருக்கி யெடுத்த முறையையும் சீர்திருத்தினல் நன்மையாயிருக்கும்.

(4) தேசியவைத்தியர்களைப் பதிவு செய்யும் விஷயமாக எங்கு பார்த்தாலும் வைத்தியர்களுக்குள் பேச்சு

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

இருந்துவருகிறது. 1913-இல் மேனாட்டு வைத்தியமுறை பயின்றவர்களுக்கான வைத்தியப் பதிவு மஸோதா கொண்டுவரப்பட்டபோதே பண்டித கோபாலாசார்லுவுடன் கானும் வேறு சிலருமாக அவ்வித மஸோதா யோக்யதையுள்ள ஆயுர்வேத-யூனானிவைத்தியர்களுக்கும் அத்தியாவச்யகம் என்று கூட்டங் கூடி கிளர்ச்சி செய்திருக்கிறோம். அதே வருஷத்தில் பப்ளிக் ஸர்வீஸ்கமிஷன் முன்பாக ஸர் பர்டே லூகிஸ் ஸாக்ஷ்யம் கொடுத்தபோது கூறிய விஷயமும் எனக்கு நினைவுக்கு வருகிறது. அவர் மொழிந்ததாவது:— "ஒரு யோக்யதையும் இல்லாதவர்கள் இக்காலத்தில் டாக்டர்கள் என்று சொல்லிக்கொண்டு அட்டஹாஸம் செய்கிறார்கள். அதைத் தடுக்க பம்பாயில் செய்தது போலவே எல்லா மாகாணங்களிலும் வைத்தியப்பதிவுசட்டம் ஏற்படுத்திவிடவேண்டும்." "பிஷக்சத்மப்ரதிச்சந்நா: கண்டகபூதா லோகஸ்ய ராஜ்ஞாம்ப்ரமாதாச்சரந்தி ராஷ்ட்ரேஷு" என்று குவைத்தியர்கள் இராஜாங்கத்தாருடைய கவனக் குறைவாலேயே தேசங்களில் ஜனங்களுக்குத் தொந்தரவு செய்யக்கூடியவாறு திரிகிறார்கள் என்று சரகர் கூறுகிறார். இவ்விதமே ஸுச்ருதரும் சொல்லுகிறார். ஸாமர்த்யமும் நல்ல ஞானமும் உள்ள அநுபவவைத்தியர்களைப் பாதிக்காதபடி இவ்வைத்தியப்பதிவு முறையை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

(5) தேசிய வைத்திய சாஸ்திராராய்ச்சிக்கு அக்கல்லூரியில் தனியேற்பாடு செய்யவேண்டும்.

நவீந நாகரிகத்திலுள்ள சில தீமைகள்.

ஆத்மார்த்த-தேஹார்த்தங்களை அளிப்பதற்கு ஆதாரமான ஆயுர்வேத சாஸ்திரத்தை ஆதரித்து விருத்தி செய்வது, அச்சாஸ்திரம் கற்றோரின் க்ஷேமத்தைக் கருதி அவசியமானதைச் செய்வது ஆகிய உத்தேசத்துடன் இவ்வைத்திய ஸபை கூடுகிறது. ஆகவே இச்சபைக்கு வந்துள்ள சிலரேனும் இவ்வுபந்யாஸாதிகளைக் கேட்டுவிட்டு, மேலே

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நடக்கவேண்டியதில் சிரத்தை கொள்ளாது வீடு சென்றால் வீண் முயற்சியாகவே இக்கூட்டம் முடியும். முக்கியமாக ஆடம்பரமற்ற வாழ்க்கையில் நோக்கமாயிருத்தல் அவசியம். பொதுவாக உலகமும், முக்கியமாக இந்தியாவும், அதிலும் விசேஷமாகத் தென்னிந்தியாவும் பொருளாதாரக் கஷ்டத்தில் போராட வேண்டிய கடுங்கஷ்டமான இந்நிலைமையில் அதிகச் செலவில்லாமல் நடந்துவந்த ஆசார-விவஹாரங்களை விடுத்து, மேனாட்டு நாகரிகமென்கிற மோஹக்குழியில் நமது ஜனங்கள், விசேஷமாக நம் வாலிபர்கள் வீழ்ந்து வீண் செலவு செய்கிறார்கள். ஒரு சிறு விஷயத்தை உதாரணமாகக் குறிப்பிடுகிறேன். எனக்குத் தெரிந்து நான் சிறுவனாயிருக்கும் போது ஜனங்கள் மாவிலைகளையும், கையாந்தகரையையும், ஆல்-வேல்-வேம்பு முதலியவற்றின் குச்சிகளையும் காலையிற் கொண்டுவந்து பல் துலக்கிக் கொள்வார்கள். இதற்காகச் செலவுமில்லை, அவர்கள் அப்படிச் செய்துவரும்போது தந்த வியாதிகளாலும் இக்காலத்தைப்போல் பீடிக்கப்பட்டவர்களுமன்று. இப்பொழுதோ சீமையிலிருந்துவரும் அதிக விலையுள்ள தந்தசூலிகைகளும், டூத்பேஸ்டு என்கிற தந்தக்களிம்புகளும் ஏராளமாக இங்கு இறக்குமதி செய்யப்பட்டு, சிறுவர்முதல் கிழவரீறாக, ஏழை திரவியவந்தர்கள் என்கிற பேதமுமில்லாமல் அனைவரும் அவற்றை வாங்கியுபயோகித்து வருகிறார்கள். நமக்கு மேனாட்டு நாகரிகத்திலுள்ள மோஹத்தின் பயனாக அவர்களது தந்தசூலிகை-தந்தக்களிம்பு முதலிய சாமான்கள் வேண்டிய வளவு நம்மால் செலவாவதுடன், இப்பொழுது சிறுவர்கள் கிழவர்கள் அனைவரும் பல் நோய்களால் வருந்துவதும், இவர்களுக்காக நாடெங்கும் கணக்கில்லாத பல் வைத்தியர்கள் நிரம்பி, அவர்களுக்கும் நமது இந்நவ்ய நாகரிக வழக்கத்திலில் விசேஷ வரும்படியும் ஏற்படச் செளகரியம் உண்டாய்விட்டது. ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத இயற்கையிற் கிடைக்கும் நிர்மலமான ஜலத்தை விட்டுவிட்டு, வீண் செலவுசெய்து பலர் வாய் வைத்த

லீஸாக்களிலடைக்கப்பட்ட ஏரேடெட் வாடர் என்கிற பானங்களும், வேறு பல காரமான பானவகைகளும் வாங்கி தாராளமாகப் பருகப்படுகின்றன. அமுதம் போன்ற நமது பசுவின் பாலை விட்டு விட்டு, வெளி நாடுகளிலிருந்து வரும் புட்டிப்பால்கள் நாட்டுப்புறங்களிலெல்லாங் கூட இன்றியமையாச் சரக்குகளைப்போல் வந்து குவிந்து விட்டன. வீடுகளிற் செய்யும் விதம்விதமான பக்ஷணங்களுக்குப் பதிலாக வெளிநாட்டிற் செய்து அனுப்பப்படும் பிஸ்கத்துகள் பெட்டிப் பெட்டியாக வாங்கப்படுகின்றன. கொழும்புக் கான்பிரென்ஸில் ஸர் பி. ராமநாதன் அவர்கள் பேசியபோது, 1857-இல் பிரிடிஷ் துரைத்தனம் இந்தியாவை நேர்முகமாக ஆளக் கை வைத்தது முதலாக, அவர்களுடைய பாஷையை இத் தேசமெங்கும் இராஜாங்க பாஷையாகச் செய்ய யத்தனிக்கவே, அவர்களுடைய நடையுடை முதலியதை நாட ஜனங்கள் முயலவே, நமது தேசத்து அரிய ஆசாராநுஷ்டானங்களும், ஆயுர்வேதம் முதலிய அரிய சாஸ்திரங்களின் பெருமையும் அலங்கோலமாகப் போகத் தலைப்பட்டதென்று அவர் முறையிட்டுச் சொல்லியிருக்கிறார். ஆங்கிலநாகரீகம், ஆபிரங்காலமாயிருந்த ஆயுர்வேதம் அழியக் காரணமானதுபோல், ஆரோக்கியந் தரும் நமது அநாதி ஆசாரங்களும் நமது நாட்டு நாகரிகமும் அலக்ஷியம் செய்யப்பட்டு, எல்லாம் தலைகீழ்ப் பாடமாகத் திரும்பிவிட்டது. நமது ஆண்பிள்ளைகள் தற்கால நாகரீகத்தில் மோஹங்கொண்டுத் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டால், மிகப் புனிதமென்றும் பெண்களின் இயற்கை யழகுக்கு இன்றியமையாததென்றும் புகழ்ந்து வரும் கூந்தலைத் தாமும் ஆண்பிள்ளைகளுக்கு எவ்விதத்திலும் குறைந்தவரல்லரென்பதைக் காட்டிக்கொள்ளக் கத்தரித்துக் கொள்ளத் துணிந்து விட்டதைப் பார்த்துவருமபோது, ஸாங்கிகச் சீர்திருத்த மென்கிற இச்சீர்கேடான இம்மோஹாந்தகாரப் பிரவ்ருத்தி நமது தேசத்தின் தைவீகச் சிலங்களில் ஓர் இம்மியையும் இனி மிச்சப்படுத்தாதென்று நிச்சயிக்க வேண்டியிருக்கிறது. ஆகிலும் ஆர்ய தர்

மங்களுக்கும் ஆசாரங்களுக்கும் சிலங்களுக்கும் ஆதாரமாயுள்ள மேன்மக்களில் ஒருவராவது மிஞ்சி யிருக்கும் வரையில், நமது பிராசீன நாரீகத்தையும், நமது சாஸ்திரத்தையும், முக்கியமாக நமது வைத்திய சாஸ்திரத்தையும் நவீனக் கொள்கையாகும் கரையானுக்கு இறையாகக் கொடுக்கத் துணியோம். ஆகவே கனவான்களே, கூடிய வரையில் நமது வேதமார்க்கத்தையும், ஆயுர்வேதமுறையையும் ஆதரித்து, அவற்றிற் கூறியுள்ள நல்லுபதேசங்களை நாடி, நவீன நாகரீகத்தாலான நஷ்டங்களையும் சிலக்கேடுகளையும் நீக்கிச் சீர்படுத்திக் கொள்ளவும், அதனால் நமது ஆரோக்கியத்தையும் ஆயுளையும் அபிவிருத்தி செய்யவும் பிரதிஜ்ஞை செய்துகொண்டு, நமது பூர்வாசார்யர்களிடம் பூர்ணமான கிருதஜ்ஞதையைக் காட்டுவீர்களென்று நமது இந்திய ஸஹோதரர்களையும், அத்தகைய ஆற்றலை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று அகிலலோக சரண்யனான ஈச்வரனையும் வேண்டிக்கொள்கிறேன்.

உப ஸம்ஹாரம்.

கனவான்களே, எனது உபந்யாஸத்தை உபஸம்ஹாரம் செய்கையில் மற்றொரு முக்கியமான வேண்டுகோளைச் செய்ய விரும்புகிறேன். சென்னையில் சுமார் இருபது வருடங்களுக்குமுன் நான் தென்னிந்திய ஆயுர்வேத-யூனி வைத்திய ஸங்கம் என்கிற ஸபை யொன்று ஏற்படுத்தி (அதற்கு முன் வைத்திய ஸபை ஒன்றும் கிடையாது), அதன் காரியதர்சியாயிருந்து, பலமான பிரஸங்கங்களும் கிளர்ச்சிகளும் சுதேச வைத்தியாபிவ்ருத்திக்காக நிகழ்த்தியதில், அதன் பலனாக உஸ்மான் கமிட்டி கவர்ன்மெண்டாரால் நியமிக்கும்படி யாயிற்று. அதிலிருந்து சென்னையில் கவர்ன்மெண்டார் தேசிய வைத்திய கலாசாலையும் அதைச் சேர்ந்தாற்போல் ஆதுராலயங்களையும் ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள் என்றும், அது இனிது நடத்தப்படவேண்டிய வேறு சில சீர்திருத்தங்களைச்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

செய்யவேண்டுமென்று அதன் தலைவரைக் கேட்டுக் கொள்வதாகவும் முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன். பிறகு நிகில பாரதாயுர்வேத மஹாமண்டல-வித்யாபீடங்களுக்கு அச் சபையார் என்னைப் பிரதான காரியதரிசியாகத் தேர்ந்தெடுத்த பிறகு, வியோனில் அம் மஹாமண்டலக் கான்பரென்ஸை நடத்தத் தைவாநுகூலம் எனக்குக் கிடைக்கவே, 1924வதில் கொழும்பு நகரத்தில் இங்கிருந்து சுமார் 150 பிரதிநிதிகளுடன் சென்று, இந்திய மஹாமண்டலக் கான்பரென்ஸை நடத்தி, அத் தீவில் பலவிடங்களிலும் பிரசாரங்களை ஏற்படுத்தவே, கான்பரென்ஸுக்கு வந்திருந்த ஜனப் பிரதிநிதிகள் அவ்வருஷமே அவ்விடத்தில் சட்டஸபையில் தீர்மானங்கொண்டுவந்து, இந்தியவைத்திக் கலாசாலை ஸ்தாபிக்கும்படி அத்தீர்மானத்தை நிறைவேற்றி, கான்பரென்ஸை நடத்திய அடுத்த வருஷம் முதற் கொண்டே பெரிய கலாசாலைப ஸ்தாபித்துநிர்வஹித்துவருகிறார்கள் என்பதைக் கேட்க நீங்கள் ஸந்தோஷப்படுவீர்கள். வியோன் தீவினர் அப்பொழுது என்னிடம் காட்டிய அன்பையும், அவர்கள் அந்த க்ஷணமே ஆயுர்வேதமுறையை தம் தேசத்தில் வேரூன்றச் செய்து கலாசாலை ஸ்தாபிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டதையும் கருதும்போது, அவர்களுக்குச் செய்யக்கூடிய கைம்மாறு யாதென்று யோசிக்க வேண்டியிருந்தது. அதற்கு அடுத்தபடியாகத் தென் கோடியி லிருந்து இந்தியாவின் வடகோடியில் ஹிமாலயத்திற்கருகில் எனது நோக்கம் பறந்தோடியது. அம் முயற்சியினால் 1925-இல் ஹரித்வாரத்தில் அகிலபாரத மஹாமண்டலத்தின் 16-ம் ஸம்மேளனம் நடத்தப்பட்டதில், ஐக்கிய மாகாணத்தார் காட்டிய ஊக்கத்தை நான் உறைத்திட முடியாது. அதன் பயனாக, ஐக்கிய மாகாணக் கவர்மெண்டார், ஜனப் பிரதிநிதிகளின் தூண்டுதலால் ஆயுர்வேத யூனி வைத்தியக்கமிட்டியை நியமித்து, அவ்விடத்திலும் அவர்களது சிபார்சாலே தேசிய வைத்திய கலாசாலை நடந்துவருகின்றது. இத் தகவல்களெல்லாம் வரிசையாக வீணில் வர்ணிப்பதாகக்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கொள்ளாமல், எனது நோக்கத்தை ஒருவாறு நீங்கள் ஊகிக்க முடியும். ஆகிலும் அதை விளங்கக் கூறி வேண்டுதலைக் குறிப்பிட்டுவிடுகிறேன். அறிவிலும் பொருளிலும் நான் எளியோனாயினும், நான் பொதுவிஷயத்தைப்பற்றி நாடிப்போன இடங்களிலெல்லாம் கோரிய பலன் கடவுளருளால் ஆங்காங்கு நிறைவேறி யிருக்கிறது. அதிலும் நமது மதாசார ஒழுக்கங்களினும் சாஸ்திரங்களினும் பெரிதும் மாறுபட்ட இனத்தாரான ஹிம்மள தேசத்தவர் சிறிதும் தயங்காது நமது தேசிய வைத்தியக் கான்பரென்ஸை வெகு ஆடம்பரமாக நடத்தி, நமது முயற்சியை முற்றிலும் ஸபலமாகச் செய்திருக்கிறார்கள். இபபொழுது தென்னிந்தியாவுக்குத் திலகம் போல் விளங்குவது திருச்சிராபுரம். இங்கு இச்சமயம் வந்து இச்சேவை செய்ய நான் கொடுத்து வைத்தேன். நான் சென்ற விடங்களிலெல்லாம் செய்த ஸேவை ஈசனருளால் இனிது பலனளித்தது போல் இங்கும் ஆயுர்வேத பாடசாலையோ, ஆயுர்வேதாஸ்பத்ராலயமோ ஆரம்பிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி முனிஸிபாலிடிகளும், லோகல் போர்டுகளும் யோசித்துக் கூடிய சீக்கிரத்தில் அவ்வித ஸந்தர்ப்பம் ஏற்பட முனிஸிபல் லோகல் போர்டு அங்கத்தினர்கள் முழு சிரத்தையுடன் முயற்சியெடுத்து, நமது தேசிய வைத்திய சாஸ்திரத்தையும், தேசிய க்ஷேமத்தையும் விருத்தி செய்யவேண்டுமென்பது முடிவில் எனது விநயபூர்வகமான விஞ்ஞாபனம்.

ஆஸ்தாம் நாம புராதனத்வம் அதவா புண்யத்வ
மந்யாத்ருசம்
பைஷஜ்யாகம ஸந்ததேர் புவி வயம் பங்கம் ந பர்தும்
க்ஷமாः.
ஆரோக்யஸ்ய விவ்ருத்திம் ஆமயகணப்ரத்வம்ஸமப்
யாதிமைः
ஆலோச்யாஹிதம் அஸ்மதீயஸஹிதே சாஸ்த்ரம் கதம்
சீர்யதாம்||

ஜீவாதுர் ஜகதாம் அமாநுஷகலே லத்யர்த்யாமபிக்யாம்
பிஷக்
வித்யாஸாத்ய கலேர் விலாஸவசதோ தீநாத்தசாமச்நுதே.
ஸா பூர்வம் புஷி வாக்படாதிபிஷஜாம் ச்ரேஷ்டைஸ் ஸமுத்
தாபிதா
பூயோ பூதிமவாப்ய வைத்யகஸபாஸம்பாவிதா ஜ்ரும்ப
தாம்॥

மனோரஞ்சினி அச்சுக்கூடம், சேனகார்பேட்டை, சென்னை.